www.padippakam.com

MAHAJANAN PARIS
1993
MAHAJANAN PARIS

தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி


பழைய மாணவர் சங்கம்
பாரிஸ்

# மகாஜனன்

ஆண்டு மலர்
1993

படிப்பகம்

www.padippakam.com



**எங்கள் ஸ்தாபகர்**
பாவலர். தெ. அ. துரையப்பாபிள்ளை

படிப்பகம்

www.padippakam.com



# மகாஜனன்
# பாரிஸ் - மலர்

**1993**

எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது ஆண்டு நிறைவின் நினைவாக, இம்மலரினை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தெல்லிப்பழை, மட்டக்களப்பு, கொழும்பு, லண்டன், கனடா என விரிந்த எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆறாவது கிளை பாரிஸ்.

இந்த இரண்டாண்டு காலத்திற்குள் நாம் எண்ணியவை பல, செய்தவை சில. இன்னும் செய்யவேண்டியவை பல பல.

எமது தாய் நாட்டின் அசாதாரணச் சூழலிலும், மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப் படாது தொடர்வது ஓரளவுக்கேனும், மனதுக்கு ஆறுதலைத் தருகின்றது.

பாடசாலைக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டும், குடும்பங்கள், வீடுவாசல்களை விட்டுத் துரத்தப்பட்டும், வாழ்க்கையே போராட்டமாகி, இன்னோரென்ன துயரங்களை அனுபவித்துவரும் நிலையிலும், வடக்கு கிழக்கு மாணவர்களது சாதனைகள் உலகையே அசரவைப்பன.

இந்தவகையில், கடந்த ஆண்டு, "தரப்படுத்தல்" என்ற கொடிய தடையையும் மீறி முப்பதிற்கும் மேற்பட்ட எங்கள் கல்லூரி மாணவர்கள் பல்கலைக் கழகம் தெரிவாகியிருப்பதும், ஒரு மாணவி 4 பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றிருப்பதும் எம்மையெல்லாம் பெருமை கொள்ள வைக்கின்றது.

"இன்றைய மாணவனே நாளைய உலகம்"

வெளிநாடுகளில் ஓரளவுக்கேனும் வசதியாக வாழ்ந்து வரும் நாம் நாளைய உலகம் சரியான முறையில் சிருஷ்டிக்கப்பட எம்மாலான பங்கினை ஆற்றவேண்டியது கடமை.

நொந்து போன மாணவர்களுக்குத் தாராள உதவி வழங்கியும், முயற்சியுடைய மாணவரை மேலும் உற்சாகப்படுத்தியும், எவ்வகையிலும் மாணவர்களது கல்வி பாதிக்கப்படாதவாறு, முடிந்தவரை பாடுபடுவோம் !

**இதழ் ஆலோசகர் :**
திருமதி. ப. பாலசிங்கம்

**இதழாசிரியர் :**
திரு. சின்னத்துரை மனோகரன்

**மலர்க்குழு:**
திரு.க.கனகேஸ்வரன்
திரு.சி.ராதாகிருஷ்ணன்

**விளம்பர நிர்வாகம்:**
திரு.யோ.சிவலிங்கம்
திரு.அ.ஜெயக்குமார்
திரு.பொ.யோகராஜா
திரு.ச.சுதர்சன்

கணணி
**எழுத்துப் பதிவு :**
திரு. இ. ஸ்ரீஸ்கந்தராஜா

**வடிவமைப்பு :**
புவனன்



படிப்பகம்

www.padippakam.com



# அதிபரின் ஆசியுரை

பிரான்ஸ் நாட்டிலுள்ள மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தினர் ஆண்டு மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தங்களின் சங்கம் அமைக்கப்பட்டதிலிருந்து தாங்கள் கல்லூரிக்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியது. எங்கள் கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பாக எங்கள் மாணவர்களின் முன்னேற்றத்தில் தாங்கள் காட்டிவரும் அக்கறை எம்மனைவரையும் கவர்ந்திருக்கிறது. தங்களின் உதவியினால் மூன்று ஆசிரியர்கள் தலா ஆயிரம் ரூபா வேதனம் பெற்று கல்வி கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எமது பாடசாலையில் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவு நீங்கியுள்ளது. மாவட்ட மட்டத்தில், கோட்ட மட்டத்தில் வெற்றிவாகை சூடும் மாணவர்களுக்கு தாங்கள் காட்டி வரும் ஆதரவை எம்மால் மறக்க முடியாது. அண்மையில் யாழ் மாநகரசபை நடத்திய பேச்சு பண்ணிசைப் போட்டியிற் தங்கப்பதக்கம் பெற்ற நான்கு மாணவர்களுக்கும் தாங்கள் பரிசாக வழங்கிய நாலாயிரம் ரூபா (ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா) இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. உங்களின் தொடர்ச்சியான ஆதரவு எங்களுக்கு மேன்மேலும் கிடைக்க வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கல்லூரி தற்பொழுது இடம்பெயர்ந்து இயங்குகின்ற நிலையுலும் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். 1992 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் செல்வி.தமிழினி வாமதேவன் 4 பாடத்திலும் "A" (அதிவிசேட சித்தி) பெற்றதுடன் மொத்தப் புள்ளியாக 356 புள்ளிகளையும் பெற்று மகாஜனாச் சரித்திரத்தில் ஒரு சாதனை படைத்துள்ளார். 1989 க.-பொ.த. சாதாரண பரீட்சையில் 3 மாணவர்கள் 8 பாடங்களிலும் "D" (அதிவிசேடசித்தி) பெற்று யாழ் மாவட்டத்திலே எங்கள் பாடசாலையை முதன்மை நிலைக்கு உயர்த்தியுள்ளனர். விளையாட்டுத்துறையில் நாம் சாதனை படைத்திருக்கின்றோம். கோட்ட மட்ட மெய்வல்லுனர் போட்டியில் தொடர்ந்து 5 ஆண்டுகள் (1989, 1990, 1991, 1992, 1993) முதலாம் இடத்தைப்பெற்று சாம்பியனாகத் திகழ்கின்றோம். 19 வயதின் கீழ் பெண்களின் வலைப்பந்தாட்டப் போட்டியில் கோட்டத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுக்ள் முதலாம் இடத்தையும் யாழ் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றிருக்கின்றோம்.



எங்கள் பாடசாலையை மீண்டும் பழைய இடத்துக்குக் கொண்டு செல்வதற்கு பெரும் சிரமம் எடுக்கவேண்டியுள்ளது. தளபாடங்கள் பலவற்றை நாம் திரும்பப் பெறவேண்டியிருக்கிறது. வெளி நாடுகளிலிருக்கும் பழைய மாணவர்களின் உதவியைப் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

நீங்கள் வெளியிடவிருக்கும் ஆண்டு மலர் சிறப்பாக அமைய என் நல்லாசிகளைக் கூறி முடிக்கின்றேன்.

அன்புடன்
- க.நாகராசா-



படிப்பகம்

www.padippakam.com



## தலைவர் உரை

### என்நன்றி கொன்றார்க்கு.......

இரு வருடங்களுக்கு முன்பு கிடைத்த தொலைபேசி அழைப்பு ஒன்று மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.
அமைதியற்ற சூழலில் நிலையற்ற வாழ்வில் அவதியுறும் மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அல்லலைக் கேள்வி யுற்ற முன்னாள் மாணவர்கள் அன்னையின் துன்பம் துடைக்கவேண்டி தாங்கள் ஒரு பழைய மாணவர் சங்கத்தை அமைக்க விரும்புவதாகக் கூறினர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற கொள்கையுடையவர்களாக தங்கள் திட்டங்களை ஆவலுடன் வெளியிட்டனர். தங்களிடம் உள்ளதில் பிறரும் நன்மையடையவேண்டும் எனும் பெரு நோக்குக் கொண்டனர். கல்லூரியில் மாணவர்களின் மனோதத்துவ நிலையையும், அகபுறச் செயல்பாடுகளையும் கண்ட நான் அன்று அவர்களின் செய்நன்றி மறவாத அன்புள்ளங்களை அறிந்து கொண்டேன்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஓராமாண்டு ஐப்பசித் திங்களில் பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது. கல்லூரியின் வளர்ச்சியும், மாணவரின் கல்வி முன்னேற்றமும் முக்கிய செயற்பாடு களாகக் கொள்ளப்பட்டன. மகாஜனாச் சிற்பி அமரர். திரு. T. T. ஜெய ரத்தினம் அவர்கள் கல்லூரியை அசையாத மலைபோல நிற்கக்கூடிய தாக அத்திபாரத்தை அமைத்திருந்தார். ஆனால் அது தற்போது பல பகுதிகள் சேதமடைந்திருக்கும் நிலை எம்மை மீளாத் துயரில் ஆழ்த்து கின்றது. தந்தையின் கல்லூரி தாரணியில் ஓங்கவேண்டுமென்று உழைத்தார். சீரிய நோக்கும், சிரித்த முகமும், நேரிய பார்வையும், நெகிழ்ச்சி நெஞ்சம், கடின உழைப்பும், செயலில் திறமையும் இவரின் வெற்றிக்கு காரணமாயின. பின்தங்கி நின்ற கிராம சமுதாயத்தில், "இலங்கையிலே ஒரு சிறந்த கல்லூரி" என்ற இடத்தைப் பெற்று பல்க லைக்கழக பேராசிரியர்களை, வைத்திய கலாநிதிகளை, பொறியியல் நிபுணர்களை, சட்டத்தரணிகளை, விஞ்ஞான மேதைகளை, கலை ஞானிகளை, தொழில் நுட்ப வல்லுனர்களை உருவாக்கிய பெருமை மகாஜனாக் கல்லூரிக்கு உரியதாகும். மகாஜனா கல்வியில் மட்டுமல்ல கலை, சங்கீதம், விளையாட்டு ஆகிய துறைகளிலும் முன்னணியில் நின்றது.



நாட்டிலேற்பட்ட அமைதியின்மை காரணமாக தற்போது இடம்பெயர்ந்து இணுவில் மத்திய கல்லூரியில் பகுதி நேரப் பாடசாலையாக நடக்கின் றது. தமக்கென இருந்த சகல வசதிகளையுங் கொண்ட ஆய்வு கூடங் களையும் வாசகசாலை வசதிகளையும் விட்டுப் பல கஷ்டங்களை எதிர் நோக்குகின்றது. ஆசிரியர் பற்றாக்குறை காரண்மாக, மாணவர்களின்



படிப்பகம்

www.padippakam.com



வசதிக்கட்டணத்திலிருந்து வேதனம் பெறும் தாவரவியல், நடனம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய மேலதிக ஆசிரியர்களுக்கு 1992ம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கம் 1992 சித்திதை மாதம் தொடக்கம் சம்பளப் பணம் வழங்கி வருகின்றோம். அதிபரின் வேண்டுகோளின் படி 'Generator' "Photostat Machine" ஆகியன வாங்குவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைதியற்ற சூழலில் படிக்க ஒளியின்றி வயிறார உண்ண உணவின்றி இருந்தும் மாணவர்கள் கல்வி, விளையாட்டுத் துறைகளில் பாராட்டுதற்குரிய பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். யாழ் மாநகரசபை நடத்திய பேச்சு, சமய அறிவு, பண்ணிசைப் போட்டிகளில் நான்கு மாணவர்கள் தங்கப் பதக்கம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு நிறுவியவர் நினைவு விழாவன்று வழங்குவதற்காக பணம் பரிசுகள் அனுப்பியுள்ளோம். 1992ம் ஆண்டு நடந்த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் செல்வி. தமிழினி வாமதேவன் 4A பெற்று கல்லூரிக்கு புகழைத் தேடிக் கொடுத்துள்ளார்.

நிலையற்ற வாழ்வில் தினமும் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் இளம் உள்ளங்களுக்கு எப்பொழுதுதான் அமைதி ஏற்பட்டப் போகின்றதோ தெரியாது. இவர்களின் துன்பந் துடைக்க பழைய மாணவர் சங்கங்களே உறுதுணையாக விளங்கவேண்டும்.

திருமதி. ப. பாலசிங்கம்

## நான்கு தங்கப்பதக்கங்கள்

யாழ். மாநகரசபை அண்மையில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, சமய அறிவு, பண்ணிசைப் போட்டிகளில் யா/ தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி நான்கு தங்கப்பதக்கங்களை பெற்றுக்கொண்டது.

பேச்சுப் போட்டி - மேற்பிரிவில் முதலாம் இடம் செல்வி வினோதினி விஜயரத்தினம்.

சமய அறிவு - மேற்பிரிவில் முதலாம் இடம் செல்வன் கந்தசாமி முகுந்தன், கீழ்ப்பிரிவில் முதலாம் இடம் செல்வி சுவர்ணா நாகேந்திரம்.

பண்ணிசை - மத்திய பிரிவில் முதலாம் இடம் செல்வி சிவரதி சிவபாலன் (சிவரதி) ஆகியோரும் தங்கப்பதக்கங்களைப் பெற்று கல்லூரிக்கு பெருமைதேடிக் கொடுத்தனர்.

**ஆர். ரி. சுப்பிரமணியம்**



சுவர்ணா



வினோதினி



முகுந்தன்



சிவரதி



படிப்பகம்

www.padippakam.com



# மகாஜனாவின் இன்றைய நிலை

24. 06. 1993 வியாழக்கிழமை,
இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற
தெல்லிப்பழைமகாஜனக்கல்லூரி
நிறுவியவர் நினைவு தினமும்
பரிசளிப்பு விழாவும் வைபவத்தில்
கல்லூரி அதிபர் திரு. க. நாகராசா அவர்கள்
சமர்ப்பித்த அறிக்கை.

நாங்கள்
விரட்டியடிக்கப்பட்டபோது
ஆதரவளித்த
அளவெட்டி அருணோதயாக்கல்லூரிக்கும்,
பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரிக்கும்,
இணுவில் மத்தியகல்லூரிக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

## அதிபர் அறிக்கை

இன்று ஆனித்திங்கள் 24ம் நாள். கல்லூரி வரலாற்றில் இந்நாள் ஒரு பொன்னாளாகும். இன்று இக்கல்லூரியை நிறுவிய பெருமகனுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்கும் முகமாக நாங்கள் இங்கு கூடியிருக்கின்றோம். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணப்பகுதியில் பெரியதோர் சைவ மறுமலர்ச்சி இயக்கம் உதயமாகியது. அந்த இயக்கத்தின் கிளையாகவே மகாஜனா அமைந்தது. சைவக் கல்வி என்னும் அறிவுச் சுடரைக் காத்துப் பேணும் பெரும் தூண்டுகோலாகவே மகாஜனா என்றும் திகழ்ந்து வருகின்றது. மக்களின் பொருளாதார விமோசனத்திற்குக் கல்வி என்னும் பேரொளி வேண்டுமென்பதே இக் கல்லூரியை நிறுவியவரின் சீரிய நோக்கங்களில் ஒன்று. அந்த நோக்கம் குறைவின்றி நிறைவேற இக்கல்லூரி இனிது சேவை செய்கின்றது. எம் மூதாதையர்கள் பாடசாலைகளை அமைத்து கல்விமூலம் சமூகம் முன்னேற்றமடைய முயற்சி செய்தனர். எங்கள் கல்லூரியை நிறுவியவரும் அதே பெரும் சேவையில் ஈடுபட்டார். அதற்காக அவர் காட்டிய வீரம், தியாகம் போற்றத்தக்கது. அவரின் தியாக சிந்தையே இன்று எம் கல்லூரியை அதி உன்னத நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

இன்று எங்கள் பிரதம விருந்தினராகச் சமூகந் தந்துள்ள யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத் தலைவரும் சிரேஷ்ட கல்வியியல் விரிவுரையாளருமான திரு. சபா ஜெயராசா அவர்கள் எங்கள் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவராவர். இணுவில் கிராமத்தில் ஒரு சிறந்த கல்விமானாகத் திகழும் இவர் கல்வி இயலில் பல தலைசிறந்த நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஆசிரியராக, விரிவுரையாளராக பின்னர் நுண்கலைக் கழகத் தலைவராகப் பதவி உயர்ந்திருக்கும் இவர் தன் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறிய ஒருவர் என்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இன்று எங்கள் விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகைதந்திருக்கும் இவரை வருக வருகவென வரவேற்கின்றோம். இவருடன் இவரின் பாரியாரும் வருகை தந்திருப்பது எமக்குப் பேருவகை அளிக்கிறது.

யாழ் பல்கலைக் கழகப் பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. கந்தையா அவர்கள் நினைவுப் பேருரை ஆற்ற வந்திருப்பது எமக்கெல்லாம் உவகையளிக்கின்றது. எமது கல்லூரியின் பழைய மாணவரான இவர் படிக்கும் காலத்தில் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் ஒருங்கே சிறந்து விளங்கினார். கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறைகொண்டுள்ள இவர் காலத்துக்குக் காலம் கல்லூரியின் வளர்ச்சி பற்றிக் கேட்டறிந்து ஆவனசெய்வதற்குத் தயங்குவதில்லை. உங்கள் வாழ்க்கை எங்கள் மாணவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எங்கள் அழைப்பை அன்புடன் ஏற்று வருகைதந்துள்ள உங்களை அன்புடன் வருக என வரவேற்கின்றேன்.

மாணவர் தொகை

எமது கல்லூரியிற் தற்போது 1604 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளாக நாட்டில் ஏற்பட்ட சம்பவங்கள் காரணமாக மாணவர்கள் சிலர் இடம் பெயர்ந்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



எமது கல்லூரியும் மூன்று பிரிவுகளாக வெவ்வேறு இடங்களில் இயங்கி வருகின்றது. நாம் ஆரம்பத்தில் இடம் பெயர்ந்து வந்தபோது பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் பின்னர் இணுவில் மத்திய கல்லூரியும் எங்களுக்கு இடம்கொடுத்து உதவியது. இக் கல்லூரிகளின் அதிபர்களுக்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

உயர்தர விஞ்ஞானப் பிரிவை நிரு கல்வி நிலையத்தில் இயங்கி வருகின்றோம். அக்கல்வி நிறுவன உரிமையாளருக்கும் எமது நன்றி உரியது. நாட்டில் அமைதி நிலைமை ஏற்படும்போது மாணவர் தொகை மேலும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

| வகுப்புக்கள் | மாணவர் தொகை |
|---|---|
| ஆண்டு : 1 - 5 | 232 |
| ஆண்டு : 6 - 11 | 968 |
| ஆண்டு : 12 - 13 | 404 |
| மொத்தம் | 1604 |

## ஆசிரியர்கள்

எமது கல்லூரியில் 75 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். இவர்களில் இருவர் கழக ஆசிரியர்கள். மூவர் பிரான்ஸ் நாட்டிலுள்ள எமது பழைய மாணவ சங்கத்தினரின் நிதி உதவியைப் பெற்றுக் கற்பிக்கின்றார்கள். இவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா வேதனம் அளிக்கப்படுகின்றது. அவர்களின் பெயர்கள் செல்வி. அ. சசிகலா -விலங்கியல், செல்வி. கே. சண்முகப்பிரியா -நடனம், திரு. கே. மயில்வாகனம் -உடற்கல்வி ஆசிரியர்களிற் சிலர் யாழ் மாவட்டத்திற்கு வெளியே நிரந்தர இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர். வேறுசிலர் யாழ் மாவட்டத்துக்குள் தற்காலிக இடமாற்றம் பெற்றுத் தத்தம் வீடுகளுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் கற்பித்து வருகின்றனர். அமைதி ஏற்பட்டதும் தொடர்ந்தும் இவர்களின் சேவை எமக்குக் கிடைக்கும். இன்றுள்ள கஷ்ட நிலைமைகளின் மத்தியிலும் எமது கல்லூரி ஆசிரியர்கள் ஆற்றிவரும் சேவை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

## அமரத்துவம்

எமது பாடசாலையில் நீண்ட காலமாக விவசாய ஆசிரியையாகக் கடமையாற்றி அகால மரணமடைந்த திருமதி. இராசமலர் சத்தியமூர்த்தி அவர்களின் மறைவு எமக்குப் பெரும் இழப்பாகும். கல்லூரியின் பழைய மாணவியான இவர் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன்னலமற்ற சேவையாற்றி வந்தார். கல்லூரியிற் படித்த காலத்தில் இவர் சிறந்த வீராங்கனையாகத் திகழ்ந்தவர். இவரின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
எமது பாடசாலையில் கால் நூற்றாண்டுக்கு மேலாக நூலகராகப் பணியாற்றி உதைபந்தாட்டத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட திரு. ரி. பத்மநாதனின் மறைவு கல்லூரிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இவரின் ஆற்றலால் உதைபந்தாட்டத்தில் எமது கல்லூரி அகில இலங்கை ரீதியில் மூன்று ஆண்டுகளும், மாவட்டரீதியில் எட்டு ஆண்டுகளும் தொடர்ந்து சாம்பியனாகத் திகழ்ந்து சாதனை படைத்தது. இதில் குறிபிடத்தக்கது இவரிடம் பயிற்சி பெற்ற பல மாணவர்கள் இன்று உதைபந்தாட்டத் துறையில் அகில இலங்கை ரீதியில் சிறப்புற்று விளங்குவது இவர்தம் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பதவி உயர்ச்சி

திருமதி. ந. யோகநாதன், திருமதி. ஏ. ஞானேஸ்வரன், செல்வி. சி. கந்தையா, திரு. பி. இராஜசேகரன், திரு. என். அரியபுத்திரன், திரு. எம். வீரகுலசிங்கம், திரு. எஸ். கயிலைமகான், திரு. எஸ். விநாயகரத்தினம் ஆகியோர் சேவைக்கால ஆலோசகர்களாகப் பதவி உயர்வுபெற்றுப் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பகுதியில் பணியாற்றுகின்றனர்.

திரு. என். நடராஜமணி இரண்டாம் தர அதிபராகப் பதவி உயர்வுபெற்று நகுலேஸ்வர மகாவித்தியாலயத்திற்கு அதிபராகச் சென்றுள்ளார். திருமதி. கோ. மகேந்திரராசா மூன்றாம் தர அதிபர் பதவி பெற்று சிரேஷ்ட பகுதித் தலைவராகக் கடமையாற்றி பின்னர் யூனியன் கல்லூரிக்குப் பகுதித் தலைவராகச் சென்றுள்ளார். இவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

திருமதி. ஆர். கெங்காதரன் இடமாற்றம் பெற்றுக் கொழும்புக்குச் சென்றுள்ளார். திருமதி. எஸ். அனந்தசயனன் வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். திரு. கே. முத்துலிங்கம், திரு. எஸ். சுப்பிரமணியம், திருமதி. ஏ. மகேந்திரராசா ஆகியோர் தற்காலிக இடமாற்றம் பெற்றுத் தத்தம் வீடுகளுக்கு அண்மித்ததாகச் சென்றுள்ளனர். இடமாற்றம் பெற்றுச் சென்ற கணித ஆசிரியர் திரு. எஸ். சுப்பிரமணியம் மாலை நேரப் பாடசாலைக்கு வந்து கணிதபாடம் கற்பிப்பது குறிப்பிடத்தக்கது.

## இளைப்பாறல்

திரு. கே. குலசேகரம் 1991 இறுதிப்பகுதியில் இளைப்பாறியுள்ளார். இவர் பகுதித் தலைவராகவும், பின்னர் பிரதி அதிபராகவும் திறப்படச் செயலாற்றினார். நிர்வாகத்திற்கு உறுதுணையாகவிருந்து நேரசூசி போடுதல் போன்ற சிரமமான வேலைகளைத் திறம்படச் செய்து பலரின் நன்மதிப்பினைப் பெற்றவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வாக்கியத்துக்கமையத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சிறந்த கணித ஆசிரியரான இவர் மாணவரைக் கவரும் வகையில் கற்பித்தவர்.
திரு. எஸ். செனகரத்தினம் இவ்வாண்டு முற்பகுதியில் தமது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவர் ஒரு சிறந்த தமிழாசிரியர். நாடகம் இவருக்குக் கைவந்த கலை. பாடசாலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவர் ஓய்வுபெற்ற பின்னரும் மாணவர் நலன் கருதித் தொடர்ந்து கற்பிப்பது அவர்தம் சேவை மனப்பான்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

## பரீட்சைப் பெறுபேறுகள்

1990ல் நடைபெற்ற க. பொ. த உயர்தரம் 89 மாணவர்கள் 4 பாடங்களிலும் 30 மாணவர்கள் மூன்றுபாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் மொத்தம் 32பேர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு கல்லூரிக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். இவர்கள் 41ஏ அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளனர். இவர்களுள் பல்கலைக்கழகத் தகுதி பெற்றவர்கள் 87பேர்.

### க. பொ. த உயர்தரம் 1991.

86மாணவர்கள் 4பாடங்களிலும் 32மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர். 30மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்திற்கான பூரண தெரிவு இன்னமும் முடிவுறவில்லை. இவர்கள் 30(ஏ) அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றோர் 91பேர் இவர்களுள் இருவர் 3ஏ 1பி பெற்றது குறிப்பிடத்தக்கது.

### க. பொ. த உயர்தரம் 1992

இம்முடிவுகள் சில மாதங்களுக்குமுன் வெளியாயின. 81மாணவர்கள் 4பாடங்களிலும் 33மாணவர்கள் 3பாடத்திலும் சித்தியடைந்துள்ளனர். இவர்கள் 43(ஏ) அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றோர் 93 தமிழினி வாமதேவன் என்னும் மாணவி 4ஏ எடுத்துக் கல்லூரிக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளார். இவர் 356புள்ளிகளைப்பெற்று யாழ்மாவட்டத்தில் இரண்டாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

### க. பொ. த சாதாரணம் 1990

ஆறு பாடங்களுக்குமேல் சித்தியடைந்தோர் 91, 5பாடங்களில் சித்தியடைந்தோர் 21. க. பொ. த உயர்தரத்திற்குத் தகுதி பெற்றவர்கள் 93.

### க. பொ. த சாதராாண தரம் 1991.

ஆறு பாடங்களுக்குமேல் சித்தியடைந்தோர் 72. ஐந்து பாடங்களில் சித்தியடைந்தோர் 30இவர்களுள் க. பொ. த உயர்தரத்திற்குத் தகுதிபெற்றவர்கள் 69. செல்வி. த. ஆரணி என்னும் மாணவி எட்டுப்பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றவர்.



படிப்பகம்

www.padippakam.com



க. பொ. த சாதாரண தரம் 1992.

ஆறு பாடங்களுக்குமேல் சித்தியடைந்தோர் 32. க. பொ. த உயர்தரத்திற்குத் தகுதி பெற்றவர்கள் 86. ஒரு மாணவன் ஏழு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றார்.

அறிவுப் போட்டிகள்.

இவ்வாண்டு கோட்டமட்டத்தில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் எமது மாணவர்கள் மூன்று போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். கோட்டமட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் எமது மாணவர்கள் 13முதலாம் இடத்தைப் பெற்றனர். கோட்டமட்டத்தில் நடைபெற்ற திருவெம்பாவைப் போட்டியில் முதல் 5இடங்களில் எமது மாணவர்கள் முதலாம், மூன்றாம், ஐந்தாம் இடங்களைப் பெற்றனர். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் 2முதலாம் இடமும், 1மூன்றாம் இடமும் கிடைத்தன.

யாழ் மாநகரசபை சென்ற ஆண்டு நடத்திய பேச்சு பண்ணிசைப் போட்டியிலும், சைவசமய பேச்சுப்போட்டியிலும் எங்கள் பாடசாலை மாணவர்கள் 4பேர் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளனர். அவர்களின் பெயர்கள் வருமாறு செல்வி. சி. சிவரதி, செல்வி. வி. வினோதினி, செல்வன். க. முகுந்தன், செல்வி. நா. சுவர்ணா இவர்களின் திறமையைக் கௌரவிக்கும் முகமாக பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்துள்ளனர்.

உரும்பிராய் வள்ளுவர் மன்றம் நடத்திய திருக்குறள் போட்டியில் எங்கள் பாடசாலை முதலாம் இடத்தைப்பெற்று வெற்றிவாகை சூடியுள்ளது. மன்றத்தினர் கல்லூரிக்கு 1000ரூபா பெறுமதியான பொருளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் ஆதரவில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் எங்கள் கல்லூரியில் மூவர் தங்கப்பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பப் பிரிவில் செல்வி. சிந்து பாரதியும், மத்திய பிரிவில் செல்வன். க. தீபனும் மேற் பிரிவில் செல்வி. கு. பிரமிளாவும் தங்கப்பதக்கத்தைப் பெற்றனர்.

யாழ் மாவட்டப் பாடசாலை மாணவருக்காக நடாத்தப்பட்ட பண்டிதமணி நினைவுப்போட்டியில் செல்வி. வி. விநோதினி முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுள்ளார்.

இவ்வாண்டு, இணுவில் கந்தசுவாமி கோவில் நிர்வாகமும் இளந்தொண்டர் சபையும் சேர்ந்து நடாத்திய சைவ சமய பாடப் பரீட்சையில் செல்வன். கோ. பிரவீணனும், செல்வி. இ. நிருபாவும் தங்கப்பதக்கப் பரிசைப் பெற்றுள்ளனர்.

இலங்கை சுங்கத் திணைகளத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் முதலாம் இடத்தை செல்வி. பே. மோகனாவும் மூன்றாம் இடத்தை செல்வி. யோ. கலாரூபியும் பெற்றுக்கொண்டனர்.

1993ல் சைவபரிபாலன சபை நடாத்திய பண்ணிசைப் போட்டியில் மேற் பிரிவில் செல்வி. கு. பிரமிளா தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடாத்தப்பட்ட மகளிர் தின பேச்சுப் போட்டியில் அதி மேற் பிரிவில் செல்வி. வி. விநோதினி முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

கவிதைப் போட்டியில் செல்வன். ம. பிரவீணன் முதலாம் இடத்தையும் 1989ல் சைவபரிபாலன சபையால் நடாத்தப்பட்ட 5ம் ஆண்டு சைவ சமய அறிவுப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

ஆறாம் ஆண்டுப் பரீட்சையில் செல்வி. யோ. கலாரூபி தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

கல்லூரி மட்டத்தில் ஆரம்பபிரிவு விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி, பேச்சு, கட்டுரை,



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் நாடகம், இசை, பண்ணிசைப்போட்டிகள், அன்றையதினப் போட்டிகள் யாவும் சிறப்பாக நடந்தேறியுள்ளன.

### சைவ வளர்ச்சிக் கழகம்

கல்லூரியில் இடம்பெறும் சமயநிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. சென்ற ஆண்டு நவராத்திரி விழாவையும் இவ்வாண்டு வள்ளுவர் விழாவையும் விமரிசையாக நடாத்தியுள்ளது. திருமதி. செல்வராசா இதன் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

### உயர்தர மாணவர் மன்றம்

உயர்தர மாணவர் மன்றம் வழமைபோல் தனது செயற்பாட்டைத் திறம்படச் செயற்படுத்தி வருகின்றது. இம்மன்றத்தினர் தமது வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியை 26.06.93ம் திகதி கொண்டாடினர். முதன்மை விருந்தினராகப் பல்கலைக்கழக எந்திரவியலாளர் திரு. எஸ். தயாபரன் அவர்களும் கலந்து சிறப்பித்தார். இம் மன்றத்தின் தலைவராக செல்வன். ரி. மகிந்தனும் செயலாளராக செல்வன். ஆர். கலைச்செல்வனும் சிறப்பாகப் பணிபுரிகின்றனர். திரு. ஆர். ஜெயமனோகர், திருமதி. எஸ். பத்மநாதன், செல்வி. எஸ். தம்பிராசா ஆகியோர் மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாகப் பெரும்பணியாற்றி வருகின்றனர். இம்மன்றத்தின் விஞ்ஞான கணித மன்றம், வணிக மன்றம், தமிழ் மன்றம் ஆகியன செயற்படுகின்றன.

### விளையாட்டுத்துறைச் செயற்பாடு

பண்டத்தரிப்பு கோட்டமட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் 1989, 1990, 1991, 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து முதலாம் இடத்தைப்பெற்று சாம்பியனாகத் திகழ்ந்தது. வலைப்பந்தாட்டப் போட்டியில் 19வயதின் கீழ் பெண்கள் சென்ற மூன்று ஆண்டுகளில் கோட்டமட்டத்தில் சாம்பியனாகத் திகழ்ந்ததோடு மாவட்ட மட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரியுடன் மோதி இரண்டாம் இடம் பெற்றுத் திகழ்ந்தனர். உதயன் ஆதரவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் யாழ்மாவட்டத்தில் ஆசிரியர்கள் மத்தியில் எமது ஆசிரியர் திரு. நா. காளிதாசன் முதலாவதாகக் கணிக்கப்பட்டுத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் எமது பாடசாலை இரண்டாம் இடத்தைப் பிடித்துக்கொண்டது. விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக திரு. ஆர். செல்வராசா திறம்படச் செயலாற்றுகின்றனர்.

விளையாட்டுத் துறையில் ஆசிரியைகள் செல்வி. சம்பந்தர், இராசதுரை ஆகியோர் மாணவிகளுக்கு பொறுப்பாக விருந்து சிறப்பாக கடமை புரிகின்றனர்.

### சாரணியம் வழிகாட்டிகள்

எமது பாடசாலையில் சாரணியம், வழிகாட்டிகள், சிறுதோழிகள், குருளைச்சாரணர் ஆகிய நான்கும் திறம்பட இயங்கி வருகின்றன. சாரணியத்துக்குப் பொறுப்பாக திரு. கே. தர்மேசன், திரு. கே. காராளசிங்கம், திரு. பி. விஜயகுமார், திரு. கனகரத்தினம் ஆகியோர் இருந்து வருகின்றனர். வழிகாட்டிகளுக்குப் பொறுப்பாக திருமதி. எஸ். பத்மநாதன், திருமதி. ஐ. இராமசந்திரா, திருமதி. கா. அப்பாத்துரை ஆகியோர் செயற்படுகின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்ச்சியில் (ரலி) சென்றஆண்டு மாவட்டத்தில் எங்கள் பாடசாலை முதலாம் இடத்தைப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர் கழகம்

ஆசிரியர் கழகம் 72ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு திறம்பட இயங்கி வருகின்றது. ஆசிரியர்களின் நலனில் கூடிய அக்கறை கொண்டு அவர்களுக்குப் பல வழிகளிலும் உதவிகள் பல ஆற்றிவருகின்றது. இதன் தலைவராக திரு. கா. சுப்பிரமணியமும் செயலாளராக திரு. எஸ். யோகநாதரும், பொருளாளராகத் திருமதி. என். இராசதுரையும் திறம்படச் செயலாற்றுகின்றனர். ஆசிரியர்களின் கூட்டுறவுக் கடன் சிக்கனச் சங்கம் ஆசிரியர்களின் கடன்தேவையைப் பூர்த்தி செய்வதோடு பல அங்கத்தவர்களின் பணத்துக்கு உத்தரவாதம் அளித்து இளைப்பாறும்போது முதலும் வட்டியும் சேர்த்து வழங்குகின்றது.

### பாடசாலை அபிவிருத்திசபை



படிப்பகம்

www.padippakam.com



இச்சபை அதிபர் தலைமையில் 11உறுப்பினர்களைக் கொண்டு விளங்குகின்றது. இச்சபையின் கௌரவ செயலாளராக திரு. செ. சிவபாலனும் பொருளாளராக திரு. எஸ். இராஜகுலேந்திரனும் செயலாற்றி வருகின்றனர். கல்லூரியின் அபிவிருத்தி வேலைகளில் இச்சபை கூடிய கவனம் எடுத்து செயற்பட்டுவருகின்றது.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச்சங்கமும் பாடசாலையின் அபிவிருத்தி முயற்சிகளுக்குத் தொடர்ந்து தன்பணியினை ஆற்றிவரு கின்றது. இதன் செயலாளராக திரு. கே. சரவணமுத்துவும் பொருளாளராக திருமதி. கே. செல்வரா சாவும் திறம்படச் செயலாற்றுகின்றனர்.

### பழைய மாணவர் சங்கம்

பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் முன்னேற்றத்தை மையமாகக்கொண்டு திறம்படச் செயலாற்றி வருகின்றது. க. பொ. த உயர்தரம் விஞ்ஞான வகுப்புகளுக்குத் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மேலதிக வகுப்புகளை நடாத்தி வருகின்றனர். இணுவில் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள மைதானத்தை எடுத்து 25000ரூபா செலவில் திருத்தி பாடசாலை மாணவர்களின் உபயோகத்திற்கு விட்டிருக்கின்றனர்.

### இன்ரறாக்ற் கழகம்

இன்ரறாக்ற் கழகம் மாணவர்களுக்கு உதவும் தன்பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இடம்பெயர்ந்து சகல பொருட்களையும் இழந்துவந்த மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள் போன்றவற்றைப் பத்தாயிரம் ரூபாவிற்கு வழங்கி ஆதரவளித்தனர். இல்ல மெய்வல் லுனர் போட்டியின் போது ஐந்து இல்ல மாணவர்களுக்கு உணவுப்பொருட்களை வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு ஊக்கமளித்து குறிப்பிடத்தக்கது. இதன் பொறுப்பாசிரியராக திரு. ஆர். - ஜெயமனோகர் திறமையாகச் செயலாற்றி வருகின்றார்.

### நன்றி

இவ்விழாவில் மாணவர்களுக்குரிய பரிசில்களை வழங்க பணஉதவி வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரியின் இரு உப அதிபர்களுக்கும் என்னுடன் தோளோடு தோள் நின்று உதவி வருவதற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரிசுக்குரிய போட்டிகளையும், பரீட்சைகளையும் நடாத்தி பரிசிற்குரிய மாணவர்களை தேர்ந்தெடுத் தும், பட்டியல் தயாரித்தும், ஒழுங்கமைத்தும் சிறப்புற தம்பணியை மேற்கொண்ட பரிசிற் குழுவினரை சிறப்பாகப் பாராட்டுகிறேன். இக் குழுவிற்குத் தலைமை தாங்கி சிறப்புறப் பணியாற்றிய திருமதி. ஆர். சண்முகரத்தினம் அவர்களுக்கும் எனது நன்றி. இன்று வருகை தந்து எம்மைச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



# செயலாளர் அறிக்கை
## 1991-1992Sept.

எமது பாடசாலைக்குப் பாரிஸிலும் ஓர் பழையமாணவர்சங்கத்தை உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் எம்மிற்பலருக்கு உருவாகிய போதும் நடைமுறையில் சிரமமாய் இருந்தது. இறுதியில், ஆர்வமுள்ள பலரது ஒத்துழைப்புடனும் எங்கள் இருவரினதும் விடாமுயற்சி கைகூடியது.
01.09.1991 ல், பாரிஸிலுள்ள மகாஜனாபழையமாணவர்களை ஒன்று கூட்டி சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

நோக்கம் :
நாட்டிலுள்ள பாடசாலையின் அபிவிருத்தி, மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவுதல்.

முதலாவது நிர்வாக சபை
ஐம்பதுக்கும் மேற்பட்ட பழையமாணவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் எமது கல்லூரியின் பழையமாணவியும், பல ஆண்டுகள் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியவருமாகிய திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் ஏகமனதாக தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.
மேலும் திரு. சி. சொக்கநாதன், திரு. கி. இராஜதுரை ஆகியோர் உபதலைவர்களாகவும் திரு. பொ.-ராஜகாந்தன், திரு. அ. ஜெயக்குமார் ஆகியோர் இணைச்செயலாளர்களாகவும், திரு. பொ. நந்தகுமார் அவர்கள் பொருளாளராகவும், திரு. யோ. சிவலிங்கம், திருமதி. ப. கருணைவேல், திரு. சி. மனோகரன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், திரு. க. கனகேஸ்வரன் அவர்களை கணக்குப்பரிசோதகராகவும் சபை தெரிவு செய்தது.
இந்நிர்வாக சபையானது குறித்த கால ஆண்டுப்பகுதியில் பன்னிரெண்டு தடவைகள் தமக்குள் கூடியும், 3பொதுச்சபைக் கூட்டங்களை நடாத்தியும் தனது வேலைத்திட்டத்தை நகர்த்தியது.

சங்க விதிமுறைகள்:
இணைச்செயலாளர் திரு. அ. ஜெயக்குமார் அவர்களினால் தயாரிக்கப்பட்ட சங்கவிதிமுறைகள், நிர்வாகசபையினால் பரிசீலிக்கப்பட்டபின் பொதுச்சபைக்கு விடப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆசிரிய நியமனங்கள்
எமது கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க, கல்லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைக் கவனத்திற்கொண்டு, மூன்று பிரத்தியேக ஆசிரியர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் சம்பளப்பணத்தினை வழங்க ஏற்பாடுகள் செய்தோம்.

இதன் பிரகாரம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் 1992சித்திரை மாதத்திலிருந்து கிடைக்க ஒழுங்குகள் செய்திருக்கிறோம்.

பாவலர் துரையப்பாபிள்ளை நினைவு தினப்போட்டிகள்:
நாம் இடம்பெயர்ந்து வாழுகின்ற இந்த நாடுகளிலும் எமது இலக்கிய வளத்தை மேலும் வளம் படுத்திக்கொள்ள 1992ஜுலை மாதம் எமது ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவாக கவிதை, கட்டுரை, சிறுகதைப்போட்டிகளை நடாத்தினோம். குறிப்பிட்ட எண்ணிக்கை யானோரே போட்டியில் கலந்து கொண்டபோதிலும் நாம் நடாத்திய போட்டி ஓர் முன்னுதாரண மாகத் திகழ்ந்தது எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com



சரஸ்வதி பூஜை
பாரிஸ் சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி பூஜையில் ஆலய நிர்வாக சபையினரின் அனுசரணையோடு எமது சங்கமும் ஓர் நாள் பூஜையை நடாத்தியது. சங்க அங்கத்தவர்களது பூரண ஒத்துழைப்போடு பூஜை சிறப்பாக நடந்தேறியது.

அதிஷ்டலாபச்சீட்டு
எமது சங்க நிதித்தேவைக்காக 01.03.1993 பொதுக்கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க நண்பர்களுக்கான அதிஷ்டலாபச் சீட்டு ஒன்றினை, "யாழினி" திரு.சோதி, "கொல்வ் நகைமாளிகை" திரு.மோகன் அவர்களது ஒத்துழைப்போடும், அங்கத்தவர்களது பூரண பங்களிப்போடும் திறம்பட நடாத்தி முடித்தோம்.

இதன்மூலம் பெறப்பட்ட 15,722 பிராங்குகளும் (பதினையாயிரத்து எழுநூற்று இருபத்திரெண்டுபிராங்குகள்) சங்கத்தின் வங்கிக்கணக்கில் சேர்க்கப்பட்டது.

ஒன்றுகூடல், இராப்போசன விருந்து :
சங்க அங்கத்தவர்களிடையே இணைப்பையும் பரஸ்பர புரிந்துணர்வையும் வளர்க்கும் வகையில் எம்மால் ஓர் ஒன்று கூடல் நிகழ்வும், இராப்போசன விருந்து நிகழ்வும் நடாத்தப்பட்டது. சங்க அங்கத்தினர் குடும்பங்களும், பாரிஸிலுள்ள ஏனைய பழைய மாணவர் சங்கப்பிரதிநிதிகளும், எமது அழைப்பின் பேரில் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உதைபந்தாட்டப்போட்டி:
சென்பற்றிக்ஸ் பழைய மாணவர் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் எமது சங்கமும் பங்கு பற்றியது. எமது சங்க அணி திரு.பொ.நந்தகுமார் தலைமையில் சிறப்புற ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றது.

அடுத்த ஆண்டினை நோக்கி நடைபோடும் எமது சங்கம், தான் கொண்ட கொள்கையை மேலும் செழுமைப்படுத்திச் செயலாற்ற, அனைத்து அங்கத்தவர்களதும் அபிமானிகளதும் நல்ஆதரவும் ஊக்கமும்தான் உந்து சக்தியாக விளங்கும் என அன்புடனும் பணிவுடனும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

நன்றி

*இணைச்செயலாளர்கள்*
பொ. இராஜகாந்தன்
அ. ஜெயக்குமார்.



படிப்பகம்

www.padippakam.com



# செயலாளர் அறிக்கை
## 1992, 1993 Sept.

பாரிஸ் - மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், தனது இரண்டாவது வருட முன்னேற்ற மான செயற்பாடுகளுடன் மேலும் புதிய உறுப்பினர்களையும், செயற்பாடுகளுக்கான போதிய நிதியினையும் சேகரித்து திறம்பட இயங்குகின்ற வேளையில் இவ் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மிக மகிழ்ச்சி அடைகின்றோம்.

நிர்வாகம்

சென்ற வருடம் ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபை இந்த ஆண்டு பதினொருபேர் கொண்ட நிர்வாக சபையாக விரிவுசெய்யப்பட்டது. எமது மதிப்பிற்குரிய ஆசிரியை திருமதி. ப. பாலசிங்கம் அவர்கள் தொடர்ந்தும் தலைவியாகவும், உபதலைவர்களாக, எமது முன்னாள் ஆசிரியர் திரு. கு. சண்முகலிங்கம் அவர்களும், திரு. க. கனகேஸ்வரன் அவர்களும், செயலாளர்களாக திரு. சி. கணேசலிங்கம், திரு. பொ. இராஜகாந்தன் அவர்களும், பொருளாளர் ஆக திரு. ச. சுதர்சன் அவர்களும் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக திரு. யோ. சிவலிங்கம், திருமதி. ப. கருணைவேல், திரு. ச. கரிகரன், திரு. பொ. நந்தகுமார், திரு. பொ. யோகராஜா ஆகியோரும் கணக்குப் பரிசோதகராக திரு. பொ. ஜெயக்குமார் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் எண்பத்தி ஆறு அங்கத்தினர்களைக் கொண்டிருந்த எமது சங்கம் இவ் வாண்டு மேலும் இருபது புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டது. இவர்கள் எல்லோரினதும் பூரண ஒத்துழைப்புடன் எமது செயற்பாடுகள் கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் மிகவும் சிறப்பாக அமைந்தது.

கலை கலாச்சாரப்பிரிவு

எமது சங்கத்தின் ஓர் பிரிவாக கலை கலாச்சாரப்பிரிவு உருவாக்கப்பட்டது. இதில் திரு. சி. கணேச லிங்கம் பொறுப்பாளராகவும் திருமதி. லீனா ஜெயக்குமார், செல்வி. வ. சின்னத்தம்பி, திரு. சி. இரா தாகிருஷ்ணன், திரு. சி. மனோகரன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் செயற்படுகின்றனர். 14.03.93 இல் "நாடகமாலை" என்னும் ஓர் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது, அதில் மூன்று தரமான நாடகங்கள், எமது பழைய மாணவர்களினதும், மற்றும் பாரிஸ் நாடக கலைஞர்களினதும் ஒத்துழைப்போடு சிறப்புற மேடையேற்றப்பட்டது. இதில் ஓர் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்வு மூலம் 7500F வரையில் பணம் சேகரிக்கப்பட்டது.

விளையாட்டுப் பிரிவு

எமது சங்கத்தின் இன்னோர் பிரிவாக விளையாட்டுப்பிரிவு அமைக்கப்பட்டது. திரு. பொ. நந்தகுமார் தலைமையில் திரு. சிவதாஸ், திரு. விமலதாஸ், திருமதி. எழில்தமிழ்வளவன், திரு. மேகன்ராஜ், திரு. துஷ்யந்தன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் செயற்படுகின்றனர். 27.06.93 இல் எமது முன்னை நாள் அதிபர் T. T. ஜெயரத்தினம் ஞாபகார்த்த சுழல்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி ஒன்று எம்மால் நடாத்தப்பட்டது. எமது கல்லூரியில் உதைபந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவில் இச்சுற்றுப்போட்டியை நாம் நடாத்தியதில் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் பாரிஸில் உள்ள பதினாறு கழகங்கள் பங்குபற்றின, இறுதி ப்போட்டியின்போது பிரதம விருந்தின ராக எமதுகல்லாரியின் முன்னாள் உதைபந்தாட்டவீரர். திரு. வே. சிவானந்தராஜா அவர்களும், சிறப்புவிருந்தினராக திரு. நாஸ்ரீகொங்காதரன் (இங்கிலாந்துக் கிளை ச்செயலாளர்) அவர்களும் கலந்து கொண்டனர். சுற்றுப்போட்டி சிறப்புற நடாத்தி முடிக்கபபட்டபோதும், இறுதிப்போட்டியின் போது ஏற்பட்ட அசம்பாவிதத்திற்காக வருந்துகின்றோம். போட்டிக்காக கல்லூரி பழைய மாணவர்கள், அனுதாபிகள் வெற்றிக்கிண்ணங்களை வழங்கிஉதவினர்.

03.07.93 இல் நடைபெற்ற இங்கிலாந்து பழைய மாணவர் சங்க ஒன்று கூடலின்போது பாரிஸிலி ருந்து எமது உதைபந்தாட்ட அணியும், மற்றும் அங்கத்தவர்கள் சிலரும் கலந்து கொண்டோம். மற்றும் பாரிஸில் நடைபெறும் கிறிக்கற் மெய்வல்லுனர் போட்டிகளில் எமது கல்லூரி பழைய மாணவர் பலரும் பங்குகொண்டு வெற்றியும், எமக்கு புகழையும் தேடித்தருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



நூலகம்
நல்ல தமிழ் நூல்கள் அரிதாகக்கிடைக்கின்ற எமது சூழலில், நூல்களை வைத்திருப்பவர் பரிமாறிக் கொள்ளவும், மேலும் நூல்களைச் சேகரித்து இலக்கிய ஆர்வலர் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யவும் இந்த ஆண்டு எம்மால் ஓர் நூலகப்பிரிவு உருவாக்கப்பட்டது. தற்சமயம் 150 தரமான நூல்களுடன் நூலகம் இயங்குகின்றது. திருமதி. ப. கருணைவேல் பொறுப்பாளராகவும், திருமதி. சிவகுமார், திருமதி. சி. மனோகரன் நூலகக் குழு ஏனைய உறுப்பினர்களாகவும் செயற்பட்டுவருகின்றனர்.

பாடசாலைக்கான உதவிகள்
போர்க்காலச் சூழலிலும் எமது கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் தொடர்ந்தும் எமது கல்லூரியை இன்று ஓர் இடத்திலும் நாளை ஓர் இடத்திலுமாக நடத்தி மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதை நாம் மனமார பாராட்டுகின்றோம். நாம் சென்ற ஆண்டு எம்மால் நியமிக்கப்பட்ட நியமன ஆசிரியர்களுக்கான உதவி வழங்கும் பணியை இவ்வாண்டும் தொடருகின்றோம்.

எமது பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய எமது பழைய மாணவர்கள் மற்றும் பத்திரிகை ஸ்தாபனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றைய பழைய மாணவர் சங்கங்கள், மற்றும் உதைபந்தாட்டக் கழகங்கள், நண்பர்கள் அனுதாபிகள் எல்லோருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களிலும் உங்கள் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கின்றோம்.

இணைச்செயலாளர்கள்
திரு. சி. கணேசலிங்கம்
திரு. பொ. இராஜகாந்தன்

## Late T.T. Jayaratnam & Memorial Football Tournament 1993

The names of the winning teams and the donors of the cups.

Champion - St. Anthony's sports Club. Late T.T. Jayaratnam memorial challenge cup donated by Three Stars Industrial Proprietor Mr. & Mrs. Nagalingam Karunaivel.

Own Cup - Late Jeyaratnam Tournament Championship cup donated by Mrs. A Umamaheswaran in memory of late Mr. Kathirgamar Umamaheswaran.

Runner up - Sunrise Sports Club. Donated by Mr. & Mrs. Ponniah in memory of late Mr. Kanapathy Krishnar.

Friendly Match winner - Union College. Donated by Mr. S. Sivakumar.

Man of the match - Sun Rise Club (Player No. 7). Donated by Mr. & Mrs. P. Rajakanthan in memory of late Sarasothimalar Kanaganayagam.

Best Player - Mr. Augustine Anton (St. Anthony's Club). Donated by Mr. P. Muralitharan in memory of late Mr. T.P. Pathmanathan.

Best Goal Keeper - Mr. Sivanesan (St. Henry's Club). Donated by Mr. & Mrs. Rajakanthan in memory of Mr. Sinnathamby Ponniah.



படிப்பகம்

www.padippakam.com



The cups presented for the winning team players.

Donated by Mr. S. Ganeshalingam in memory of late Mr. Yogasingam. Donated by Mr. Poopalan in memory of late Mr. Jeyarajah. Donated by Mr. U. Pararajasegaram in memory of late Mr. Umapatysivam. Donated by Mr. S. Rathakrishnan in memory of late Mr. Rasiah. Donated by Mr. S. Sutharsan in memory of late Mr. Arumugasamy. Donated by Mr. S. Dushiyanthan in memory of late Mr. Chandrasegaram. Donated by Mr. A. Sivakumaran in memory of late Mr. Arumaiturai. Donated by Mr. & Mrs. Jayakumar in memorany of late Mr. Arasaratnam. Donated by Mr. & Mrs. Hariharan in memory of late Mr. Vivekananthan. Donated by Mr. & Mrs. Sivalingam in memory of late Mr. Yogavanam. Donated by Mr. & Mrs. Giri in memory of late Mr. A.T. Subramaniam. Donated by Mr. S. Vasudevan in memory of late Mr. Saravanamuthu. Donated by A. Sivathas in memory of late Mr. Apputhurai. Donated by Mr. N. Varatharajan. Donated by Mahajana College old Students Association, Paris.

★

## லண்டன் கிளை
## தலைவரின் வாழ்த்துச்செய்தி

பாரிஸ் பழையமாணவர்கள் எடுக்கின்ற ஆண்டுவிழாவிற்கும், அதை யொட்டி வெளிவருகின்ற மகாஜனன் மலருக்கும் வாழ்த்துச்செய்தி அனுப்பு வதில் பெருமிதமடைகின்றேன்.

நாம் பிறந்த மண்ணின் இன்றைய அவலநிலையினால், மகாஜனன்களாகிய நாமெல்லாம், அகதிகளாகி உலகமெல்லாம் பரந்து வாழ்ந்து வருகின்றோம். தமிழ்இனத்தின் இன்றைய இழிநிலையை நீக்கி, நாமும் மனிதர்களாக வாழ இடம்பெறுகின்ற போராட்டத்தில், எமது பழையமாணவர்களும் தங்களின் பங்களிப்பை நல்கியதையும், தொடர்ந்து நல்கிவருவதையும் நாம் குறிப்பிடா மல் இருக்கமுடியாது. கடந்த பத்து ஆண்டுகளாக, தங்களின் இன்னுயிரை நீத்த அனைவருக்கும், குறிப்பாக மகாஜனன்களுக்கு நாம் சிரந்தாழ்த்தி நன்றியைத்தெரிவிக்கின்றோம்.
இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியிலும் மகாஜனக்கல்லூரி தொடர்ந்து இயங்கிவருவது மகிழ்ச்சிக்குரியது. பாராட்டுதற்குரியது.



G. நற்குணன்
தலைவர், லண்டன்கிளை.

நமது மண்ணின் தலைசிறந்த பாடசாலையாக மகாஜனா, எவ்வாறு இன்று வரை திகழ்கின்றதோ, அதுபோலவே , லண்டன், பாரிஸ், கனடா ஆகிய இடங்களில் நாம் நடாத்துகின்ற பழையமாணவர்சங்கங்களும் தலைசிறந்தவை யாகத் திகழ்வது பெருமைக்குரியதே.

எமக்கெல்லாம் கல்வியையும், உழைப்பையும் எல்லாவற்றிற்கும் மேலாக மனிதாபிமானத்தையும் ஊட்டிய நமது அன்னையாம், மகாஜன மாதாவினை இவ்வேளையில் நினைவுகூருவோம்.

மகாஜனாவின் வளர்ச்சியில், பாரிஸ் பழைய மாணவர்கள் காட்டுகின்ற அக்கறையினையும், ஆதரவினையும் பாராட்டுகின்றோம்.

வெளிநாடுகளில் உள்ள பழையமாணவர்சங்கங்கள் ஒன்றாகச்செயற்பட்டு கல்லூரி வளர்ச்சிக்கு உதவுவதோடு, நமது மக்கள் படுகின்ற துயரங்கள் நீங்கவும் பிரார்த்திப்போமாக.



படிப்பகம்

www.padippakam.com





இடமிருந்து வலம்: திரு. பொ. நந்தகுமார் (பொருளாளர்), திரு. சி. சொக்கநாதன் (உபதலைவர்), திருமதி. ப. பாலசிங்கம் (தலைவர்), திரு. பொ. இராஜகாந்தன் (இணைச்செயலாளர்), திருமதி. ப. கருணைவேல் (நிர்வாக உறுப்பினர்)
இ. வ: திரு. சி. மனோகரன் (நி. உறுப்பினர்), திரு. அ. ஜெயக்குமார் (இணைச்செயலாளர்), திரு. யோ. சிவலிங்கம் (நி. உறுப்பினர்).
படத்தில் இடம்பெறாதவர்: திரு. கி. இராஜதுரை (உபதலைவர்)

நிர்வாகசபை 1992

நிர்வாகசபை 1993



இடமிருந்து வலம்: திரு. ஏ. சுதர்சன் (பொருளாளர்), திரு. சி. கணேசலிங்கம் (இணைச்செயலாளர்), திருமதி. ப. பாலசிங்கம் (தலைவர்), திருமதி. ப. கருணைவேல் (நி. உறுப்பினர்), திரு. பொ. இராஜகாந்தன் (இணைச்செயலாளர்).
இ. வ: திரு. பொ. யோகராஜா (நி. உறுப்பினர்), திரு. பொ. நந்தகுமார் (நி. உறுப்பினர்), திரு. க. கனகேஸ்வரன் (உபதலைவர்), திரு. வி. கரிகரன் (நி. உ.), திரு. யோ. சிவலிங்கம் (நி. உ.). படத்தில் இடம்பெறாதவர்: திரு. கு. சண்முகலிங்கம் (உபதலைவர்)



படிப்பகம்

www.padippakam.com



# வருகிறது நூற்றாண்டு விழா!



எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், கனடா பழையமாணவர் சங்கக்கிளையின் தலைவருமான மதிப்பிற்குரிய திரு. பொ. கனகசபாபதி அவர்களின் வாழ்த்துரை.

கேட்கக் கேட்க- காதிலே தேன் வந்து பாயுது! சொல்லச் சொல்ல வாய் தித்திக்கிறது! நினைக்க நினைக்க நெஞ்சு புளகாங்கிதம் எய்துகிறது?

உலகெலாம் மகாஜனா மாணவர் பரந்து வாழ்கின்றனர். ஊரெல்லாம் மகாஜனா மாணவர் சங்கங்களை உருவாக்கி உள்ளனர். எங்கு வாழ்ந் தாலும் மகாஜனா அன்னையை மறந்திலர். அவள் ஏற்றத்தைச் சிந்தை யில் கொண்டு பொழுதெல்லாம் அவள் எழுச்சிக்காக மாட்சிபேண சங்கல்பம் எடுத்து வாழ்கின்றனர். இதுவரை ஆறு பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கிய பெருமை, ஈழம் என்ன வேறு எந்த உலக நாடுகளைச் சார்ந்த எந்தக் கல்லூரிக்குமே இருக்க முடியாது என நான் திட்டவட்டமாகக் கூறுவேன். உங்கள் சங்கம் மகாஜனா ஈன்ற கடைசிப் (இப்போதைக்கு) பிள்ளை ஆனால் சுட்டிப்பிள்ளை! இரண்டு வருடக் குழந்தை போலவா தொழிற்படுகிறது?

அம்மம்மா! பிஞ்சுக் கால்களால் அளந்து அளந்து நடக்கும் மழலை போலவா உள்ளது உங்கள் செயற்றிறன். இருபது வயதுக் காளை ஒன்றின் பீடு கொண்ட மிடுக்கான நடையல்லவோ தெரிகிறது. கலைவிழாவென்ன! உதைபந்தாட்டப் போட்டி என்ன! இப்போது வெளியிடவுள்ள சஞ்சிகை என்ன! என்ன!, கல்லூரியின் நாளாந்த நடைமுறைகட்கு வேண்டிய பொருளுதவி என்ன! என்ன! என்ன! நீங்கள் சாதனை படைக்கிறீர்கள்! உங்கள் வெற்றிக்குக் காரணம்? அங்கத்தவர்கள் யாபேரும் ஒரு மனதுடன் இயங்குகிறீர்கள் என்பதை நான் உங்கு வந்த பொழுது கண்டின்புற்றேன். ஈடுபாடு கொண்டு ஒரு குடும்பமாய் இயங்கும் உங்களையோ, அயராது உழைக்கின்ற நிர்வாக சபையையோ, அல்லது அன்னைபோல் வழிநடத்தும் உங்கள் தலைவி திருமதி. ப. பாலசிங்கத்தையோ இதற்காக நான் பாராட்டமாட்டேன். மகாஜனாவின் செல்வங்கள் இப்படி உழைக்காவிட்டால்தான் அதில் ஆச்சரியம் கடும் உழைப்பு மகாஜனா எம் உயிரோட்டத்தில் புகுத்திய உயிர்ச்சத்து... இந்த வெற்றிக்கு இலை மறை காயாக நிற்பவர் திரு.-பாலசிங்கம் அவர்கள். அவர் வேறு ஏதோ கல்லூரியின் பழைய மாணவர் ஆனால் எமது கல்லூரி வளர்ச்சி கண்டு இன்புறுவர். அவர் பாராட்டுக் குரியவர்.

அண்மையில் ஆஸ்திரேலியாவில் கூட, பழைய மாணவர் ஒன்று கூடல் ஒன்று நடந்ததாகக் கேள்விப்படுகிறேன். ஏழாவதும் ஜனனிக்கிற அறிகுறிதோன்றியுள்ளது மகிழ்ச்சி!



படிப்பகம்

www.padippakam.com



இத்தகை விசுவாசமிக்க பழைய மாணவர் உலகெங்கும் இருக்கின்ற பொழுது எமது அன்னைக்கு என்றுமே ஏற்றம்தான்! அவர் புகழ் தரணியெங்கும் ஒலிக்கும் நாதம் தான்! நீங்கள் மிகவும் அக்கறையுடன் இன்றைய கால கட்டத்திலே கல்லூரியின் உடனடித் தேவைகளை அறிந்து நிவாரணம் காண பெரும் அளவிலே உதவுகின்றீர்கள் வரவேற்கிறேன், போற்றுகிறேன்.

எமது கல்லூரியின் வாழ்க்கை வரலாற்றிலே போற்றிப் பாராட்ட வேண்டிய ஒவ்வொரு காலகட்டங்களாகிய வெள்ளி விழா, பொன் விழா, வைரவிழா எனப் பெருமை சேர்க்கும் வகையிலே அவற்றினை நினைவுகூரும் வண்ணம், எமது உள்ளம் போற்றும் அன்பிற்குரிய அமரர் ஜெயரத்தினம் அவர்களின் எண்ணத்தின் வண்ண முகமாக வானுயர் கட்டிடங்கள் எழுந்தன. அமரர் அவர்களால் ஆரம்பிக்கப் பட்ட வைரவிழா நினைவு மண்டபம், அமரர் ஜெயரத்தினம் நினைவு கூர நிறுவியதை என் சேவைக்காலப் பணிகளில் முதன்மையானது என்று கூறுவதில் பெருமை கொள்கிறேன். அவர் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு, இதன் மூலம் ஒரு சிறு துளி பிரதி உபகாரம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக ஆண்டவனுக்கு நன்றி கூறுகிறேன்.

எமது நாட்டின் துர்அதிர்ஷ்டம். அதன் விளைவு எமது மாபெரும் கல்லூரியின் வளர்ச்சியிலே இன்னொரு மைல் கல்லாகிய 75வது ஆண்டு விழா வந்தது தெரியாமலேயே போய் விட்டது.

ஆனால், வரவுள்ள நூற்றாண்டு விழா அப்படிப்பட்டது அல்ல, போற்றிப்பாடவேண்டியது. அதன் புகழ் பாடுவதில் ஒவ்வொரு பழைய மாணவனும் பங்கு கொண்டு தன்னைத் தானே பாராட்ட வேண்டியது. நேற்றையவர்களை நினைவு கூரவேண்டியது. நாளையவருக்குக் களம் அமைத்துத்தர வேண்டியது. இந்த விழாவினுக்கு முன் எமது நாட்டின் இன்னல் தீர்ந்து, நம்மவர் சுதந்திர ஜீவிகளாய் வாழ்வார்கள் என்பது எனது எண்ணம். ஆகவே, அந்த நூற்றாண்டு விழாவினைக்கொண்டாடுவதற்கு எமது பாடசாலையின் எழுச்சியைக் கொண்டாடும் வண்ணம் ஒரு பாரிய நினைவுக் கூடத்தை அமைக்க வேண்டும் என்பது எனது எண்ணம். இது உலகெங்கும் பரந்து வாழும் கல்லூரிப் பழைய மாணவர் யாவரினதும் ஒருமித்த பணியாக அமைய வேண்டும்.

இதன் பொருட்டு இப்பொழுதே ஒரு நிதியத்தை ஆரம்பித்துச் சிறுகச், சிறுக சேர்க்கத் தொடங்கினால் எண்ணம் உருவமாகும் போது பெருந் தொகையாகக் கனிந்து நிற்குமல்லவா?

விழாவினைக் காண நான் இருப்பேனோ தெரியாது. ஆனால் இதன் ஆக்கத்திலே பங்கு கொள்வதில் பெருமை அடைகிறேன்.

வாழ்க மகாஜன மாதா!
உயர்க அதன் பணிகள் !
ஓங்குக உங்கள் சீரியதொண்டு !
நிலைக்க என்றும் அமரர் நாமம் !

அன்புடன்
-பொ. கனகசபாபதி-



படிப்பகம்

www.padippakam.com



# மகாஜனக் கல்லூரியின் இலக்கியப் பாரம்பரியம்

- நா. சண்முகலிங்கன்

பண்பாட்டு விழிப்புணர்வின் அவசியம் பெரிதும் உணரப்படுகின்ற வேளை இது. இலக்கியப் பாரம்பரியம் பற்றிய பிரக்ஞையும் இதன் வழி யானதே.

மகாஜனாவின் இலக்கியப் பாரம்பரியம் என்ற எண்ணக்கரு, ஈழத்து இலக்கிய உலகில் ஏற்கெனவே சிந்தனை அலைகளைத் தோற்றுவித் துள்ளது. இலக்கிய ஆய்வாளர்கள், இலக்கிய ஆசிரியர்கள் கவனத்தை ஈர்த்துள்ளது. ஆய்வுக் கட்டுரைகள், நூல் அறிமுகக் குறிப்புகள், வானொலிச் சித்திரங்கள், பத்திரிகை சஞ்சிகைக் குறிப்புகளின் வழியாக இவை பதியப்பட்டுமுள் ளன. இந்தப் பதிவுகளும் இவற்றுக்குப் புறம்பாக இதுவரையில் வெளியாகியுள்ள மகாஜனப் புலத் துப் படைப்பாளிகளின் நூல்களும் இந்த உரைக் கான ஆதாரங்களாகும்.

மகாஜனப் புலத்துப் படைப்பாளிகள் என்ற பதம் மகாஜனக் கல்லூரியுடன் ஆசிரிய அல்லது மாணவத் தொடர்பினைக் கொண்டிருந்தவர்க ளையே குறித்து நிற்கிறது. இந்த வகையில் மகாஜனக் கலைப்புலத்து விளைந்த ஒருவன் என்ற வகையில் அநுபவதரிசனமாகவும் ஆய்வுப் பொருளைக் காணும் வாய்ப்பு எனக்குண்டு. இதுவே புறவயமான நோக்குதலுக்குத் தடையா தலாகாது என்ற எச்சரிக்கை உணர்வும் கூடவே உண்டு.

குடியேற்ற நாட்டாதிக்க காலத்துச் சுய பண் பாட்டு விழிப்புணர்வின் மையங்களாய் யாழ்ப்பா ணத்துத் தோன்றிய கல்வி நிறுவனங்களுள் தெல் லிப்பழை மகாஜனக் கல்லூரியும் ஒன்றாகும். எழுபத்தெட்டு ஆண்டு கால வரலாற்றினைக் கொண்டது இக்கல்லூரி. இந்த நீண்ட கல்வி வரலாற்றில் ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தின் செல்நெறிகளுடன் அது கொண்டிருந்த உறவின் தரிசனத்திலேதான் மகாஜன இலக்கியப் பாரம்ப ரியம் என்ற எண்ணக் கருவின் பொருண்மையை நாம் காணமுடியும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணத் தின் கல்வி, இலக்கிய வரலாறுகளிற் காணப்ப டும் சில செல்நெறிகளை விளக்குவதாயும் அந் நெறிகளுக்கான எடுத்துக்காட்டாகவும் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் வாழ்க்கை ஆய் வாளரினாற் கணிக்கப்படுவது (சிவத்தம்பி, 19-72). காலம் கையாண்ட வடிவம், சமூக நோக்கு என்ற பார்வையினடியாகப் பாரதியாருடன் பாவலரை ஒப்பிட்டு ஆராய்தல் பயனான முயற் சியாய் அமையும் என்ற கருத்தும் முன்வைக்கப் படுவது (கைலாசபதி, 1982).

பழகு தமிழைக் கையாண்டமை, சமகால சமூக, அரசியற் பிரச்சினைகளைக் கவிப்பொருளாய்க் கொண்டமை, பதம், கீர்த்தனை, கும்மி முதலிய இசைப் பாவடிவங்களை எடுத்தாண்டமை, அந் நிய கலாச்சாரத் தாக்கத்தின் ஆபத்துக்களை வலியுறுத்தியமையெனப் பாவலரின் பங்களிப்புக் கள் கவனத்தைப் பெறுவன. ஒட்டுமொத்தமாகக் காண்கையில்,

உயர்திரு. தெ. அ. துரையப்பாபிள்ளையவர்கள் நாவலர் அவர்களுக்குப்பின் நாவலர் அவர்க ளைப் போலவே நமது நிலையையும் நமது தேசத் தின் நிலையையும் நன்கு சிந்தித்திருக்கிறார்கள். நாவலர் அவர்கள் வசனமூலம் தமது சிந்தனை களை வெளியிட்டிருக்கிறார். பிள்ளையவர்கள் கவிதை மூலம் தமது சிந்தனைகளை வெளியிட் டிருக்கிறார்கள். (பண்டிதமணி, 1960).

சொல்லோடு மட்டும் நின்றுவிடாது செயல் வடிவம் பெற்ற பாவலரின் சிந்தனைகளில் முக் கியமானது மகாஜனக் கல்லூரி. அவர் நிறுவிய மகாஜனக் கல்லூரியின் வழியாக அவரது சிந்த னையும் செயலும் பரம்பரை பரம்பரையாகத் தொடர்வது. இந்த வகையில் இங்கே நாம் நோக்கும் மகாஜன இலக்கியப் பாரம்பரியத்தின் தொடக்கப் புள்ளியாகவும் பாவலர் துரையப்பா பிள்ளையைக் காண்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழில் சுய படைப்புக்களின் இன்றியமையா மையை அடிக்கடி வலியுறுத்தி நின்றவர் பாவலர்.
சேக்ஸ்பியர், மில்ரன், ஜோன்சனுடன் நின்றுபோகாது கவிதை, உரைநடை வடிவில் ஆங்கில மனங்கள் படைப்புக்களைத் தொடர்ந்து தரமுடியுமென்றால், எங்களால் ஏன் இயலாது?
எனக்கேட்ட பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் (1960) தாமே பல படைப்புக்களை முன்னோடியாகத் தந்தவர்.

துரையப்பாபிள்ளையைத் தொடர்ந்து மகாஜனாவைப் பொறுப்பேற்ற அதிபர் திரு. கா. சின்னப்பா அவர்களும் கவிஞராகவே அறியப்படுபவர். ஆனந்தபோதினி, ஈழகேசரி, இந்துசாதனம் முதலிய வெளியீடுகளில் இவரது கவிதைகள், கட்டுரைகள் வெளியாகியுள்ளன. மகாஜன இலக்கியப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி இவராற் பேணப்பட்டதென்று நாம் கருதமுடியும். இவரது இலக்கியப் பங்களிப்பினைக் கணிப்பிடுமாறு ஆக்கங்கள் தொகுத்து வெளியிடப்படுவது இன்றியமையாதது.

ஈழத்து இலக்கியத்தில் ஆக்க நிலைப்பட்ட தேசியப் பரிமாணம் நன்கு புலனாகிய, நிலைநிறுத்தப்பட்ட காலமாக மறுமலர்ச்சிக் காலம் கருதப்படுவது. இதனால் இக்காலத்து இலக்கியப் படைப்பாளிகள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறப்பான கவனத்தைப் பெறுபவர்கள். இந்த மறுமலர்ச்சிக்கால மும்மணிகளாகக் கருதப்படுகின்ற அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, மஹாகவி ஆகிய மூவரும் மகாஜனக் கல்லூரி, ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்துக்கு ஈன்று புறந்தவர்களாக அறிமுகம் செய்யப்படுவதனை இங்கு நாம் குறித்துக் கொள்ளலாம் (செந்திநாதன், 1973; நுஃமான், 1981).

தமிழின் கட்டுக்கிடையாய்க் கிடந்த தேக்க நிலையையும் எம் மக்களின் அடிமை நிலையையும் அறிந்த மறுமலர்ச்சி வேட்கையும் விடுதலை விருப்புங் கொண்ட இவ்வெழுத்தாளர் தாம் பிறந்து வளர்ந்த மண்ணினைத் தனித்துவம் சிதையாது சீர்படுத்துவதோடு அதற்கு மேற்கிலே தோற்றிய சிந்தனை ஊற்றுக்களினின்றும் நீர் கொணர்ந்து பாய்ச்சி வளம்படுத்தவும் விழைந்தனர் எனலாம் (தில்லைநாதன், 1973).

மறுமலர்ச்சிக் காலத்தின் இந்த முக்கியமான பணியில் முன்னின்ற இந்த மகாஜன "மும்மணி"-களும் தமது படைப்புத் திறத்தாலே நட்சத்திரங்களாயினர். இதன் வழி ஈழத்து இலக்கியத்தின் புதிய செல்நெறிகளுக்கு வழிகாட்டுபவர் ஆயினர்.

பழைமையை அத்திவாரமாகக் கொண்டு புதுமையை எழுப்பவேண்டும். புதிய புதிய சிருஷ்டிகள் எல்லாம் எங்கள் தமிழில் உண்டாகவேண்டும், பழைமையை மட்டும் புதுப்பித்துக் கொண்டிருப்பதில் பிரியோசனமில்லை. புத்துயிரும் புத்தழகும் கொண்ட புதுப்புது முறைகளில் தமிழிலக்கியம் விரியவேண்டும். (அ. செ. முருகானந்தன், 1986).

என்ற இலட்சியப் பிரகடனத்துடன் புறப்பட்ட அ. செ. மு இன் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மிக முக்கிய இடம் வகிப்பன. 1986-ஆம் ஆண்டு வெளியான மனிதமாடு சிறுகதைத் தொகுதியுடன் இது இலக்கிய உலகில் எளிதாய் நிறுவப்பட்டுள்ளது. அ. செ. மு. இன் இலக்கிய ஆளுமையை மேலும் தரிசிக்க அவரது படைப்புக்கள் அனைத்தும் நூலுருப்பெறல் அவசியமாகும்.
தேசத்தின் வறுமை, துன்பம், அரசியல் நிலைமை முதலியவற்றை உணர்ச்சியூட்டக் கூடிய முறையிற் சித்தரிக்கும் இலட்சியக் கதைகள் பெருக வேண்டும்.
என்று "தமிழில் கதை இலக்கியம்" என்ற கட்டுரையிலே குறிப்பிடுவார் அ. செ. மு. (1942).

என் வாழ்வு சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக இருக்கவேண்டும். சுரண்டலும் அநீதியும் நிறைந்த சமுதாயத்தை ஒழிக்கவும் புதிய ஒளிமிக்க சமுதாயத்தைத் தோற்றுவிக்கவும் என்னாலான பணியை எழுத்து மூலம் செய்யவேண்டும்.
என்று சொல்லும் (அ. செ. மு. இன் மறுமலர்ச்சிக் கால சகாவான) அ. ந. கந்தசாமி (1981) தமது இந்த இலட்சியத்துக்கான இலக்கிய இயக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்தபோது, சோசலிச யதார்த்தத்தை ஏற்று நிறுவன மயப்பட்டுச் செயற்படத் தொடங்கினார். இதன் வழி "முற்போக்கு இலக்கியத்தின் மூத்த பிள்ளை"களுள் ஒருவராகக் கணிக்கப்பட்டார். சிறுகதையில் மட்டுமின்றிக் கவிதை, நாடகம் ஆகிய இலக்கிய வடிவங்களிலும் அ. ந. கந்தசாமி சிறப்பான ஈடுபாடு கொண்டிருந்தார். இவரைப் பற்றிய முழுமையான மதிப்பீட்டுக்கும் கூட இவரது ஆக்கங்கள் நூலுருப் பெறாமை ஒரு தடையே.

மக்கள் பக்கம் நின்று மக்களுக்காகவே எழுதுபவனை ஒருபோதும் மக்கள் மறக்கமாட்டார்கள். மக்களின் குரலாக நின்று படைப்பதிற்றான் எழுத்தாளன் தன் தேசத்தின் சிருஷ்டிக் களத்தில் நிலைகொள்ள முடியும்.

எனக் கூறிய அ. ந. கந்தசாமியின் (1981) நிலைபேறு நிச்சயமானதே. ஆயினும், அவரது படைப்புக்கள் இனியேனும் நூல் வடிவம் பெறவேண்டும்.

நல்ல வேளையாக மஹாகவியின் படைப்புக்களிற் பெரும்பாலானவை சற்றுக் காலந் தாழ்தியேனும்



படிப்பகம்

www.padippakam.com



வெளியிடப்பட்டதால் நமது மரபில் மஹாகவியின் இடத்தை உரிய முறையில் நிலைநாட்ட முடிந்திருக்கிறது. ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பல பிரதான பண்புகளைத் தோற்றுவித்து வளர்த்தெடுத்தவர் என்ற பெருமையைப்பெறும் மஹாகவி.

ஈழத்தில் மட்டுமின்றி, தமிழகம் உட்பட நவீன தமிழ்க் கவிதை வரலாற்றிலேயே தானே ஒரு சகாப்தம் ஆகின்றார் (நுஃமான், 1981).

அன்றாட நிகழ்ச்சிகளையும் அநுபவங்களையும் நோக்கி மஹாகவியின் கவிதை திரும்பியதே முக்கியமான ஒரு திருப்பு முனையாகும்... மஹாகவி ஒரு புதிய சந்ததியை விருத்தியாக்கும் ஒரு காலகட்டமாகிறார். நாம் இன்னமும் பாரதி யுகத்தில் இருக்கின்றோம் என்று சொல்வது தவறு. பாரதி பரம்பரையின் இறுதித் தளிர்கள் பழுத்துக்கொண்டிருக்கின்றன. பாரதி ஒரு யுக சந்தி என்பது மெய்யே. ஆனால், அந்த யுகசந்தி பிரிந்துவிட்டது. அதன் ஒரு கிளையே பிச்சமூர்த்தி என்றால் அத் தோல்வி நிகழாமல் அதனை இன்னுமொரு கட்டத்துக்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி (சண்முகம் சிவலிங்கம், 1970) எனக் கணிக்கப்படுகிறார்.

நிகழ்காலச் செய்திகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும் என்பார் மஹாகவி (1973). கவிதை ஊடகம், வெளிப்பாட்டு முறை என்பவற்றிலும் புதிய தன்மைகளைச் சேர்த்து இன்றைய நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிதையின் செல்நெறியைச் சிறப்பாகப் பிரதிபலித்து நிற்பவர் சேரன். சேரன் மஹாகவியின் வாரிசு; பரம்பரை. அப்பனே மகனாகி உயிர் ஓம்பும் நியதியின் சிறப்பான வெளிப்பாடு.

இலக்கிய வடிவங்களில் ஒன்றான கவிதையில் சகாப்தங்களாகிவிட்ட இந்த மஹாகவியும் சேரனும் மகாஜனக் கலைப்புலத்து விளைந்தவர்கள்.

இந்த நட்சத்திர மதிப்பீடுகளுக்குப் புறம்பாகவும் மகாஜனப் படைப்பாளிகள் பலரை ஈழத்து இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்துடன் காணமுடியும்.

பண்டைய இலக்கியங்களில் தோய்ந்து, இலக்கிய இலக்கண ஆராய்ச்சி, இலக்கிய நாடகங்கள் எனப் பல நூல்களை ஈய்ந்தவர் புலவர் நா. சிவபாதசுந்தரன். தம் ஆசிரியப் பணியின் முழுமைக் காலமும் மகாஜனாவிலேயே பணிபுரிந்தவர்; மகாஜனாவின் இலக்கியச் செயற்பாடுகளை நெறிப்படுத்தி நின்றவர். "கல்விக் கலைஞன் துரையப்பா புகழ் துதிப்போம்" என்றும் 'வெல்லுக மாஜன மாதா' என்றும் சிறப்பான கல்லூரிக் கீதத்தையும் தந்து கல்லூரியின் இலக்கிய வரலாற்றுடன் சங்கமமாகியுள்ளனர். இவரது முயற்சியில் கல்லூரி வெளியீடுகளாகக் காத்திரமான இலக்கிய ஆளுமைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

கல்லூரியின் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்ட பல ஆசிரியர்களைக் குறிப்பிட முடியும். விரிவஞ்சி எடுத்துக் காட்டுகளாய்த் தான் சிலர் இங்கே குறிப்பிடப்படுகிறார்கள்.

மறுமலர்ச்சிக் காலக் கவிஞருள் குறிப்பிடத்தக்க ஒருவராகக் கருதப்படும் கதிரேசன் எனப்படுகின்ற செ. கதிரேசர்பிள்ளை ஆசிரியர் அவர்கள் மகாஜனக் கலை இலக்கியப் பாரம்பரியத்துக்கு நாடக இலக்கியத்தின் வழி தந்த பரிசுகள், மகாஜனாவின் வரலாற்று நிகழ்வுகளாய்க் கணிக்கப்படுவன. இலங்கைக் கலைக்கழக நாடகப் போட்டிக்கென இவரால் எழுதப்பட்டுத் தொடர்ந்து முதற் பரிசில்களையும் பெற்றுக்கொண்ட ஐந்து நாடகங்களும் பாரதம் தந்த பரிசு என்ற பெயரில் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்களினாலேயே நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன. கதிரேசன் கவிதைகள் நூலாக்கம் பெறுவதன் அவசியத்தை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

மகாஜனாவின் மற்றொரு இலக்கிய ஆசிரியராக நம் கவனத்தைப் பெறுபவர் த. சண்முகசுந்தரம் ஆசிரியர். ஈழத்துக் கலை, இலக்கிய மரபு மூலங்களின் தேடலில், நாட்டாரியல் முன்னோடியாக ஈழத்துக் கல்வி வரலாற்றில் நிலை பெற்றுள்ளவர். பேராதனைப் பல்கலைக் கழக மாணவர் சஞ்சிகையின் முதல் ஆசிரியர் என்ற பெருமையைப் பெறுபவர். பல சிறுகதைகள், நாடகங்கள், இன்னும் நடைச் சித்திரங்கள் என இவரது படைப்புகள் பல நூல் வடிவிலும் வெளிவந்துள்ளன.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் சங்கிலியன் நாடக மரபில் ஈழத்து அரசியல் வரலாற்று நிகழ்வுகளை நாடகமாக்கித் தந்தமையும் திரு. சண்முகசுந்தரம் அவர்களது முக்கிய பணியாகக் கருதப்படும். செழுமையான, செட்டான இவரது மொழிநடை என்னை மிகவும் கவர்ந்த, பாதித்த விடயமாகும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. சண்முகசுந்தரம் ஆகியோரின் மொழிநடை வளர்ச்சி நிலைகள் தனித்து ஆராயப்பட வேண்டியன. கல்லூரி மாணவர் மன்றங்கள், கையெழுத்துச் சஞ்சிகைகளை வழிப்படுத்தியதிலும் இவருக்கு முக்கிய பங்கு உண்டு. மகாஜன மாணவரின் முதற் சிறுகதைத் தொகுப்பான இளம் முல்லைக்குப் பின்னால் சண்முகசுந்தரம் அவர்களின் உழைப்பு நிறைய இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



இதனை அடியொற்றியே இவர்கள் என்ற மாணவர் சிறுகதைத்தொகுப்பு வெளியானது. ஆசிரியர் திரு. செ. இராஜகுலேந்திரன் இதன் பின்னணியிலிருந்தார். இவரது பணிகள் இன்றும் தொடர்வன.

மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும் சில ஆண்டுகள் ஆசிரியராய் விளங்கியவருமான மயிலங்கூடலூர் பி. நடராசன் இன்னொரு குறிப்பிடத்தக்க இலக்கிய ஆளுமை. கல்லூரியிலும் வெளியிலும் சமூக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல படைப்புக்கள் நூல் வடிவம் பெறக் காரணமாக இருப்பவர் இவர். சேரன், சபேசன் முதலியோருக்குப் பின்னால் நடராசனின் வழிப்படுத்தல் நிறைய இருந்திருக்கிறது. , "தன்னுடைய கருத்தெதனையும் திணிக்காமல் சுயமான வளர்ச்சிக்கு மிகவும் உற்சாகப்படுத்தியவர் இவர்" என்கிறார் சபேசன் (1986). எழுபதுகளின் ஆரம்பங்களில் மகாஜனாவிலே கவிதைப் போட்டிகளை நடத்திப் பரிசு வழங்க நான்விரும்பியவேளை அதனை நடைமுறைப்படுத்த இவர் உழைத்ததும் அந்தப் போட்டிகளில் சேரன், ஆதவன், புராந்தகன், விஜயேந்திரன், சபேசன் முதலியோர் தேறியதும் இந்த வேளையில் என் நினைவுகளில் எழும்.

நடராசனுடன் இணைந்தும் தனித்தும் மகாஜன இலக்கியப் பாரம்பரியம் என்ற எண்ணக் கரு அறிஞர் மட்டத்திலும் மக்கள் மத்தியிலும் நிலைநாட்டப்படவும் ஏற்றுக்கொள்ளப்படவும் பல்வேறு வழிகளில் உழைத்தவர்களில் திரு. ஆ. சிவநேசச்செல்வன் குறிப்பிடத்தக்கவர். கல்லூரியில் பாவலர் நூற்றாண்டு விழா மலர், நிறுவியவர் நினைவுப் பேருரைத் தொடர் என இவர் சிந்தனையில் மலர்ந்தவை பல. தமிழிலக்கியம், தொல்லியல், தமிழில் தொடர்புச் சாதனங்கள் என்பனபற்றிச் சிறந்த கட்டுரைகளையும் இவர் தந்துள்ளார். மகாஜனப் பாரம்பரியத்தில் பாவலரிலிருந்து தொடருகின்ற பத்திரிகைத்துறை மரபில் இவர் இன்று வீரகேசரி இதழின் பிரதம ஆசிரியராக இருக்கின்றார்.

மகாஜன இலக்கியப் பரம்பரையினருள் அதிக நூல்களை வெளியிட்டவர் தெல்லியூர் நடராசன். இந்த ஆய்வு தொடர்பான தேடலின் போதே இவர் பற்றிய தகவல்களை, நூல்களை அறிய முடிந்தது. அ. செ. மு., அ. ந. க., மஹாகவி காலத்து மகாஜனனான இவருக்கும் அ.-செ. மு., அ. ந. க. ஆகியோரைப் போல நிறையப் பத்திரிகைத் தொடர்புகள் இருந்திருக்கின்றன. இவரது நூல்கள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்குள்ளாக்கப்பட்டு, காலப் பின்னணியில் மதிப்பீடு செய்யப்படுதல் இன்றியமையாதது என்று கருதுகிறேன்.

பழந் தமிழிலக்கிய மரபில் மனிதநேய உணர்வு மிக்க நல்ல பல கவிதை நூல்களைத் தந்துள்ள மகாஜனன் புலவர் ம. பார்வதிநாதசிவம், . அ.-செ. மு. ஐப் போல எழுத்தையே தொழிலாகக் கொண்டு பொருளாதாரரீதியிற் பாதிக்கப்பட்டவர் இவர்.

மகாஜனன் என்ற பிரகடனத்துடன் நல்ல இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர் வேல் அமுதன். இவரது சிறுகதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

இன்று மிகவும் அறியப்பட்ட எழுத்தாளராக, 'இன்றைய பெண் எழுத்தாளர்' என்ற பெருமையுடன் நல்ல சிறுகதைகளையும் நாவல்களையும் தந்துள்ளார் கோகிலா மகேந்திரன். மிகக் குறுகிய காலத்துள் நிறைய எழுதித் தமக்கென ஓரிடத்தை நிறுவிக்கொண்ட மகாஜனன் இவர்.

அண்மையில் ஆகுதி என்ற சிறுகதைத் தொகுதியைத் தந்துள்ள சோமகாந்தன் ஒரு மகாஜனன் என்ற தகவல் மிக அண்மையிலேயே எனக்குத் தெரியவந்தது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற நிறுவனத்தின் நிலைபேற்றிலும் நாவலர் சபையின் இலக்கிய முயற்சிகளிலும் இவரது பங்கு நிறைய உள்ளது.

பௌராணிக வித்தகர் எனப்படுகின்ற திரு. குகசர்மா அவர்களின் இலக்கியத் தொகுதி, குரும்பசிட்டி கே. எஸ். சிவகுமாரனின் சிறுகதைத் தொகுப்பு, ஆதவன், சபேசனின் கவிதைத் தொகுதிகள் என மகாஜனப் பட்டியல் நீளும்.

இந்த மகாஜனன்களின் நூல்வரிசையில் மிக அண்மையில் இரண்டு நூல்களை என்னாலும் தர முடிந்திருக்கிறது. இவற்றைவிட, இலங்கை வானொலியின் "கங்கையாளே" இசைத்தட்டிலும் ஏனைய வானொலி இசைத்தட்டுகளிலும் எனது தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyrics) சில பதிவாகியுள்ளன.

இந்த வகையில் "கங்கையாளே"யில் இடம்பிடித்த மற்றொரு மகாஜனன் மாவை நித்தியானந்தன். நல்ல கவிதைகளையும் நாடகங்களையும் எழுதியுள்ள நித்தியானந்தனின் படைப்புக்களும் நூலுருப் பெறவேண்டியது இன்றியமையாதது.

மகாஜனாவின் 'புதுசு'களில் குறிப்பிடத்தக்க இளவாலை விஜயேந்திரன் அ. ரவி, பாலசூரியன் முதலியோரின் படைப்புக்கள் நுல்வடிவம் பெறும்போது இவர்களைப்பற்றிய மதிப்பீடும் நிலைபேறும் அதிகமாகும் என்று கருதுகிறேன்.

பல கவிஞர்களுடன் தொகுதிகளில் இடம்பிடித்துள்ள ஊர்வசி, ஔவை முதலியோரின் தனியான தொகுதிகளின் அவசியத்தையும் இங்கு



படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிடவேண்டும்.

சிங்கள - தமிழ் இலக்கியப் பரிவர்த்தனை என்ற மிக இன்றியமையாத இலக்கியப் பணியில் இரண்டு நூல்களைத் தந்ததுடன் வானொலி போன்ற தொடர்பூடகங்களின் வழி இன்றும் இதனைச் செய்துவரும் மயிலங்கூடலூர் த. கனகரத்தினம் அவர்களும் இங்கு கவனத்துக்குரியவர்.

இலக்கியத் திறனாய்வுத் துறையிலும் இன்றைய சமூக அறிவியற் போக்குகளை நன்கு அறிந்து அவற்றினைத் தமிழிலக்கிய மரபில் பிரயோகித்து, சிறப்பான திறனாய்வை மேற்கொள்பவர் திரு. - க. சண்முகலிங்கம்.

மகாஜனாவுக்கெனச் சிறப்பான கையெழுத்துச் சஞ்சிகை மரபு இருக்கின்றது. மகாஜனப் படைப்பாளிகளின் பயிற்சிக் களங்களாக இவற்றைக் குறிப்பிடலாம். இன்று வெளிவருகின்ற அரங்கம் வரையில் பல சஞ்சிகைகள் இப் பாரம்பரியத்திற்குரியன. எழுபதுகளில் வானொலி விமர்சனங்கள் வரை இவை எட்டப்பட்டுள்ளன.

மாணவர் ஆக்கங்களையும் உள்ளடக்கி ஆண்டுதோறும் வெளிவந்த கல்லூரி இதழான மகாஜனனுக்குப் புறம்பாக எழுபதுகளில் க. நாகேஸ்வரன், சு. சரவணபவன், பொ. இரகுபதி முதலியோர் சம்பந்தப்பட்டிருந்த சங்கமம் மகாஜனன்களின் அச்சுவாகனமேறிய முதற் சஞ்சிகையாகும்.

பின்னாலே எண்பதுகளில் மகாஜன மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவர்கள் பழைய மாணவராகிவிட்ட நிலையிலும் தொடரும் புதுசு சஞ்சிகை ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் தன் இடத்தை நிறுவிக் கொள்வது ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தின் ஆரோக்கியமான செல்நெறியை அது காட்டி நிற்பதாக மதிப்பிடப்படுகிறது (நா. - சுப்பிரமணியன் 1985).

மகாஜனக் கல்லூரியின் எழுபத்தெட்டு ஆண்டு கால வரலாற்றில் ஒரு பெரும் மாணவ பரம்பரை. இவர்கள் அனைவருமே தங்களை மகாஜனன்கள் என்று பிரகடனம் செய்துகொண்டு எழுதியதாகக் கூறமுடியாது. இந்த முன்னோடி முயற்சியில் எனது கண்களுக்குள் அகப்படாத பிற படைப்பாளிகளும் படைப்புக்களும் நிறைய இருக்கலாம். அவற்றையும் இனங்கண்டு மதிப்பிட இவ்வுரை வழிகாட்டியாக அமையும் என்று கருதுகிறேன்.

இவ்வாறாக, மகாஜன இலக்கியப் பாரம்பரியம் அளவு ரீதியாகவும் (Quantitative) தன்மை ரீதியாகவும் (Qualitative) ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்திற்குக் கணிசமாகப் பங்களித்துள்ளது. இதன்வழி மகாஜன இலக்கியப் பாரம்பரியம் என்ற எண்ணக் கருவும் பொருண்மை பெறுவதாகக் கொள்ளப்படலாம். எனினும் இதனை, மேலும் உறுதிப்படுத்தும் முயற்சியாய் மகாஜனப் படைப்பாளிகளின் அல்லது மகாஜனப் புலத்து விளைந்த படைப்பாளிகள் என இதுவரை கூறப்பட்ட எண்ணக் கருவின் பொருண்மையையும் சற்று ஆழ்ந்து காண்பது நல்லது என்று கருதுகிறேன். மகாஜனப் படைப்புப் புலத்தின் ஆக்கக் கூறுகளை இனங்காணும் முயற்சியாகவும் இது அமையும்.

மகாஜனப் படைப்பாளிகள் என்ற எமது வரையறை மகாஜனாவுடன் ஆசிரிய, மாணவ உறவு கொண்ட படைப்பாளிகளையே குறித்து நின்றமை முன்னர் சுட்டப்பட்டது. உண்மையில், மகாஜனாவுடனான இவர்களின் மாணவ, ஆசிரிய உறவுக்கும் இவர்களின் படைப்பாற்றலுக்கும் படைப்புகளுக்கும் உள்ள உறவு நிர்ணயத்தில் தான் மகாஜனப் படைப்பாளிகள் என்ற பிரயோகம் அர்த்தம்பெறும். இல்லையெனில் வெறும் பரம்பரைப் பெருமை பேசுதலில் பெருமைக்குரியவர்களைத் தம்மவராய் அல்லது தம்மை அவர்களின்பால் சேர்த்துக்காணும் காட்டும் சராசரிச் சமூக நடைமுறையாய் நமது முயற்சியும் போய்விடும் ஆபத்து உண்டு. இந்த விடயத்தில் மகாஜனப் படைப்பாளிகளின் வாக்குமூலங்களிற் சில எமக்குத் துணையாகும்.

தமது தமிழார்வத்தைத் தூண்டியும் தாம் எழுதும் கட்டுரைகளை வியந்தும் தமது தமிழ்ப்பாட ஆசிரியர், தம் பிற்காலத் திறமைக்குப் பேராதரவாக இருந்தமைபற்றி அ. செ. மு. நன்றியுடன் நினைவுகூர்வதாகக் கதிரேசர்பிள்ளை ஆசிரியர் (1973) குறிப்பிடுவார். திரு. கதிரேசர்பிள்ளை முதலாய் நீளும் ஆசிரியர் பரம்பரையும் மகாஜன பாரம்பரியத்தில் நிறைந்து விளங்குவதற்கு நானும் ஒரு சாட்சியாகலாம்.

மிகப் "புதுசான" சாட்சியாகச் சபேசனையும் இங்கு அழைக்கலாம். 'மாணவரின் முயற்சிகளைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துவது மகாஜனப் பாரம்பரியம்' என்று தன் அநுபவத்தின் அடியாகச் சபேசன் தெரிவிக்கும் கருத்து நம் கவனத்துக்குரியது (சபேசன், 1986). ஐந்தாவது வகுப்பிலேயே தன் முதற் கவிதையை எழுதக்காரணமான தமிழாசிரியர், பின்னாலே

கையெழுத்துச் சஞ்சிகை ஆசிரியராகத் தம்மை வளர்த்த ஆசிரியர் திரு. ச. விநாயகரத்தினம், இந்த முயற்சியை வகுப்பறைக்கு வந்தே உற்சாகப்படுத்திய அதிபர் திரு. பொ. கனகசபாபதி எனச் சபேசனின் மனப்பதிவு நீளும். சபேசனின் கூற்றினடியாகச் சில பொதுவான அவதானிப்புகளையும் இந்த இடத்தில் நாம் கருத்திற் கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com



படைப்புத்திறன் விருத்திக்கு அடிப்படையான மொழியாளுமையின் வளர்ச்சிக்குக் காலாகும் மகாஜனாவின் தமிழாசிரியர் பரம்பரையினர். இந்தக் கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கெல்லாம் பொறுப்பாயிருந்து உழைக்கும் ஆசிரியர்கள். அதுபோலவே கலை இலக்கிய முயற்சிகளுக்கு மகாஜனா கலைத்திட்டத்தில் இடந்தந்து வேண்டிய ஊக்கமெல்லாம் தந்துநிற்கும் மகாஜனாவின் அதிபர்கள். இந்த முயற்சிகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அநுமதிக்கும் பெற்றோர். கல்லூரியின் கலை, இலக்கிய முயற்சிகளையெல்லாம் அங்கீகரித்து ஊக்கும் பண்பாட்டுப் புலம் என இங்கே குறிப்பிடப்பட்ட அனைத்தினதும் இடைவினைகளுக் கூடாகத்தான் மகாஜன ஆற்றல்கள் தோன்ற முடிந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தின் கலை, இலக்கிய மரபுகளின் ஊற்றுக் கண்கள் பலவற்றினை அம்பனைச் சூழல் கொண்டிருப்பது. கிராமியக்கலை வடிவங்களிலிருந்து தொல்சீர்க் கலை வடிவங்கள்வரை இங்கே உச்சநிலையிற் பயிலப்படுவன (வித்தியானந்தன், 1985). இசையும் ஓவியமும் நடனமும் நாடகமும் இலக்கிய -புராணப்படனங்களும் இயல்பாய்ப் பயிலப்படும் இல்லங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் வருகின்ற இளைய உள்ளங்களின் ஆர்வங்களை இனங்கண்டு அவை வளர்தற்கேற்ற சூழ்நிலையைத் தருகின்றபோது அவை சக்தி வாய்ந்த ஆற்றல்களாய் மிளிர்வதில் வியப்பில்லை. மகாஜனப் படைப்பாளிகளின் படைப்புத்திறன் பின்னணியாக இந்தப் பண்பாட்டுத் புலத்தினையே சிறப்பாகக் காண்பது பொருத்தமானதென்று கருதுகிறேன்.

என் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் கலையார்வம் கொண்டவர்கள். இதனால் நான் இளமையைக் கழித்த அந்த மனை எந்த வேளையிலும் கலகலப்பாக இருக்கும். இசையும் ஓவியமும் அக்குடும்பத்தின் பரம்பரைச் சொத்து.

இத்தகு சூழலிலேதான் நான் வளர்ந்தேன். இதனால் என்னிடத்தே கதைகளைக் கற்பனையில் எழுதவேண்டுமென்ற ஆவல் முளைகொண்டுவிட்டது.

எனக்கூறும் அ.செ.மு.இன் கூற்றில் (1973) அவர் ஆற்றலிலே குடும்ப, பண்பாட்டுப் புலத்தின் இடம் புலப்படும். பாவலரிலிருந்து இன்று உருவாகிவரும் மகாஜனப் படைப்பாளிவரை கிடைக்கும் குடும்பச் சூழல், நண்பர்குழாம், பிரதிமைக் குழுக்கள் (Reference groups) என அமையும் சமூக மயமாக்கற் கூறுகள் அனைத்தையும் நுணுகி நோக்குகையில், மகாஜனப் பண்பாட்டுப் புலத்தின் செழுமை மேலும் தெளிவாகும். மகாஜனப் பாரம்பரியத்தின் சிறப்பும் ஒளிவிடும்.

புதிய மாற்றங்கள், நவமான மணிமண்டபங்கள், ஆயினும் நமது சிறு பராயம் முதலாக நாம் உட்கொண்ட அதே வயற்காற்று, எமது முந்தையர் ஆயிரம் கனவுகள் கண்டு ஏர் பிடித்துச் சுழன்று வந்த அதே நிலப்பரப்பு இன்னமும் அப்படியே விரிந்து கிடக்கிறது (அ.செ.மு., 1973).

சமூக மாற்றங்களிடையும் பண்பாட்டின் செழுமையான கூறுகளைக் கைவிடாத இந்தப் புலத்தின் சிறப்பினைக் கண்டுதான் படைப்புச்சக்தியாய்ப் பண்பாடு கண்ட கலைத்தெய்வமான வாணியும் தன்வீடாக மகாஜனாவைத் தேர்ந்தெடுத்து, தென்தமிழ் யாழ் மீட்டிச் சிரித்தபடி வீற்றிருக்கிறாள்.

வாணி, உன் வீடும் வளவும் அறிவேன் அக்
காணி முழுவதும் கலகலப்பே அல்லவோ?

என்று மஹாகவி சும்மாவா சொன்னான்.



படிப்பகம்

www.padippakam.com



# அசோக மரங்களும் சிறைவைக்கப்பட்ட நினைவுகளும்

- இளவாலை விஜயேந்திரன் -

எமது காலத்தில் உலகம் தலைகீழாகச் சுற்றியது என்றில்லை. அது எப்போதும் போலத்தான் சுற்றியது. ஆனால் பாருங்கள் என்ன அதிசயம். அந்தக் காலத்தில், மரங்கள் பூப்பதைவிடவும் அழகாக இருந்ததுபோல் தோன்றியது. அந்த அழகு எமது மனப்பிரமைதான் என்ற ஞானம் வரப் பத்துப் பதின்மூன்று வருடங்கள் தேவை போலும். எங்கள் கண்ணுக்கு முன்னால், எமது பள்ளிக்கூட வளவில் நடப்பட்ட அசோக மரங்கள் கிசுகிசுவென்று வளர்ந்து வானம் தொட முயன்றது இப்போதும் கண்ணுக்குள் நிற்கிறது. அந்த மரங்கள் பூப்பதில்லை, அல்லது பூப்பதை நான் கண்டதில்லை. ஆனால் அவற்றின் தலையில் கொத்தாய்ப் பூக்களைப் பார்த்த ஞாபகம் மனத்துக்குள் இருக்கிறது. (அசோக மரம் என்று எழுதினாலும் அசோக மரத்துக்கு உண்மையான பெயர் அதுவல்ல என்று எனக்குச் சந்தேகம் தான். எங்களுக்கு Botany படிப்பித்த ஆசிரியையிடம் சொல்ல மாட்டீர்கள் என்றால் இன்னுமொரு விஷயம், எனக்கு அந்த மரத்தின் "Botanical Name" தெரியாது, அறிய அக்கறை காட்டவுமில்லை.)

பழைய நினைவுகளை மீட்பது பழஞ்சோறு சாப்பிடுகிற மாதிரியான விவகாரம். எனக்குப் பழஞ்சோறும் பிடிக்கும், பழைய ஞாபகங்களும் பிடிக்கும். என்னோடு படித்தவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று இங்கிருந்து கண்டுபிடிக்க முடியாது, ஆனால் சில காலம் முன்னதாக நோர்வேயில் ஒரு ஆறேழுபேர் -என்னோடு படித்தவர்கள்- இருந்தார்கள். இப்போது சிலர் இங்கிருந்து கனடாவுக்கும் சிலர் இலங்கைக்கும் போய்விட்டதாக கேள்வி. இப்படியே லண்டன், ரொறின்ரோ, பேர்லின், மெல்பண், பாரிஸ், சுவிஸ் -ஜேர்மனிய நகரங்கள் என்று உலகின் பல பகுதிகளிலும் எங்கள் வகுப்பின் "அறிவுக் கொழுந்துகள்" சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னொரு விஷயம், எங்களுக்குப் படிப்பித்த ஆசிரியர்களும், எங்களைப் பின்தொடர்ந்தோ என்னவோ இந்தமாதிரியான நகரங்களில் திரிகிறார்கள். நான் இவர்களைக் கண்டதில்லை. ஆனால் கனடாவிலோ லண்டனிலோ இவர்களைக் காணும் சந்தர்ப்பம் நேரலாம் போலத் தெரிகிறது. கண்டவுடன் எனக்குக் கஷ்டமான பாடங்களிலிருந்து இவர்கள் கேள்விகள் கேட்கமாட்டார்கள் என்று நினைப்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?

அசோக மரங்களை நட்டால் கல்லூரிவாசல் அழகாகத் தெரியும் என்பது அதிபராக வந்த போது "கனக்ஸ்" என்று அழைக்கப்பட்ட திரு. கனகசபாபதி அவர்களுக்குத்தான் தெரிந்தது போலும். அதற்குமுன் யாரும் அதுபற்றி அக்கறை காட்டவில்லையோ என்னவோ. வாசல் மதிற்கரையில் பலவர்ணங்களும் தலைநீட்ட கடுதாசிப் பூக்களும் நடப்பட்டது அதே காலப்பகுதியில் தான். இதுவெல்லாம் ஏன் சொல்கிறேனென்றால், 'வரலாற்றுச் சிறப்புமிக்க' இந்தக் காலப்பகுதியில்தான் நான் அங்கு படித்தேன் என்பதைச் சுட்டிக்காட்டத்தான்.

அசோக மரங்களின் பின்னால் ஒருவித தலைநிமிர்ந்த உணர்வு ஒளிந்திருப்பதை நீங்கள் உணர்கிறீர்களோ இல்லையோ எனக்கு அப்படித்தான் தோன்றியது. "பட்டிக்காட்டு"ப் பள்ளிக்கூடமான மகாஜனாதான் வட இலங்கையின் சிறந்த கல்லூரிகளில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது, பல விடயங்களை எடுத்துக் கொண்டால், இது சத்தியமாக எனது வாக்குமூலமல்ல, எனது நண்பரும் வேறு கல்லூரியில் படித்தும், மகாஜனாவின்பால் அபிமானமும் ஆச்சரியமும் கொண்ட ஒருவரது வாக்குமூலம். ஆனால் மகாஜனா அப்படித் தலைநிமிர்ந்த அசோக மரமாக நிற்க ஓரிருவரைத் தனியே காரணம் கூறமுடியாது. தனியே ஓரிருவரால் அவ்வாறான சாதனையைச் செய்தலும் சாத்தியமில்லைத்தானே. ஆனால் காலத்துக்குக் காலம் பலராலும் வளர்க்கப்பட்ட பல ஆற்றல்களும் இந்தச் சாதனைக்குக் காரணம் எனச் சொல்லலாம். அதைவிடவும் முக்கிய அச்சாணிகளாகச் சிலரைக் குறிப்பிடலாம். அதிபராகத் திரு. 'கனக்ஸ்' இருந்தபோது அந்தச் சிலரில் ஒருவரையாவது நான் பார்த்தேன் என்ற மன



படிப்பகம்

www.padippakam.com



நிறைவு இருந்தது. ஒரு அதிபர் பாடசாலையில் நிற்குமளவு நேரம் வீட்டிலும், வீட்டில் நிற்கவேண்டியளவு நேரம் பாடசாலையிலுமாக, அவர் கொஞ்சக்காலம் பள்ளிக்கூடத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவர "நாய்படா"ப் பாடுபட்டார். இதுபற்றி நாலுவரி எழுதினால் யாரும் நம்பமாட்டார்கள், காரணம் பல ஆசிரியப் பெருந்தகைகளைப் போல ரியூசன் கொடுக்காமல் இத்தனை நேரம் பாடசாலையில் செலவழிக்க யாரும் இருந்திருக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இப்போது சர்வதேச ரீதியாக அவர் பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்வது மாத்திரம் சாட்சிக்குப் போதுமானது.

நிற்க, நான் சொல்லப் புறப்பட்டது "கனக்ஸ்" பற்றி மட்டுமல்ல, அவர் போலவே திறமையும் அர்ப்பணிப்பும் மிக்க பலரை நான் எனது பள்ளிக்கூட வாழ்வில் கண்டிருக்கிறேன். தமிழ்மொழியில் ஆற்றலும் ஆர்வமும் கொண்ட பலரை உருவாக்கிய கதிரேசரும், தனது துறை வேறாக இருந்தாலும், கல்லூரியில், மாணவன் ஒருவன் கவிதை என நினைத்து எதையாவது எழுதினாலும் அதைப்பகிரங்கமாக்கி ஊக்குவித்து அவன் கவிஞனே என்று ஏறத்தாழப் பிரகடனப்படுத்திவிடும் (மயிலங்கூடலூர்) பி. நடராஜனும், பாடம் தொடர்பான நூல்களை மட்டுமல்ல நல்ல இலக்கிய நூல்களையும் நூலகம் கொண்டிருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்த பொன்னி ரீச்சரும் (சிவமலர் அனந்தசயனன்) என்று பலர் வரிசையாக மனதுக்குள் வருவார்கள். இவர்களும் இவர்களுக்கு முன்னோடிகளான ஏனைய பலரும் மகாஜனாவின் புகழுக்குக் காரணகர்த்தாக்கள். இவர்களைப் போலவே இன்னொருவரும் இருந்தார், இவரும் மயிலங்கூடலூர் நடராஜனைப் போலத் தொழில் ஒன்றாயிருக்கத் திறமை ஒன்றாய்க் காட்டியவர். அவர் பெயர் ரி. பி.

எம். ஜி. ஆர் மாதிரி முதலெழுத்துகளால் மாத்திரமே அறியப்பட்ட ரி. பி. யும் எமது பள்ளிக்கூடத்தில் ஒரு முதுகெலும்பு. அவர் அண்மையில் காலமானார்
என்றறிந்தபோது மனது ஒருகணம் எழுந்துநின்று அஞ்சலி செய்தது. அவர் பள்ளிக்கூடத்தின் நூலகராக இருந்தாலும், அவரது சிந்தனை செயல் நடவடிக்கை எல்லாம் உதைபந்தாட்டம் தான். வடமாகாணத்தில் எந்தக் கல்லூரியிலும் நினைத்துப் பார்த்திராத சாதனையாக எட்டுவருடத் தொடர் வெற்றிவீரர் விருதைப் பெற்றது கல்லூரி, இவர் உழுத நிலத்தின் விளைச்சல் தான். இது எனது காலத்தில்தான் முடிவுற்றது. நான் பள்ளிக்கூடத்தில் இணையமுன் அகில இலங்கையிலும் ஒருதடவை வெற்றிவீரர்களாக வந்தனர் எமது வீரர்கள். அட, இந்தச் சாதனையை நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கையிலே கல்லூரி வீரர்கள், சுகததாஸா ஸ்ரேடியத்தில் அந்தச் சாதனையை நிலைநிறுத்தினர்.

இப்படியெல்லாம் அசாத்தியங்களைச் சாத்தியமாக்கிய ரி. பி. யிடம் ஒருவருடம் ஃபுற்போல், ஒருவருடம் ஹொக்கி பழகியிருக்கிறேன் என்பது வேறு கதை. அவரது ஆற்றல் பற்றி எங்கள் எவரிடமாவது சரியான மதிப்பீடு இருந்ததா என்பது பெரிய கேள்வி. எதிரணி எத்தனை பலமானதாக இருந்தாலும் மகாஜனா வீரர்களுக்குத் தலைவணங்கியே ஆகவேண்டும் எனில் அது என்ன மாயமா? இல்லையே. எதிரணியின் பலங்கள் பலவீனங்களை மதிப்பிட்டுத் தனது அணியை தயார் செய்த ஒரு பயிற்றுனராக ரி. பி. மாத்திரமே யாழ்ப்பாணத்தில் இருந்தார் என்றே நான் நினைக்கிறேன். ஐரோப்பிய நாடொன்றில் அவர் பிறந்திருந்து, ஒரு 'கிளப்'பில் மனேஜராக ஆகியிருந்தால் அவரது வருமானம் எதுவாக இருந்திருக்கும் என்பது எனது அறிவிற்கு எட்டவில்லை.

பாருங்கள், அசோக மரத்தில் தொடங்கி எங்கு வந்து நிற்கிறேன் என்று. மறுபடி அங்கேயே வருகிறேன். அசோக மரங்களின் அழகு வெறும் வார்த்தைகட்குள் சிக்காது. இலைகளின் பளபளப்பும் தலைநிமிர்ந்த தோற்றமும் வேறெந்த மரத்துக்கும் கிடையாது. இதனால் அந்த மரங்களின்மீது எனக்குச் சரியான காதல். எங்கள் வகுப்பறை அந்த மரங்களுக்கு அருகில் இருந்தபோது, எனது நண்பன் ஒருவனுக்கும் அசோக மரம் தொடர்பான காதல் ஏற்பட்டது. அது அசோகமரத்தின்பால் ஏற்பட்டதல்ல, அசோக மரம் தொடர்பான ஒரு சம்பவத்தால் ஏற்பட்டது. மரத்தின் பின் ஒருத்தி வர அதைத் தெரியாத (அல்லது தெரியாத மாதிரி நடித்த) இவன் இந்தப் புறமிருந்து அவளோடு போய் மோத ஏற்பட்டது பாருங்கள் காதல். அதுமாதிரி ஒரு காதலை நான் கண்டதில்லை.

அந்தக் காதல் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடசாலை வளைவையும் தாண்டி வளர்ந்ததென்னவோ உண்மைதான் என்றாலும், அசோக மரத்தடியில் தொடங்கியதாலோ என்னவோ அது சோகமயமாகிப் போய்விட்டது. அதற்குப் பிறகு அவன் கல்யாணம் செய்தான், அவளும் தான், இருவருமே பிள்ளைகள் பெற்றார்கள், பிறகு, இந்த உலகப்பந்தின் ஒவ்வொர் மூலையில் தொலைந்தும் போய்விட்டார்கள். ஆனால் அந்த அசோக மரம் இந்தக் கதைபோல எத்தனையைப் பார்த்திருக்கும்! நல்லவேளையாக அசோக மரத்துக்கு எமது மொழி தெரியாது. ஆனால் அந்தப் பயலைப் பாருங்கள், காதலில் தோற்றதுடன் கவிஞனாகிவிட்டான். நாலுபத்துப் பேர் அவனைப் பாராட்டவும் செய்தார்கள். தமிழ் இலக்கியத்துக்கு ஒரு அசோகமரம் தொண்டுசெய்த கதை இது.



படிப்பகம்

www.padippakam.com



கவிஞன் என்றதும் எங்கள் பள்ளிக்கூடத்தின் கவிஞர் பரம்பரை நினைவு வருகிறது. ஒரு பாடசாலையைக் கட்டி முடிப்பது என்ற உறுதி யோடு புறப்பட்ட பாவலர் துரையப்பாபிள்ளை முதல் மஹாகவி வரை, மஹாகவி முதல் சேரன் வரை ஒரு கவிதைப் பரம்பரை ஒரே மைதானத் தில் உதைபந்தாட்டம் ஆடியிருக்கின்றது; அந்தத் தேக்கு மரங்களின் வளர்ச்சியைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறது; உருவங்கள் மாறினாலும் அதே இடங்களில் தொடர்ந்த வகுப்பறைகளில் பாடங் களைப் பயின்றிருக்கிறது; காதல் கொண்டிருக்கி றது; வாழ்வின் முதல் அடிகளைப் பயின்றிருக்கி றது. இது ஏனைய பல பாடசாலைகளில் இருக் கமுடியாத சிறப்பு. இந்தப் பாரம்பரியத்தைப் பற்றிக்கொண்டே நானும் ஒருசில கவிதைகள் எழுதியிருக்கிறேன். அவற்றைப் படித்த ஆசிரியர் கள் உற்சாகப்படுத்தும் போதெல்லாம் இன்னும் எழுத உற்சாகம் தொற்றும். இன்றும் அந்த உற் சாகம் இருக்கிறது. அண்மையிலும், தாயகத்தில் நிகழ்ந்த ஒரு சிறுகதைப் போட்டியில் மகாஜன மாணவன் ஒருவன் முதற்பரிசு பெற்றதைக் கேள் வியுறும்போது அந்த இலக்கியப் பாரம்பரியம் இன்றும் தொடர்வதை என்னால் உணரமுடிகி றது. கவிதை என்று மாத்திரம் இல்லாமல் ஏனைய இலக்கியத் துறைகளிலும் சாதனைகள் புரிந்த அ.செ.மு., அ.ந.கந்தசாமி போன்றோர் போலவே இன்னும் பல ஆற்றல்களை மகாஜ னாவில் இருந்து காலம் எதிர்பார்க்கும். ஐரோப் பாவிலும் ஏற்கனவே வெளிவரும் மூன்று தமிழ்ச் சஞ்சிகைகளின் ஆசிரியப் பொறுப்புகளில் மகா ஜனன்கள் இருப்பதும் ஒரு பெருமை தரும் விச யம்.

அசோக வனத்தில் சீதை சிறைவைக்கப்பட்டது போல் எனக்கும் தொடர்பற்ற பல சிந்தனைகள் பாடசாலை தொடர்பாகவும், அந்த அசோக மரங்கள் தொடர்பாகவும் சிறைவைக்கப் பட்டிருக் கின்றன. இந்தச் சிந்தனைகளை இரைமீட்க நாம் நாடு திரும்பும் சமயத்தில்தான் முடியும். இப் போது, இடையிடையே சந்திக்கும் நண்பர்களும், திடீரென்று தொலைவில் இருந்து வரும் தொலைபேசிகளும்தான் அந்த நினைவை இரைமீட்க உதவுகின்றன. இதுவும் அப்படியா னதொரு சமயம்தான். இடம்பெயர்ந்தாலும், இடைஞ்சல்கள் வந்தாலும் தனது மண்ணை மகாஜன அன்னை மீளவும் அடைவாள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்போது அந்த வயற் காற்றும், அசோக மரங்களும் தம்மிடையே எத் தனை சோகங்களைப் பகிர்ந்துகொள்ளுமோ?

■

## நான் எழுதுவது புரிகிறதா உங்களுக்கு ?

யாழ்ப்பாணம்

எனக்குத் தெரிந்த
எந்த விலாசத்திற்கும்
இக்கடிதத்தை அனுப்பிப் பிரயோசனமில்லை.
ஆனாலும் இதை எப்படியும்
உங்களிடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை
என்னுள் உறுதியாக உள்ளது.

இங்கே முற்றத்து மல்லிகை
நிறையவே பூத்துள்ளது.
பகலில் தேன் சிட்டுக்களும்
இரவுகளில் பூமணம் சுமக்கின்ற காற்றும்
எங்கள் அறை வரையிலும் வருகின்றன.
அடிக்கடி எனக்குத் தெரியாத யாரெல்லாமோ
வீட்டுப்பக்கம் வந்து போகிறார்கள்.
ஆயினும் இன்றுவரை
விசாரனை என்று யாரும் வரவில்லை.

சின்ன நாய்க்குட்டி காரணமில்லாமலே
வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறது.
வாலைக் கிளப்பியபடி, எதையோ
பிடித்துவிடப் போவது போல.

விழித்திருக்க நேர்ந்துவிடுகிற இரவுகளில்
உங்களுடைய புத்தகங்களை
தூசி தட்டி வைக்கிறேன்.
அதிகமானவற்றைப் படித்தும் முடித்துவிட்டேன்.
உங்களுடைய அம்மாவின் கடிதங்களை
நான் பிரிக்கவேயில்லை.
அவை சுமந்துள்ள புத்திர சோகத்தை
என்னால் தாள முடியாது.

மேலும், அன்பே
எங்கள் மக்களின் மீட்சிக்காகவே
நீங்கள் பிரிந்திருக்க நேர்ந்துள்ளது
என்பதே எனக்கு ஆறுதல் தருவது.
இந்தத் தனிமைச் சிறை
தரும் துயர் பெரிது ஆயினும்
உங்களைப் பிரிந்தபின்
எதையும் தாங்கப் பழகியிருக்கிறேன்.

மேலும், இன்னொன்று,
இதுதான் மிகவும் முக்கியமாக
நான் எழுத நினைத்தது
நான் ஒன்றும் மிகவும் மென்மையானவளல்ல
முன்புபோல் அவ்வளவு விஷயம் புரியாதவளுமல்ல
நடப்பு விஷயங்களும் எதுவும்
நல்ல அறிகுறிகளாக இல்லை.
நீண்ட காலம் நாங்கள்
பிரிந்திருக்க வேண்டும் என்பது என்னவோ
நிச்சயமானதே. பின்னரும்
ஏன் இன்னமும் நான் வீட்டிற்குள்
இங்கே இருக்க வேண்டும்?
என்ன,
நான் எழுதுவது புரிகிறதா உங்களுக்கு?

- ஊர்வசி -

நன்றி : மரணத்துள் வாழ்வோம்



படிப்பகம்

www.padippakam.com



# Tவடிவில் இருந்தது வளர்ந்தது

தமக்காக மட்டும் வாழ்பவர்கள் மட்டமான மனிதர்கள். மற்றவர்க்காக வாழ்பவர்கள் மாமனிதர்கள். அத்தகைய ஆத்மாக்களையே உலகம் மகாத்மாக்களாக்கி மதிப்பளிக்கிறது.

தான் வாழ்ந்த சூழலில் வாழ்ந்த ஜனங்கள் வெறும் ஜடங்கள் ஆக அல்ல. மகாஜனங்களாகவே மாறவேண்டும் என்ற மனப்போக்கோடும், வித்தியாதாரப் பெருநோக்கோடும் ஈ.ஏ.துரையப்பா பிள்ளை என்ற மாமனிதர் பிரசவித்த பிள்ளைதான் இன்றைய பென்னாம்பெரிய மகாஜனாக் கல்லூரி.

1942ம் ஆண்டு தைத்திங்களில் அந்தப் பள்ளியில் துள்ளித் திரியும் சிறுவனாக என்னை எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அண்ணா இணைத்து வைத்த வேளையில் நான் மட்டுமா சின்னவன்? அளவிலும் அமைப்பிலும் அந்தப் பள்ளியும் கூட சின்னதுதான்! அந்தப் பள்ளியில் இருந்தது எட்டே எட்டு வகுப்புகள்தான். அந்தக் கல்லூரியின் அந்நாள் மாணவனால் எட்டித் தொடமுடிந்த இறுதி வகுப்புக்கூட எட்டுத்தான்.

சின்னப்பாபிள்ளை தலைமை ஆசிரியர். பருத்து உருண்டையான உருவம். கரகரத்த குரல், காரியத்தில் கண். துரையப்பாபிள்ளையின் மிகவும் கிட்டிய உறவினர்.

அன்றைய பாடசாலைக் கட்டிடம் "T"வடிவில் கல்லால் அமைந்து ஆதவனுக்கு ஓட்டல் உடல் மறைத்து அடக்கத்தோடு அமைந்திருந்தது. ஓடிவிளையாட விளையாட்டு மைதானமே இல்லை. நான் படிக்கையில் படிப்பித்த ஆசிரியர்கள் ஒன்பதின்மர். நலமணிகட்கிருந்த நன்மதிப்பு அவர்கட்கு மிருந்தது. நான் படித்த நாற்பதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் குருவையும் தெய்வமாகக் கொள்ளும் முறை இருந்ததென்று குதிரைவிடும் எண்ணம் எனக்கில்லை. குறைகாணமுடியாத தூய குருசிஷ்ய முறை இருந்தது என்பதையே சொல்ல விழைகிறேன். சேவை உணர்வோடு செயலாற்றிய ஆசிரியப் பெருமக்களை அச்சம் கலந்த மரியாதையோடுதான் நாங்களும் பார்த்தோம். கண்டிப்பு முறைகளையும் கையாண்டாலும் பாசப்பரிவோடுதான் அவர்களும் எங்களைப் பார்த்தார்கள். "சேர்" உடைய பேர்களையே சொல்லி பிள்ளை அழைக்கும் காலம் இது. ஆனால் "சேர்" முன்னின்று அவரது "பேர்" அல்ல "சேர்" சொல்லவே நாம் பயந்த நாட்கள் அவை.

இன்று இலங்கையில் ஓர் இணையிலாக் கலாசாலையாக விளங்கும் மகாஜனாக் கல்லூரியைச் சுற்றிலும் அன்று மாமரங்களும் தென்னைமரங்களும், கற்பகதரு எனக் கருதப்படும் பனைமரங்களும் தான் நிறைந்திருந்தது. ஆனால் பகுத்து ஆராய்ந்து படிப்பதற்கு ஒரு பரிசோதனைக் கூடம் கூட அன்று இருக்கவில்லை. பிள்ளைகள் கூடிப் பிரார்த்திக்க ஒரு மண்டபம் இருக்கவில்லை. வாசகர் பசிப்பிணிதீர்க்க வாசிகசாலைகூட இல்லாத சின்னக் கலாசாலை அது. இன்று அழகு மாடங்களைக் கொண்டிருக்கும் கல்லூரியில் அன்று ஒரு ஒழுங்கான மலசலகூடம் இருக்கவில்லை. 1945ம் ஆண்டில்தான் வடமாகாணக்கல்லூரிகள் ஒருங்கிணைந்து நடாத்திய போட்டியில் மகாஜனா கலந்து கொண்டது. விளையாட்டுக்கென பிரத்தியேக ஆசிரியர்கூடக் கிடையாது.

கவர்ச்சிகரமான தோற்றம், கம்பீரமான நடை. முகத்தில் நிலையான முறுவல். புருச லட்சணம்



படிப்பகம்

www.padippakam.com



அனைத்தும் கொண்ட ஓர் இளம் ஆசிரியர் வலிந்து முன்வருகிறார். நீண்ட நேரம் செலவழித்து நெடிந்து நேரான வெளியை (வெள்ளம் ஓடும் வாய்க்கால்) தேர்ந்தெடுக்கிறார். சில மாணவர்களின் துணையுடன் தூரங்களை அளந்து அவர் கோடடித்த காட்சி இன்றும் என் மனதில் நிற்கிறது.

மாலை வேளைகளில் நெடுநேரத்தை செலவிட்டு எங்களை நேர்கோட்டில் நிற்கவும், ஓடவும் பாயவும் பயிற்சி தருகிறார். போட்டியில் கலந்துகொள்ள இளம் (Junior) பிரிவில் நான் தெரிவாகி னோன். அந்த ஆசிரியப் பெருமகனார் எடுத்த விடாமுயற்சியாலும் கொடுத்த பயிற்சியாலும் 100, 200யார் ஓட்டப்போட்டிகளில் முதலாம் இடத்தையும், நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தையும் பெற்று பதின்மூன்று புள்ளிகளை முதன்முறையாக அன்னை மகாஜனாவுக்கு பெற்றுக் கொடுத்ததை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

அரங்கு இன்றி வட்டமாடமுடியாது என்றார் வள்ளுவப் பெருந்தகை. இந்த ஆசிரியப் பெருந்த கையோ விளையாட்டு மைதானமே இல்லாமல் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பணியில் வெற்றிபெற்றுக் காட்டினார். நிச்சயம் நீங்கள் ஆசிரியர் யார் என்று அறிவதில் ஆர்வலர்கள் ஆகியிருப்பீர்கள். அன்று எங்களை ஓர் நேர்கோட்டில் நிறுத்தியவர், பின்னாளில் பல்லாயிரம் மாணவர்களின் படிப்புத் திறத்தை இந்நாட்டில் உயர்த்தியவர் எங்கள் கல்லூரி ஸ்தாபகர் பெரியார் துரையப்பாபிள்ளையின் பெருவதம் பேறு -பின்னாள் கல்லூரி அதிபர் உயர்திரு. ஜெயரட்ணம் அவர்கள்தான்.

அன்று "T"வடிவில் அமைந்திருந்த சிறிய பள்ளி இன்று திகைப்பூட்டும் வளர்ச்சி பெற்றிருக்கும் பாரிய கல்லூரி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வளர்ந்திருக்கும் எங்கள் கல்லூரிக்கு பன்னிரெண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் ஓர் உறுதியான (பழைய மாணவர்)கிளை இருப்பது உவகை தருகிறது.

வாழ்க வளர்க மகாஜனா!

- இ. சிவசோதி -

## மலர்பற்றி..

1976 ம் ஆண்டு, அதிபர். திரு. பொ. கனகசபாபதி அவர்களின் காலத்தில் கடைசி மகாஜனன் மலர் வெளிவந்தது. அதன்பிற்பாடு வெளிவரவில்லை. நாட்டுச்சூழல் காரணம்.
லண்டன், கனடா கிளைகள் ஆண்டுதோறும் செய்திப்பத்திரிகையாக வெளி யிட்டு வருகின்றன.

இந்நீள் இடைவெளியை ஏன் நிறுத்தக்கூடாது என எம்மிற்சிலர் விரும்பிய தன் வெளிப்பாடே இம்மலர்.
பாரிஸ் பழையமாணவர் சங்கத்தினூடாக வெளிவரும் இம்மலரின், இதழாசி ரியர், மலர்க்குழுவினர் அத்தனைபேரும் மகாஜனா இலக்கியப்பரம்பரையிற் புதியவர்கள்.

புதியபேனாக்களின் புதிய அனுபவங்கள்..

இனிவரும் காலங்களில் மலர் மேலும் செழுமையுற, ஆக்கமும் ஊக்கமும் தருக என அனைத்து மகாஜனன்களையும், இலக்கியஅன்பர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

- மலர்க்குழு -

தொடர்புகளுக்கு :
*M. Sinnathurai*
*73, Rue Doudeauville,*
*75018 Paris.*



படிப்பகம்

www.padippakam.com



# இரண்டு அஞ்சலிகள்

- உ. சேரன் -

## குலநாதன் மாஸ்ரர்

குலநாதன் மாஸ்ரருக்கும் கவிதைக்கும் இருந்த தொடர்பு எனக்கும் உயர் கணிதத்துக்கும் இருந்த தொடர்பு ஒரு மாதிரித்தான். அவர் உயர்தரத்துக்கு, உயர்தரத்தில், உயர் கணிதம் கற்பித்தவர். கணிதம் ஒரு மொழி என்பார்கள். தமிழ் மொழியில் இருந்த ஆர்வம் எனக்கு அந்தக் கணித மொழியில் இருக்கவில்லை. அதனால் சம்பிரதாயபூர்வமாக குலநாதன் மாஸ்ரரிடம் நான் மாணவனாக இருக்க முடியவில்லை. ஒரே ஒரு நாள் மட்டும் அவருடைய வகுப்பறைக்குள் இருக்கவேண்டி நேர்ந்தது. அண்ணாவைத் தேடிக்கொண்டு அவனுடைய வகுப்பறைக்குள் போனபோது குலநாதன் மாஸ்ரர் இருந்தார். அண்ணா பின்வரிசையில், "வகுப்பு இன்னம் முடியவில்லை, இப்படி இரு" என்று முன் வரிசையில் அமர்த்திவிட்டார். "சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்த மாதிரி" அவர் படிப்பித்த உயர் கணிதத்தை பார்த்துக் கொண்டிருந்தேன்.

நெடுநாட்களுக்குப் பிறகு அவரோடு நெருங்கிய அறிமுகம் ஏற்படுவதற்குக் காரணம் கவிதை. ஒரு வகையில் ஆச்சரியம்தான். அதிபர் ஐயரத்தினம் காலமானபோது நான் வாசித்த அஞ்சலிக்கவிதையில் மிகுந்த ஈர்ப்புப்பெற்று என்னுடன் பேச ஆரம்பித்தார். மாலை பாடசாலை விட்டு வீடு செல்லும் வழியில் மகாஜனாக் கல்லூரியிலிருந்து அளவெட்டி புதுறோட் சந்திவரை அடிக்கடி ஒன்றாகச் சைக்கிளில் சென்ற ஞாபகமும் அடிக்கடி எழும். அவருடைய வெள்ளைச்சட்டை, வெள்ளைக் காற்சட்டை ஞாபகமும் எனக்கு மட்டுமல்ல மகாஜனா சமூகத்தவருக்கும் நல்ல பரிச்சயம்தான்.

அவருடைய "Trade Mark" ஆக இருந்த 'பிளேன்ரீயும், திறீறோஸ்' சிகரெட்டும் அவருடைய மாணவர்களில் புகழ்பெற்ற பலருக்கும் எவ்வாறு தொற்றிக் கொண்டது என்பது ஒரு சுவாரசியமான விசயம்தான்.

"நீ ஏன் உயர்தர வகுப்பில் கணிதம் படிக்கவில்லை?" என்று ஒருமுறை கேட்டார். "அண்ணாவும், தம்பியும் அதைத்தானே உங்களிடம் படித்தார்கள். நான் வேறு எதையாவது படிப்போமே என்று யோசித்தேன்-" என்று அவருக்குச் செல்லிய ஞாபகம்.

மகாஜனாக் கல்லூரியில் இரண்டு வகையான ஆசிரியர்கள் இருந்தார்கள். முதல் வகையினர் பெரிய சரீரமுடையவர்கள், மற்றவகையினர் பெரிய சாரீரம் உடையவர்கள். குலநாதன் மாஸ்ரருக்கு இரண்டும் இருக்கவில்லை. மென்மையும் நளினமும்தான் அவருடைய இயல்பாக இருந்தது. இந்த இயல்போடு கணிதம் எப்படிச் சேதனாபூர்வமாக இணைந்து கொள்ள முடிந்தது. எனக்கு இன்னும் ஆச்சரியம்தான்.

சென்ற வருடம் அவருடைய மகன் குலராஜனை லண்டனில் சந்தித்தபோது மாஸ்ரர் பற்றிய ஞாபகங்கள் கிளர்ந்தன. யாழ்ப்பாணத்தில் அவரைக் கடைசியாகச் சந்தித்தபோது அங்கு தளர்ந்து போயிருந்தார். இந்திய இராணுவம் இருந்த நேரம். யுத்தத்தாலும் அழிவுகளாலும் அவரும் நொந்து போயிருந்தார்.

மரணம், சுழல்காற்று மாதிரி எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு செல்கிறது. இப்போதைய வாழ்க்கையில் நிச்சயமானதாக இருப்பது மரணம் ஒன்று மட்டும்தான். எனினும் உயர்ந்த இறவாது "அய்யனே மகனாகி வளர்ந்து, உயர் வெய்தித்" தம்முடை எச்சங்கள் வழியாகத் தொடர்ந்தும் வாழ்வார்கள். அந்த வகையில் வாழ்க்கை முடிவிலி. அது உயர் கணிதத்துக்குள்ளும் அடங்காது.



படிப்பகம்

www.padippakam.com



## ஆசிரியர் கதிரேசர்பிள்ளை

மகாஜனாக்கல்லூரிக்கு வளமான கல்விக் கலாச்சாரமும் செழுமையான இலக்கியப் பாரம்பரியமும் இருந்தன என்பதை இப்பொழுது மறுபடியும் நினைத்துப் பார்க்கிறபோது பிரமிப்பாக இருக்கிறது. மகாஜனாக்கல்லூரிச் சூழலூடாக இலக்கிய வாதிகளாகப்பரிணமித்தவர்களின் பட்டியல் மிக நீண்டது. கவிஞர் ஒருவரால் தொடங்கப்பெற்று வழிநடாத்தப்பெற்ற கல்லூரி என்பதில் இந்த நீண்டபட்டியல் குறித்துப் பெருமைப்பட முடியாது. எனினும் மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களாக வும் அதே நேரம் இலக்கியவாதிகளாகவும் இருந்த பலரை நாம் இழந்துவருவதும்தான் துயரம். சென்ற வருடம் கவிஞர். செ. கதிரேசர்பிள்ளையவர்களை மகாஜனாச் சுற்றமும் தமிழிலக்கிய உலகும் இழந்துவிட்டது.

ஈழத்தின் மறுமலர்ச்சிக்கால இலக்கியம் என்று வழங்கப்படும் நாற்பதுகளில் கவிஞராகப் பரிணமித் தவர் ஆசிரியர் செ. கதிரேசர்பிள்ளை அவர்கள். மேடைநாடகங்களுக்கு மகாஜனாக் கல்லூரியில் புகழ்மிக்க ஓரிடத்தை நிரந்தரமாக ஏற்படுத்தியவர் அவர். "பாரதம் தந்த பரிசு" என்ற தலைப்பில் அவருடைய நாடகங்கள் நூல்களாக வெளிவந்துள்ளன.

ஆசிரியர் கதிரேசர்பிள்ளையவர்கள் தமிழாசிரியர். சைவமும், தமிழும் பிழையறக் கற்றவர். பழைய இலக்கியங்களை மட்டுமல்லாமல் நவீன தமிழிலக்கியத்தையும் இறுதிவரை படித்துப் பேணியவர்.

சிறுவயதில் எங்களுடைய தமிழறிவை மெருகூட்டியவர்களில் அவருக்கு ஒரு தனியிடம் உண்டு. கவிதையில் நாங்கள் யாப்பை மீறியபோது -"தெரிந்து மீறுவது சிறப்பு. தெரியாமல் மீறுவது விபத்து என்று சொன்னது மட்டுமல்லாமல் யாப்பையும் இடையிடை ஊட்டியவர்.

அவருடைய நடைசிவருடங்களில் கண்பார்வை முற்றாக அற்றுப்போனமைதான் அவருடைய மகத்தான துயரமாக இருந்தது. அந்த நாட்களில் புதிய புத்தகங்களையும், புதிய கவிதைகளையும் வாசிக்கும்படி கேட்டுக்கொள்வார். அவருடைய வீட்டில் விசாலமான வெளிவிறாந்தையில் நீண்ட சாய்வு நாற்காலியில் சரிந்திருந்தபடி அவர் "புதிய இலக்கியம்" கேட்பது இன்றைக்கும் ஒரு உறைநிலைப் படிமம் போல மனதில் எழுகிறது. நாங்கள் ஒன்பதாம் வகுப்பில் இருந்தபோது அவர் எங்களுடைய சமய ஆசிரியராக இருந்தார். ஒன்பதாம், பத்தாம் வகுப்புகளில் மாணவர்கள் "படுகுழப்படியாக" செயற்படுவது வழக்கம்.

முன்னைநாள் டெனிஸ் மைதானத்துக்கு அருகில் பஞ்சநாதன் மாஸ்ரருடைய இரசாயனக் கூடத்துக்கு அடுத்ததாக இருந்த இரண்டு வகுப்பறைகளில் ஒன்று எங்களுடையது. ஒரு நாள் டெனிஸ் மைதானத்தில் இறந்த காகம் ஒன்று வீழ்ந்து கிடந்தது. தலை குப்புற கீழாக, இறக்கைகள் விரிந்து சிதறிய நிலையில் அந்தக் காகத்தின் அகாலமரணம் அவலம் தருவதாக இருந்தது.

அன்று காலை சமய வகுப்புக்கு வந்த ஆசிரியர் கதிரேசன்பிள்ளையவர்களின் கண்ணிலும் முதல் பட்டது இந்தக் காகம்தான். அன்று எங்களுக்கு வகுப்பு நடக்கவில்லை. நான்கு கேள்விகளை கரும்பலகையில் எழுதி விடையெழுதும்படி சொல்லிவிட்டு மேசையில் அமர்ந்துவிட்டார். பெரிய அமைதி. நாங்கள் விடையெழுதுவதில் மும்மரம்.

பாடம்முடிய ஐந்து நிமிடங்கள் இருக்கின்ற வேளை எங்களுக்குக் கிடைத்தது ஒரு கவிதை. இறந்த காகத்தைப்பற்றி அவர் எழுதிய ஒரு உருக்கமான கவிதை. ஆழமும் உணர்வும் செறிய அவர் வாசித்தார். காகம் பாடல் பெற்ற காகமாகப் போயிற்று.

அவர் தயாரித்த நாடகங்களில் நடித்த பலருக்கும் அவருடைய நாடக ஆளுமை தொற்றிக்கொண் டது. கந்தசாமி, அருண்சபேசன், கோகிலா போன்ற அந்தக் காலத்து உயர்தர மாணவர்கள் அவருடைய நாடகங்களில் சிறப்புப் பாத்திரங்களாக, பாரதக் கதாபாத்திரங்களாக "கொடிகட்டிப் பறந்தமை" இன்றும் அழியாத கோலங்களாக உள்ளன. எங்களுடைய சிறிய வயதில் இந்தக் கதாபாத்திரங்கள் எம்மிடம் ஏற்படுத்திய தாக்கத்தை இப்பொழுது நினைத்துப் பார்க்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



"அம்பனைக்கு முன்னே அடிக்கும் வயற்காற்றில்
கொம்பிலுப்பி பூக்களினைக் கொட்டும் முடைவாகை
நம்புதிய வெற்றிக்கு நாலுமலர் சூட்டுகின்ற வாணியின் வீடு"

என்று மஹாகவி மகாஜனாக் கல்லூரியைப்பற்றி முன்பு ஒருமுறறை எழுதியிருந்தார். வாகை மரங்களும் இப்போது இல்லை .அம்பனை வயல்வெளியும், மகாஜனாக் கல்லூரியும் அளவெட்டியும் இப்போது எங்களிடம் இல்லை. அவை திரும்பி எம்மோடுவரும். ஆனால் கதிரேசர்பிள்ளை ஆசிரியருக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்காதது துயரம்தான்.

■

# கதிரேசனின் சிறுவர் பாடல்கள்

## பொந்திற் கிளியும் பூதனும்

1.
வயலருகே நின்றபல
தென்னைகளில் ஒன்று
புயலடித்து வட்டு வீழப்
பட்டுப் போச்சு தின்று

2.
பட்டமரப் பொந்தினிலே
கூடமைத்துக் கொண்டு
முட்டையிட்டு வாழ்ந்தனவே
பச்சைக்கிளி ரண்டு.

3.
அந்தவழிச் சென்றபூதன்
பொந்திற் கிளி கண்டான்
அந்திவேளை வந்தவற்றைப்
பற்றமனங் கொண்டான்.

4.
ஆசையுடன் பூதனங்கு
மாலையிலே சென்றான்
ஓசையின்றி ஏறியந்தப்
பொந்தருகே நின்றான்.

5.
உள்ளிருந்து கிளியிறகு
கோதுமொலி கேட்டான்
துள்ளும்மனத் தோடுகையைப்
பொந்தில் மெல்லப் போட்டான்.

6.
சத்தமின்றி பற்றவரும்
கையைக்கிளி கண்டு
கொத்திட்வே பூதன்மிக
நொந்தலறிக் கொண்டு

7.
கையெடுத்த போதில்மற்றக்
கையின் பிடி நழுவ
பையனவன் வீழ்ந் துருண்டான்.
மண்ணையுடல் தழுவ.

8.
ஓலக்குரல் கேட்டசிலர்
ஓடிவந்து பார்த்தார்
காலொடிந்த பூதன்நிலை
கண்டுவீட்டிற் சேர்த்தார்.

S. Cathiresarpillai
Kathiresanin Siruvar pádalkall
(Tamil children poems)
1993
Mrs. Puvaneswary Chathiresarpillai
Mrs. Puvaneswary Chathiresarpillai
Priorensgade 32 . 1 th
5600 Faaborg
Denmark



படிப்பகம்

www.padippakam.com



# நெருடல்

- புவனன் -

குணாளனின் அலறல் அந்தத்தகரக் கொட்டகை முழுவதையுமேயே அதிரவைத்தது. முதலாவது பாடம் முடிந்து இரண்டாவது பாடம் தொடங்கியும் இன்னும் குணாளனைக் காணவில்லையே என்று தவித்துக்கொண்டிருந்த எங்களில் பலர், அந்த அலறலால் திடுக்கிட்டோம்.

எங்கள் வகுப்பறையிலிருந்து பார்த்தால் பெருமாள் மாஸ்டரின் அறை தெரியும். பெருமாள் மாஸ்ரர் எங்கள் கல்லூரி கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியர்.

இப்போ அவரை நினைக்கும்போது இதயம் இனம்புரியாத வலி எடுக்கிறது.

எனக்குப் படிப்பித்த ஆசிரியர்களுள் எனக்குப் பிடித்தமானவர்களில் ஒருவர். ரீச்சேர்ஸ்மாரின் பிள்ளை என்றோ, ஊரில் யாராவது பணக்காரர்களின் பிள்ளை என்றோ யாருக்கும் தமிழ் வாசிப்புக்குக் கூடின மார்க்ஸ் போடமாட்டார். எந்த நேரமும் ஒரே சுறுசுறுப்பு, முகத்தில் ஒரு வித சோகமும் இடையிடையே படரும், குடும்பக் கஷ்டமோ தெரியவில்லை.

வேலைப்பழுவில் ஞாபகமறதியும் சற்று அதிகம்தான். எங்கள் வகுப்பில் படிப்பித்துக்கொண்டு நிற்பார். யாராவது வந்து ஏதாவது அலுவல் என்றால், கையில் வைத்திருந்த புத்தகத்துடனேயே அப்படியே போய்விட்டு, திரும்ப வரும்போது மாறி அடுத்த வகுப்பில் போய் நின்று கேள்விகள் கேட்பார். இப்படிச்சம்பவங்கள் பல.

இரண்டு வருஷத்துக்கு முதல், தெல்லிப்பழைச் சந்தியால் சைக்கிளில் போய்க்கொண்டிருந்த போது, பலாலியிலிருந்து ஆமி அடிச்ச ஷெல் விழுந்து செத்துப்போனாராம்.

இப்பவும் அவரின் "உஷ்" சத்தமும், வேட்டியைத் தூக்கிக்கொண்டு, ஒரு கையில் பிரம்பையும் ஆட்டியபடி அவர் நடந்து போற காட்சியும் கண்ணுக்குள்ள வந்துவந்து போகிறது.
பாவம் பெருமாள் மாஸ்ரர்.

நாங்கள் கொஞ்சப்பேர் - அதாவது குணாளனின் நண்பர்கள் - பெருமாள் மாஸ்டரின் அறையை எட்டிப்பார்த்தோம். ஒவ்வொருத்தர் பின் ஒவ்வொருவராக ரெயில் பெட்டி போலவும், ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும் நின்றோம்.

பெருமாள் மாஸ்டரின் கையில் பிரம்பு, பக்கத்தில் குணாளன் மாமா, "டேய் உண்மையைச் சொல்லிப்போடு, இல்லாட்டால் தோலை உரிச்சுப் போடுவன்" மாமாவும் பெருமாள் மாஸ்ரரும் மாறி மாறி அடித்துக்கொண்டிருந்தார்கள். அலுமாரி ஒன்றுக்கும் சுவருக்கும் இடையிலான ஒரு மூலையில் குணாளன் முழங்கையாலும் முதுகினாலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடிக்கொண்டிருந்தான்.



படிப்பகம்

எனக்கென்னவோ இரண்டுபேரிலுமே கோபம் கோபமாக வந்தது. ஒன்றில் பெருமாள் மாஸ்டர் அடித்திருக்க வேண்டும்., இல்லாவிட்டால் மாமா அடித்திருக்கவேணும். என்ன இருந்தாலும் தலைமை ஆசிரியருக்கு முன்னால் மாமா கையை நீட்டியது ரொம்ப அநியாயமாகவே பட்டது. இவர் பிறகு ஏன் இங்க கூட்டிக்கொண்டு வந்தவர்?

குணாளன் செய்தது பிழை பிழைதான். சரி, வீட்டில் இருந்த காசை எடுத்தான். பத்தாததிற்கு பக்கத்தில இருந்த சபாவின்ர சமூகக்கல்விப் புத்தகத்தை எடுத்து பின்வாங்கில இருக்கிற ஞானத் துக்கு விற்றிருக்கிறானே! முட்டாள் பயல்,
ஆனாலும், வீட்டில்எடுத்த காசு பிடிபட்டு, மாமா ஸீக்கிறற்றாக பெரிய இன்வெஸ்ரிகேஷன் நடாத்தித்தான் சமூகக்கல்விக்களவும் பிடிபட்டது. ஒரு விதத்தில மாமா கெட்டிக்காரன்.

"என்னென்ன எடுத்தனி? எங்கை எங்கை எடுத்தனி? கெதியா லிஸ்ற் போடு". இது பெருமாள் மாஸ்ரர்.

மாமாவும் மாஸ்ரரும் களைத்துச்சோர்ந்து அவனை என்னசெய்யலாம் என்று ஆறுதலாக யோசித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

குணாளன் கைக்கு பென்ஸிலும் பேப்பரும் கொடுக்கப்பட்டது.

வீட்டில் இருந்து
- முதல் நாள் - 100 ரூபாய்
- இரண்டாம் நாள் - 150 ரூபாய்
- சமூகக்கல்வி விற்றகாசு - 4.50

ம்... ஆறுரூபா ஐம்பது சதப் புத்தகத்தை நீர் நாலம்பதுக்குக் கொடுத்திருக்கிறீர். சரிசரி, பெருமாள் மாஸ்டர் கிண்டலாக....

அதற்கிடையில் திரும்பவும் மாமாவின் கை குணாளனின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

"ஸேர் இவன் வீட்டில இருந்து ஐநூறு ரூபா எடுத்திருக்கிறான்!"

"இல்ல ஸேர் நானூற்றம்பது ரூபாதான் எடுத்தனான்."

"அட கடவுளே! ஒரு மாதச் சம்பளம். இதை என்னடா செய்தனி?
பெருமாள் மாஸ்ரர் தலையில் கைவைத்தார்.

அடுத்த லிஸ்ட்.

இப்போ அடி குறைந்து அமைதியாக இருந்தது. குணாளனும் அழுகையை நிறுத்தியிருந்தான். எப்படியோ விஷயம் ஒரு முடிவுக்கு வந்தது போல.

எட்டு "ரெனிஸ் போல்" - 72 ரூபா.

"இரண்டு கிழமைக்குள்ள என்னத்துக்கடா எட்டுப்பந்து?"

பெருமாள் மாஸ்ரருக்கு என்ன விளங்கும் இப்பத்தையில் பந்துகளைப் பற்றி, ரெண்டு அடியோட சரி, மூண்டாவது 'ஸிக்ஸ்' என்று அடித்தால் முன்னுக்கு நிக்கிறவனின் கைக்குள்ள நிக்குது. போதாதற்கு பந்துகளை வீட்ட கொண்டு போற பயத்தில, மேசைத்தட்டுகளுக்கு கீழேயோ அல்லது எங்காவது மரங்களுக்குள்ளயோ ஒழிச்சு வைச்சிட்டுப் போனால், இந்த "ஹொஸ்டல்" பொடியள் எடுத்து பந்தின்ர கலரை மாத்திப்போட்டு தங்கட ஆக்கிப்போடுவாங்கள், சண்டை பிடிச்சும் பிரயோசனமில்லை.

இது பற்றி மாமாவுக்கு ஓரளவு விளங்க, சரிசரி என்று பெருமாள் மாஸ்ரரைப் பார்த்து தலையை அசைத்தார்.

www.padippakam.com



"சரி. மிச்சம்?"

"கடையள்ள சாப்பிட்டனான் ஸேர்...."

"என்ன இவ்வளவுத்துக்குமோ?"
இல்ல ஸேர் தன்ர சினேகிதர்களுக்கும் வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்று மாமா ஒரு அடிபோட, எங்கயடா உன்ர சினேகிதர்மார்.. கூப்பிடு அவங்களை என்றார் பெருமாள் மாஸ்ரர்.

நெஞ்சு 'பக்'கென்றது. ஆளை ஆள் பார்த்து முழுசினோம்.

யாருக்குத் தெரியும் இவன் களவெடுத்த காசெண்டு. ஐஸ்கிறீம் என்ன... கன்ரீன்ல சாப்பாடு என்ன.....
அவனும் வாங்கித் தந்தான். நாங்களும் சாப்பிட்டம். இப்படித் தலையிடி வருமெண்டு தெரிஞ்சிருந் தால் சத்தியமாய் கிட்டவே போயிருக்கமாட்டம்.

குணாளன் லிஸ்ற் போட்டு முடியவில்லை,

போண்டா 35 சதம் தர எட்டு சமன் 2, 80.
ரீ 15 சதம் தர ஆறு சமன் 90.
...........
..............

இப்படிக் கணக்குப்போட்டு நானூற்றி ஐம்பத்தி நாலுரூபாவுக்குக் கணக்குக் காட்டிறதெண்டால் என்ன விளையாட்டே?
குணாளன் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தான்.

மறந்து போயிருந்த பெருமாள் மாஸ்ரர், கெதியா உன்ர சினேகிதர்மாரைக் கூட்டிக்கொண்டு வா என்றார் திரும்பவும்.

நாங்கள் ஆறுபேர் வரிசையாகப் போய் நின்றோம்.

இதற்கிடையில், யாரோ வந்து அவசர அலுவல் என்று பெருமாள் மாஸ்ரரைக் கூட்டிப்போக, இந்தா வாறன் என்று விட்டு அவரும் போய்விட்டார்.

குணாளன் தான் போட்ட லிஸ்ற்றை எங்கள் ஒவ்வொருவராகக் காட்டிக் கொண்டு வந்தான்.
அவனது முகமெல்லாம் சிவந்து வீங்கிப்போய் இருந்தது. கேவியபடி நின்று கொண்டிருந்தான். பார்க்கப் பாவமாக இருந்தது.
நல்லவேளை, என்னுடைய பெயருக்குப் பக்கத்தில் ஒரு போண்டா - 35 சதம் என்று மட்டும் இருந்தது. தப்பினேன்.

பொக்கற்றுக்குள் இருந்த 35 சதத்தை எடுத்து அவன் கையில் திணித்து என்னுடைய பெயரை வெட்டி விடு என்றேன் காதுக்குள்.

அவன் அதை வாங்கிக்கொண்டு என்னைப் பார்த்த அந்தப் பரிதாபப் பார்வை ....

ஓ !

புறங்கையால் கண்ணீரைத் துடைத்தபடி, விக்கிவிக்கி அழுதான். ஒரு கையில் பென்ஸில், மறுகையில் தாள். தாள் முழுவதும் கண்ணீரால் நனைந்து போய்......

இப்போது நினைக்கும் போதும் எனக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது.
சாப்பிட்ட போண்டாவோ, ஐஸ்கிறீமோ அல்ல. என்னுடைய ஈனச்செயல் தான்.

- புவனன் -



படிப்பகம்

www.padippakam.com





# கந்தசாமி மாஸ்ரர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பல சாதனைகளைப் புரிந்த எத்தனையோ மேதாவிகளின் வாழ்க்கை வரலாறுகளை அறிஞர்கள் நூல் வடிவில் வடித்துள்ளனர். திரு. வை. கந்தசாமி அவர்கள் அத்துணை மேதாவியாக சாதனைகளைச் சாதித்திராவிடினும் இலைமறைகாயாக அவர் ஆற்றிய நற்பணிகளை குறிப்பிடுவது அவசியமாகிறது.

மகாஜனாக் கல்லூரியின் கணித ஆசிரியரும் சாரணப் பொறுப்பாளருமான திரு. கந்தசாமி மாஸ்டர் அவர்கள் 30. 10. 91 ல் கொழும்பில் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி எங்கள் பலருக்கு அதிர்ச்சியையும் துயரையும் ஒருங்குசேர வரவழைக்கும் என்பதில் ஐயமில்லை. மந்த நிலையில் இருந்த மகாஜனச் சாராணீயம் கந்தசாமி மாஸ்டரின் வரவால் உயிர்த்தது. அவரது அயராத முயற்சியினால் 1978 ல் 6 சாரணர்கள் "ஜனாதிபதி விருது" என்கின்ற அதி உன்னத சின்னத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெயர் சேர்த்தனர்.

உயரத்திலும் தோற்றத்திலும் கம்பீரமான மனிதர். குழந்தை உள்ளம். மாணவர்களோடு மிக அன்பாகப் பழகுவதன் மூலம் பலரையும் கவர்ந்தவர். சாரணியப் பாசறைகளின் போது தானும் ஒரு சாரண சிறுவன் போல் அரைக்காற்சட்டை அணிந்து உணவு பரிமாறுவதும், சாரணச் சிறார்களுடன் கோப்பை நீட்டி வரிசையில் நிற்பதும் என்றும் எம் நெஞ்சை விட்டகலாத காட்சிகள். 1979 ம் ஆண்டு கிளிநொச்சியில் எம்மால் அமைக்கப்பட்ட சாரணப் பாசறையில் நாம் நடாத்திய "MAGIC" நாடகத்தில் (சிறிய பொருளைக் கொடுத்து அதே பொருளை பெரிதாக வாங்கல்) ஒரு சிறிய பையனைக் கொடுத்து மாற்றும்போது தான் ஒரு பெரிய மனிதனாக வந்து எம்மையெல்லாம் அசரவைத்தார்.

1980 ல், சிரமதானப் பணிமூலம் எமது பாடசாலையின் அயல் கிராமங்களின் வீதிகள், கோவில்கள், வைத்தியசாலை என தானும் முன்நின்று 5500 மணித்தியாலங்கள் அயராது உழைத்து மகாஜனா சாரணர்களின் பெயரை யாழ்மாவட்டத்தில் ஆழப் பதியவைத்தார்.

1980 ம் ஆண்டு உதவி மாவட்ட ஆணையாளர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதற்கான பயிற்சியை மிரிகமவில் பெற்றார். 1981ல் காங்கேசன்துறை உதவி மாவட்ட ஆணையாளாராக நியமனம் பெற்றார். 1982 ல் இடமாற்றம் என்ற பெயரில் மகாஜனாவை விட்டு அளவெட்டி அருணோதயாக் கல்லுரிக்கு மாற்றல் ஆனார். அங்கும் தமது பணியினைத் தொடர்ந்து சிறப்புறச் செய்தார்.

இன்று எம்மைவிட்டு மறைந்துபோன, கந்தர் என்று எம்மால் அன்பாக அழைக்கப்படும் இந்த மனிதருக்கு சாரணர்கள் சார்பாக என் இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறேன்.

- ச. சுதர்சன் -



படிப்பகம்

www.padippakam.com



# BEST SOCCER COACH IN SRI LANKA
# எங்கள் ரி.பி. காலமானார்



## அமரர் T.பத்மநாதன்

(உதைபந்தாட்டப் பயிற்சியாளர்,
நூலகப்பொறுப்பாளர்.
தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி)

**தோற்றம்: 10.02.1934**
**மறைவு: 06.11.1992**

மகாஜனாக் கல்லூரியின் உதைபந் தாட்டப் பயிற்சியாளர் திரு T.P. பத்மநாதன் 6.11.92 அன்று மாரடைப்பால் காலமானார். "மகாஜன" என்கின்ற கிராமத்துப் பாடசாலையை உதைபந் தாட்ட வெற்றிகளின் மூலம் அகில இலங்கையிலும் புகழ் பரவி நிற்கச் செய்தவர், திரு T.P.பத்மநாதன். 1960 ஆம் ஆண்டிலிருந்து மகாஜனாவின் நூலகப் பொறுப்பாளராகவும், உதைபந்தாட்ட, கொக்கி பயிற்சியாளராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றவர் T.P. கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண் டாலும் தெல்லிப்பழையைத் தன் சொந்தக் கிராமமாக ஏற்று கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கல்லூரிக்கும், கிராமத்திற்கும் என்றும் வற்றாத புகழினைத் தேடித் தந்தவர்.

மகாஜனாக் கல்லூரி இரண்டு ஆண்டுகள் அகில இலங்கை உதைபந் தாட்ட சாம்பியன்களாகவும், தொடர்ந்து எட்டு முறை(1967-1974) முதலாம் பிரிவு யாழ் சாம்பியன்களாகவும் 1 ஆம், 2ஆம், 3ஆம் பிரிவுகள் ஓரே வருடத்தில் யாழ் மாவட்ட சாம்பியன்களாகவும், வெற்றி பெற்றவைகளை T.P. பெற்றுத்தந்த வெற்றியின் சிறு பகுதியாக நினைவு கூர்வோம்.

அவரின் திடீர் மறைவால் துயருறுகின்ற மனைவி, பிள்ளைகள், பல்லாயிரக் கணக்கான உதை பந்தாட்ட ரசிகர்கள் ஆகியோருடன் நாமும் எங்கள் அனுதாபங் களை பகிர்ந்து கொள்கிறோம்.

## கண்ணீர் அஞ்சலி

புகழ் பூத்த எம் கல்லூரியின்
புகழ் மிக்க சாதனைகளின்
ஒப்புயர் வில்லா நாயகனே!
இறுக்கமான போட்டி யொன்று
விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தவேளை
'கோல்' ஒன்று போனது போல்
அதிர்ந்தன எம் நெஞ்சம்-நீர்
மறைந்து போன செய்தி கேட்டு.
சிதைந்து போன தேசத்திலும் -நீவிர்
சிருஷ்டித்த வீரர்கள்தான் எத்தனை! எத்தனை!

'சுகததாஸ விளையாட்டரங்'கிலும்
ஒரு கிராமத்து மின்னலா!
வியந்து நின்றன விழிகள்!!
ஆம்! தெல்லிப்பளை கிராமத்திலிருந்து
குடாநாடு மட்டுமல்ல
சுகததாஸ திடல் வரை
வெற்றி கொண்ட வேந்தனே
நீர்
அகில இலங்கை ரீதியிலும்
உருவாக்கிய வீரர்கள்தான் எத்தனை பேர்!
உமக்கோ,
வயதுதான் ஐம்பது.
ஆனாலும்
எட்டி ஒரு அடிவைத்து
தலை உசுப்பி ஒரு உச்சு உச்சி
நிமிர்கையில்,
உதைபந்தாட்டக் களத்திலே -உம்
மாணவனே அதிர்ந்து போவான்.

கல்லூரிச் சரித்திரத்தில்
சாகா வரம் பெற்ற நாயகன் நீர்.

மகாஜனாவின் புகழுக்கு
ஒருவர் அதிபர் ஜெயரத்தினம் என்றால்
இன்னொருவர் T.P.தான் என்று
எங்கள் சரித்திரம்
காலம் காலமாய்ச் சொல்லும்.

நீர் விதைத்த விதைகள்
விழுதுகள் பரப்பி
வியாபித்துக் கிடக்கின்றன.

நாளைய மகாஜனாவின்
ஒவ்வொரு வீரனும்
உதைபந்தாட்டக் களம் புகுகையில்
உமது பெயரை உச்சரித்த வண்ணமே
புகுவான் என்பதில் ஐயமில்லை.
இது நிச்சயம்!



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# இரத்தக் கண்ணீர்

- மாதினிராஜ் -

ஆற்றின் கரையில் செதுக்கப்பட்டிருந்த கல் ஒன்றின் மீது அமர்ந்து முழங்கால்களை மடித்து இரண்டு கைகளாலும் கால்களைக் கட்டிக்கொண்டு அந்தி வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் அபிராமி. அந்தி வானத்தின் சிவந்த நிறம் கோபம் கொண்ட சூரியனைத்தான் அவளுக்கு நினைவூட்டியது. வெறிச்சோடிக்கிடந்த வானத்தைப் பார்த்ததும் வாழ்க்கையில் எதுவித பிடிப்பும் இன்றி நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தன்னையே ஒரு கணம் நினைத்துக் கொண்டிருந்தாள். ஆழமானதொரு பெருமூச்சு அவள் உடலின் உள் இருந்து வெளிவந்தது. அவளது உள்ளமும் வெறிச்சோடித்தானே கிடக்கின்றது. இத்தனைக்கும் அவள் திருமணமாகி முழுசாக மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை. புதுமணத் தம்பதிகளாய் உல்லாசமாக வாழவேண்டிய வாழ்க்கையை அவளே நரகமாக்கிக் கொண்டிருந்தாள். பொறுமைமிக்க அவளின் கணவன் அவள் செய்கைகளுக்கெல்லாம் வளைந்து கொடுத்து தனது வேதனையைத் தனக்குள்ளேயே அடக்கி சந்தோஷமாக வாழ்வது போல் நடித்துக் கொண்டிருந்தான்.

கடந்த ஆறுமாதங்களுக்கு முன்... அவள் துள்ளி ஓடும் புள்ளிமான். கலகலத்து ஓடும் மலை அருவி. உல்லாசமாய்ப்பறந்து திரியும் வெள்ளைப் புறாவாகத்தான் இருந்தாள். இப்போது அமைதியான நீரோடையாகவே மாறிவிட்டாள். "எடுத்ததற்கெல்லாம் துடுக்காகப் பேசாதே. நீ பெண்பிள்ளை மற்றவர்கள் வாயாடி என்று சொல்வார்கள்" அவளின் அன்னை இப்படி அடிக்கடி அவளைக் கண்டிப்பதுண்டு. அவளோ "போங்கம்மா, பெரியவர்கள் என்றால் அவர்கள் எந்தத் தப்புச் செய்தாலும் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டுமா? தவறைத் தவறென்று சுட்டிக் காட்டும்போது எனக்கு வாயாடிப் பட்டம் கிடைத்தாலும் பறுவாய் இல்லை". மீண்டும் வாயாடி விட்டுப் போய்விடுவாள். தாயார் தலையில் அடித்துக் கொள்வாள். இவள எப்படித்தான் ஒருதன்ர கையில பிடிச்சுக் கொடுக்கப்போகிறனோ.. கடவுளே நீதான் காக்கவேணும். இது தாயின் முணுமுணுப்பு. அப்படிப்பட்ட அபிராமியின் வாயால் வார்த்தை வராதா என ஏங்கும் அளவிற்கு ஊமையாக மாறிவிட்டிருந்தாள்.

அந்தச் சம்பவம்....... கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு நடந்த அந்தச்சம்பவம்...... இந்தப்பிறவியில் என்ன? ஏழு பிறவியிலும் அவளை ஊமையாக்கி உள்ளத்தை உருக்குலையவைத்து, அவள் தாயிலும் மேலாக நம்பி இருந்த ஆண்டவன் மேலும் அளவற்ற கோபத்தை அவளுக்கு உண்டு பண்ணியது. விடிந்தால்ப் போதும் குளித்துவிட்டு பூக்கொய்து சாமிக்கு வைத்து ஊதுபத்தி மணக்க மணக்க அரைமணிநேரமாவது வணங்கும் அவள், இன்று சாமியறைப் பக்கம் தலை காட்டுவதும் இல்லை. வணங்குவதும் இல்லை. ஏன் இப்படிச் செய்தாய்? நாங்கள் யாருக்கு என்ன துரோம் செய்தோம்? மனத்தால் கூட மற்றவர்களுக்குத் துரோகம் நினைக்காது உன்னையே நம்பி இருந்த எங்களுக்கு இந்தத் தண்டனை ஏன்? பதில் கிடைக்குமட்டும் நான் நிம்மதி இன்றி நித்திரை இன்றித் தவிப்பேன் "பதில் சொல்லமாட்டாயா"? அடிக்கடி மனத்தால் மானசீகமாக ஆண்டவனைக் கேட்டுக் கொள்வாள்.

அவளையே பூனைக்குட்டிபோல் சுற்றிச்சுற்றி வரும் தம்பி அன்று "அக்கா! அத்தானின் கடிதம் வந்திருக்கு ஒரு மாதத்தால் வாறேனாம். ஒரு மாதத்திற்குள் நாட்குறிக்கவேண்டும். திருமணத்தை ஜாம் ஜாம் என்று நடத்துகிறேனா இல்



படிப்பகம்

www.padippakam.com



லையா பார்" துள்ளிக்குதித்தபடி சொன்னான் அவளுக்குத் திருமணப்பதிவாகி ஒருவருடம் ஓடி விட்டது. வெளியூர் சென்ற அவளது கணவன் திருமணம் செய்வதற்காக வருவதாய் அறிவித்தி ருந்த கடிதம் அது. அபிராமி கடிதத்தைப் பிரித் துப் படித்தபோது" அம்மா! அத்தான் வாறார் என்றதும் அக்காவின் முகத்தைப் பார்த்தியா? எப்படிச் சந்தோஷத்தில் மலர்கிறது. நாங்களும் இருக்கிறம். சிரித்தால் வாய்நோகும், நடந்தால் கால் நோகும் என்று செல்லமாக வளர்த்தம், பலன் இல்லை. அத்தான் தான் இவளுக்கு எல்லாமாகி விட்டார்". குறும்பாகப் பேசிய தம் பியைத் துரத்தியபடி அவள் ஓட அவன் அம்மா வின் பின்னால் போய் நின்று கொள்கிறான். சமயலறைக்கு வந்து, நீ சமைக்க வேண்டாம். நாளைக்கு நீ கலியாணம் செய்துகொண்டு போய் விடுவாய். நானும் அம்மாவும் தானே சமைப் போம். நீ எங்களை விட்டுப்போய் விடுவாயா? அத்தானை எனி வெளியூர் போகவேண்டாம் என மறியக்கா. நிச்சயமாய் உன்னைப் பிரிந்து நான் இருக்கமாட்டேன். அதற்கு முதல் நான் போய்விடுவேன். உன்பிரிவை என்னால் தாங் கமுடியாது. எனக் கறண்டியைப் பறித்தபடி அவன் சொல்ல, அப்படிச் சொல்லாதையடா! என இவள் அவன் வாயைப்பொத்த இருவருக் கும் இடையில் அம்மா வந்து விலக்குப்பிடிக்க, அப்பப்பா! இவை எல்லாம் மறக்கக்கூடியவையா? என்ன? அபிராமி சாப்பிடாமல் அவன் சாப்பிட் டதே இல்லை. "அவள் கோயிலால் வரநேரம் செல்லும் சாப்பிடடா" என அம்மா சொல்வாள். அம்மா உனக்குப்பசித்தால் சாப்பிடு. அக்கா வோடு சாப்பிட்டால்தான் எனக்குப் பசி தீரும், என்பான். அவள் கோவிலால் வந்ததும் இருவ ருமே சேர்ந்து சாப்பிடுவார்கள். அபிராமி தலை இடி என்று சொன்னால் வீட்டையே இரண்டுப டுத்திவிடும் அவன் இன்று இல்லையே. அவளுக் காகவே பிறந்து அவளுக்காகவே வாழ்ந்து அவளுக்காகவே சிரித்த அவன். அவளை விட்டு ஒரு கணத்தில் பிரிந்து விட்டதை அவளால் மறக்கமுடியுமா? எங்கே பார்த்தாலும் அவன் குரல். எங்கே கேட்டாலும் அவன் சிரிப்பு. எதிலும் எப்பவும் எதைப்பார்த்தாலும் அவன் முகம் தான் அவளுக்குத் தோன்றும். வேறு எதுவும் அவள் கண்ணுக்குத் தெரிவதும் இல்லை. வேறு எதுவும் உலகில் இருப்பதாக அவள் எண்ணுவதும் இல்லை.

அன்று சிவன் இராத்திரிவிரதம் அனுஷ்டித்து மறுநாள் காலை சாப்பாட்டிற்கு அழைத்தபோது. "அக்கா! நீ நேற்று முழுவதும் சாப்பிடாமல் விர தம் இருந்தனி. முதலில் சாப்பிடு என்று அவன் சொல்ல. "இரண்டுபேரும் ஒண்டாச் சாப்பிடுவம் கெதியாக் குளிச்சிட்டு வாடா? அபிராமி சொன் னாள். அவன் கண்டிப்பாக மறுத்து அவளைச் சாப்பிடவைத்து மாம்பழமும் வெட்டிக்கொடுத் துவிட்டுக் குளிக்கச் சென்றான். குளித்துவிட்டு அவன் உடைமாற்றிச் சாப்பிட அமர்ந்தபோது பக்கத்து வீட்டுச் சின்னம்மாக்காவின் குரல் பெரிதாக ஒலித்தது. "எடதம்பி ஆமியள் வாறாங் களாமடா. முதலில நீ ஓடு, உன்னை ஆரும் காட்டிக் குடுத்திடுவினம். "தாய் நாட்டிற்குச் சேவை செய்தாலே சாவை எந்நேரமும் சந்திக்கத் தயாராக இருக்கும் இடமல்லவா யாழ்ப்பாணம். "சரவணன் பயப்படவே இல்லை". அக்கா! ஆமி யள் சரவணைப்பக்கமா வெட்டியண்டும் சுட்டண் டும் வாராங்களாம். வாங்க வங்கருக்குள்ள போவம்.... என்றான். அபிராமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதிர்ச்சியும், பயமும் மேலிட அதிர்ச்சியைத் தாங்கமுடியாத இதய நோயாளியான அம்மாவையும் அழைத்துக் கொண்டு வங்கருக்குள் போனாள். சரவணனோ நீங்க இங்கேயே இருங்க. அவங்கள் சரவணை யால வாறாங்கள் எண்டு மற்றச் சனங்களுக்குச் சொல்லிப்போட்டு வாறன். அம்மாவும் அபிரா மியும் தடுத்தும் கேளாமல் ஓடிப்போனவனை அவள் மீண்டும் உயிருடன் பார்க்கவே இல்லை. கண்டதுண்டமாக வெட்டப்பட்டு இறந்து கிடந்த நிலையில் ஒரு நிமிடமேனும் தனது தம்பியின் சடலத்தை அவள் பார்க்க அயலவரிடம் அனுமதி கிடைக்கவே இல்லை. ஆமி மீண்டும் வருவதற் குள் அவள் வீட்டுத் தோட்டத்திலே அவசர அவசரமாக அவனை அடக்கம் செய்துவிட்டு அம்மாவும் அவளும் கதறக்கதற அருகே உள்ள பிள்ளையார் கோவிலுக்கு அயலவர்கள் உறவி னர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டாள். அன் னியரின் கையால் அமரத்துவம் அடைந்த தம்பி யிடமே தானும் போகத் துடித்தாள் அபிராமி. அம்மா அனாதையாகி விடுவாளே எனத்தவித் தாள். இயமனாக வந்த இராணுவத்தினரால் இளம் சிறார்கள் வெட்டப்பட்டதும், துண்டாடப் பட்டதும், அனாதரவாக கிணறுகளுக்குள் புதைக் கப்பட்டதும், அனாதரவாக எரிக்கப்பட்டதும் அவளது இதயத்தில் அசுர வெறியை ஏற்படுத்தி யதை அம்மா அறிந்து கொண்டாள். தன்வாழ் வில் எல்லாமே முடிந்துவிட்டது என நினைத்த அபிராமியை மாற்ற எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட்டன. தாயாரின் கண்ணீர் தோய்ந்த முகம் அவளைக் கதிகலங்க வைத்துக்கொண்டே இருந்தது. தற்கொலை செய்து கொள்வதிலும் பார்க்க இயன்றளவு வெறியர்களைப் பழிதீர்ப்பது மனத்திற்குத் திருப்தியைத் தரும் என எண்ணி னாள்.

ஆனால் அனாதையாகி ஆதரவற்று அவளையே அணைத்தபடி இருந்த நோயாளியான அன்னை யின் முகம் அவளைத் தடுத்தது. துடித்தாள், துவண்டாள். சரவணனுடன் தானும் சென்றிருந் தால்..... வேதனை இல்லையல்லவா? அவளை அவன் கூட்டிச்செல்லாதது அவன் குற்றமா? இல்லை. ஆண்டவனின் குற்றமா? "நீ என்னை



படிப்பகம்

www.padippakam.com



விட்டுப் போகுமுன் நான் உன்னைவிட்டுப் போய்விடுவேன் என்று அன்று அவன் கூறியது உண்மையாகிவிட்டதே" வாய் தவறி வருபவை கூட வாழ்வில் பலித்துவிடுகின்றதே. நடந்தவை எல்லாம் கனவாகத் தோன்றின அபிராமிக்கு.

"எடி பிள்ளை நீயும் இப்படியே இருந்தா, அவள் மீனாட்சி என்ன செய்வாள் பாவம்தானே. புருஷனையும் சாகக்கொடுத்திட்டு உங்களை எத்தனை கஷ்டபட்டு வளர்த்துப் படிக்கவைச்சவள். இப்ப பலாப்பழம் போல ஆம்பிளைப்பிள்ளையையும் திண்டு போட்டலல்லே இருக்கிறாள். ம்.... அவள் குடுத்து வைச்சது அவ்வளவுதான். அவள் உன்ர மாமாவோட இருக்கட்டும், நீ அவர் வாறாராம் கலியாணத்தைச் செய்தண்டு போமகன. கொஞ்சநாள் வெளிநாட்டில போய் இருந்தா எல்லாம் மறந்திடும். யாழ்ப்பாணத்தில செத்தவீடு நடக்கிறது சாதாரணமாய் போச்சு. கலியாணவீடு ஒண்டு நடக்கிறதான் புதினம்". நீ போயிட்டுப் பிறகு வந்து அம்மாவோட இரன். சொல்லுறத்தைக் கேள், பிடிவாதம் பிடிக்காதைபிள்ளை. அவன் பொடியனும் உன்னை நம்பித்தானே கலியாணத்தை எழுதிப்போட்டும் போனவன். பக்கத்து வீட்டுப் பாட்டியின் புத்திமதியைத் தொடர்ந்து "எப்படியும் செத்தவீடு ஒய்ந்து மூன்று மாதம் கழியாம தாலிகட்டக்கூடாது. மூண்டு மாதம் கழிஞ்சதும் ஒரு கோயிலில கொண்டேத் தாலியைக் கட்டினாக் குற்றமில்லை". அபிராமியின் மாமானாரின் குரல் உறுதியாக ஒலித்தது. பைத்தியம் பிடித்து விடுமோ என அஞ்சினாள் அபிராமி. இரண்டு கைகளாலும் தலையை இறுக்கிப் பிடித்துக் கொள்கிறாள். இப்போது அவளின் அனுமதிக்காக யாரும் காத்திருக்கவில்லை. மூன்று மாதங்கள் கழித்து வந்த அவளது கணவன் சாதாரணமுறையில் கோவிலில் தாலியைக் கட்டிவிட்டான். நாடுவிட்டு நாடு சென்றால் ஞாபக மறதி ஏற்பட்டுவிடுமா? உள்ளம் மாறிவிடுமா? நினைவுகள் செத்துவிடுமா? பாசம் தான் பறந்து போய் விடுமா? அபிராமியின் மனத்தில் அந்தப் பயங்கர நிகழ்வுகள் இன்னும் பசுமையாகவே இருந்தன. கண்களில் கொப்பளித்த கண்ணீர் கன்னங்களூடே வழிந்து அவளின் ஆடையை நனைத்துக் கொண்டிருந்தது. கற்சிலைபோல் இருந்த அவளை அந்தநாட்டு வெள்ளையர்கள் அனுதாபத்துடன் பார்த்து ஏதோ பேசிக்கொண்டே சென்றனர். எதையும் சட்டை செய்யாமல் இருந்த அவளின் தோள்களை அன்புடன் பற்றிய கணவனின் கைகளை மெதுவாக விலக்கிவிட்டு எழுந்தபோது........

"அபிராமி இனியும் என்னால் பொறுக்க முடியாது. பிறந்த அன்றே யாவரும் இறப்பது என்பது இறைவனால் வகுக்கப்பட்ட நியதி. சரவணன் இப்போது போய்விட்டான். நாமும் இன்னும் கொஞ்சக்காலமோ, கொஞ்ச நாட்களிலோ போகப் போகின்றோம். இறைவன் வகுத்த விதியை யாராலும் வெல்ல முடியாது". அரவிந் கூறிமுடிக்குமுன், "பிளீஸ் அந்த இறைவன் பெயரை தயவு செய்து இன்னும் உச்சரிக்காதீர்கள்". என்றபடி அவனின் வாயைப் பொத்தினாள் அபிராமி. அபிராமியின் வேதனையைப் புரிந்துகொண்ட அரவிந், அபிராமி! உன்னைப் போலவே எல்லோரும் அழுது கொண்டிருந்தால் உலகம் உலகமாக இருக்காது. வெறும் சுடுகாடாகத்தான் மாறிவிடும் நடந்ததை யெல்லாம் மறந்திட்டு, மனதைத் தேற்றிக்கொள். அதுதான் படித்தவர்களுக்கு அழகு. "அரவிந் கூறியபோது" எதையும் இலகுவில் சொல்லிவிடலாம். கடைப் பிடிப்பதுதான் கஸ்ரம்" என்றவாறு அவனோடு சேர்ந்து நடந்து கொண்டிருந்தாள் அபிராமி. அரவிந்தின் வாழ்வில் தன்னால் சந்தோஷத்தைக் கொடுக்க முடியவில்லையே என்ற வேதனை அவளது உள்மனத்தை உறுத்தத்தான் செய்தது. ஆனால் அவளால் சந்தோஷமாக வாழமுடியவில்லையே. சரவணன் போன அன்றே அவளது சந்தோஷத்தையும், கலகலப்பையும் முழுமையாக அல்லவா கொண்டு போய்விட்டான்.

இரவு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் அரவிந். பக்கத்தில் படுத்திருந்த அபிராமியைப் பார்த்தான். அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இன்பமாகச் செல்லவேண்டிய அவனது வாழ்வில் இப்படி ஓர் இடி, திருமணப் பதிவின் போது பளபளக்கும் பட்டாம் பூச்சியாய் இருந்த அபிராமி இன்று வலுவிளந்து வாடிவிட்ட மலராகத் துவண்டு கிடக்கிறாள். குழந்தைபோல் தூங்கும் அவளது கன்னங்களில் கண்ணீரின் ஈரப்பசை இன்னும் மாறவே இல்லை. அவளை மகிழ்ச்சிப்படுத்த அவன் எடுத்த அத்தனை முயற்சிகளும் தோல்வியில் தான் முடிந்தன. புரண்டு படுக்கும் போது அபிராமியின் கை அரவிந்தின் தோள் மேல் பட்டது. அவளின் கைகளைப்பற்றி முத்தமிட்டு விட்டுத் தூங்கிவிட்டான் அரவிந்.

சிலமணிநேரம் கழித்து அவள் அவனை உலுக்கினாள், அத்தான்? பயமாக இருக்கிறது. அம்மா கத்திறா, சரவணன் செத்துவிட்டானாம். உண்மையாய் செத்துவிட்டானா? என்று அழுதபடி அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அரவிந்திற்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் முடிந்து விட்டன. அம்மா! தம்பி. இதுதான் பாடம் என எண்ணியவன் ஆத்திரத்தில் அவளின் கைகளை விலக்கிவிட்டான். மீண்டும் அவள் அணைத்த போதும் அப்படியே செய்தான். அவள் என்ன நினைத்தாளோ விலகிப்படுத்துக் கொண்டாள். மறந்தும் அவன் பக்கம் வரவே இல்லை. இருவரும் உறங்கிவிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



அரவிந் விழித்தபோது அபிராமி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். நேரம் காலை ஏழு மணி. அவள்தான் வழமையாக அவனை எழுப்புவாள். இன்று அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவளின் தூக்கத்தைக் கெடுக்காமல் எழுந்த அரவிந் "அவள் பயத்தினால் இறுக அணைத்தபோது கைகளை விலக்கி அப்பால் எடுத்தெறிந்து, தான் மிருகத்தனமாக நடந்தது கொண்டதை எண்ணி வேதனைப்பட்டான். தன்னை எண்ணி வேதனைப்பட்டவன் குனிந்து அவளது நெற்றியில் முத்தமிட்டான். என்ன! பனிப்பாறையில் முத்தமிட்டதுபோல் இருந்தது அவனுக்கு. அபிராமியின் உடல் ஜில்லிட்டு விறைத்துக் கிடந்தது. உடனே மின்சார விளக்கைப் போட்டான். அபிராமியின் கண்களிலிருந்து கோடிட்டிருந்தது வெறும் கண்ணீர் அல்ல? இரத்தம். ஆமாம் இரத்தக் கண்ணீர்தான் அங்கே வடிந்திருந்தது.

அரவிந் அலறினான். அபிராமியை நினைத்து நினைத்து கட்டிடமே அதிரும் வண்ணம் கதறினான். அரவிந் கண்களில் தூசு பட்டாலும் பொறுக்கமாட்டாத அருந்ததி மௌனமாகக் கிடந்தாள். அவளின் செவ்விதழ்கள் இனித் துடுக்காக வார்த்தைகளைக் கொட்டாது. அவளின் கைகள் இனி அவனை அணைக்கப் போவதும் இல்லை. அவளின் கண்கள் இதுவரை வடித்த கண்ணீர் போதுமென்று இறுதியாக இரத்தக்கண்ணீருடன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. பாசத்தில் துடித்துக்கொண்டிருந்த அவளது இதயம் நிரந்தரமாகவே ஓய் வெடுத்துக் கொண்டது. அவளின் படுக்கையில் கட்டிலுக்குமேல் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த யேசுநாதரின் படம் அவனைப் பார்த்து ஏதோ கூறியது. எந்தப் பாவமுமே அறியாத அபிராமிக்கு இந்த முடிவு ஏன்? அரவிந்தின் மனத்தில் இந்தக்கேள்வி எழத்தான் செய்தது?

- முற்றும் -

(1992 ம் ஆண்டு, பாவலர். துரையப்பாபிள்ளை நினைவாக எமது சங்கத்தால் நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியின் போது பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதை)



## மொழிச் சமத்துவம் வேண்டும்

இந்த நாட்டிலுள்ள இரு மொழிகளுக்கும் சமத்துவம் வழங்கப்படவேண்டும். இந்த விடயத்தில் தமிழர் உறுதியாகவும் பிளவுபடாமலும் ஒன்றாக நிற்கின்றனர். நாம் வேறோரினத்தினால் தன்மயமாக்கப்படுவதையோ அகத்துறிஞ்சப்படுவதையோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எமது மொழிக்கு இரண்டாந்தர நிலை வழங்கப்படுவதை நாம் நிராகரிக்கிறோம். எமது தேசிய உணர்வு தூண்டப்பட்டுள்ளதால் நாம் எமது உரிமைகளை விட்டுக் கொடுத்து இணக்கம் காண ஆயத்தமாக இல்லை. நாட்டைப் பிளவுபடுத்தக்கூடிய இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பு அனைவரையும் சார்ந்துள்ளது. இதற்கான தீர்வு முற்றுமுழுதாகப் பெரும்பான்மை யோரிடம்தான் உள்ளது என்பது எனது நம்பிக்கை.

திரு. தெ. து. ஜயரத்தினம்-
Daily News-21. 12. 1955



படிப்பகம்

www.padippakam.com



## AN APPRECIATION OF THE LATE MR. C. SINNATHAMBY

Affectionately Thamby to his friends and relatives, Sinnathamby was Master to his pupils. It is almost 8 years since late Mr. C. Sinnathamby went on his last journey, but the memory of him is still fresh in the minds of all who knew him. He had passed away suddenly in Tellippalai. The news was received with great shock and tremendous loss to his relations, friends and pupils.

He had his early education at Jaffna College. He graduated from the Srilanka University in 1945, with M.A. Diploma in Education (special subject English).

He joined Mahajana College Tellippalai in 1947 and continued until his retirement in 1970. In 1962 he was appointed as the Vice Principal of the College. He was one of the Srilankan most accomplished dedicated teachers for over 35 years. He loved his pupils with confidence and his art of teaching was unique in many ways.

He had trained many students in English stage dramas and in English elocution contests, got first places in college, district and in all Srilanka competitions.

He married Miss. Nadarajah Kanageswary in 1953 and blessed with 2 sons and one daughter. He had a marvelous teaching brain that had taken him to the highest position in Mahajana. His greatest and most outstanding contribution to the College can be said to be that he was interested in all the extra curricular activities.

The rapid growth of Mahajana was his hard work. His special field was teaching English as a Foreign Language. He had a kind and supportive wife and had special affection and love for his children.

He was a gentleman and did lots of good work to the College and outside. He was a devoted hindu and had deep and abiding faith in God. He liked the company of friends. He was always prompt, punctual, devoted and disciplined.

He had lived well, lived as a good family man, a good friend to all and a useful Citizen.

K. RAJADURAI



படிப்பகம்

www.padippakam.com



# ஏக்கம்

- சி. ராதாகிருஷ்ணன் -

B.B.C தொலைக்காட்சி ஒளிபரப்பில் இந்தியா இங்கிலாந்து கிறிக்கற் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இங்கிலாந்து பந்து வீச்சாளர்களின் பந்துகளை எல்லாம் இந்தியாவின் இளம் துடுப்படி வீரர் சச்சின் தெந்துல்கார் விளாசித் தள்ளிக் கொண்டு இருந்தார். சோபாவில் சாய்ந்தபடி இருந்த குமாரின் மனம் அதை ரசிக்கவில்லை. பதினான்கு வருடங்களுக்கு முன் கல்லூரி வாழ்க்கைக்கு விரைந்து சென்றது.

அந்தக் கல்லூரி வளாகத்தைச் சுற்றி உள்ள மாமரங்களுக்கும், தேக்கு மரங்களுக்கும் மட்டும் தான் தெரியும் குமாரும் ஒரு சிறந்த துடுப்படிவீரன் என்று. அவற்றுக்கு மட்டும் பேசும் சக்தி இருந்தால் இன்று அவனுக்காக அவை சாட்சி சொல்லும். மதியவேளை சாப்பிடுவதோ பாதி, விரைவாக நண்பர்களுடன் அன்றைய A.B. வகுப்புகளுக்கிடையிலான மட்டப்படுத்தப்பட்ட ஓவர் கிறிக்கட் ஆட்டம் ஆரம்பித்து விடும். குமார்தான் ஆரம்ப துடுப்படி வீரன். அன்றைய அந்த கல்லூரியின் மூத்த கிறிக்கற் ஆட்டக்காரர் "சுல்தான்" தான் அவனுக்கு இம்பிரேசன். அவரைப் போலவே பந்தை தடுத்து ஆடி மிகவும் மெதுவாக ரண் எடுப்பான். ஆட்டம் இழக்காமல் இறுதிவரை ஆடுவான்.

ஓர் நாள் உடற்பயிற்சிப் பாடவேளை. கல்லூரி கிறிக்கற் அணிக்கு பொறுப்பான ஆசிரியர் வந்தார். கிறிக்கற் பற்றி நிறையப் பேசினார். சர்வதேச கிறிக்கற் உலகின் பேச்சை எடுத்து விட்டு இந்திய வீரர் சுனில் காவஸ்கரை பற்றி நித்தியிடம் ஒரு கேள்வி கேட்டார். மேற்கிந்திய தீவின் வீரர்களைப்பற்றி செந்திலுடன் பேசினார். குமார் தன்னிடமும் ஏதேனும் கிறிக்கற் பற்றி கேட்பார் என்று தவித்தான்., கேட்கவே இல்லை. பெரிய இடத்துப் பிள்ளைகளுக்குத்தான் கிறிக்கற்போலும் என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டான்.

அன்று மாலை 17 வயதிற்கு உட்பட்ட கிறிக்கற் அணிக்கு பயிற்சி ஆரம்பமாக இருக்கிறது, யார் இந்த வகுப்பில் நன்றாக கிறிக்கற் விளையாடுவீர்கள் என வினாவினார் ஆசிரியர். சேர் குமார் நன்றாக பட்டிங் செய்வான் என்று கோபி சிபார்சு செய்ய, ஆசிரியர் ஏளனப்பார்வையுடன் யார் இவனா என்றார். அவரின் கேள்வியில் தப்பில்லை. குமாரின் ஏழ்மைத் தோற்றம் அப்படி.

மாலைவேளை வந்ததும் அணிக்குப் பொறுப்பான அந்த ஆசிரியரும் பயிற்சியாளரும் வந்தனர். அவர்களுடன் முதல் வகுப்பு சுபேதனும் வந்தான். சுபேதனும் பயிற்சியாளரும் நண்பர்கள் போல் சிரித்து மகிழ்ந்தார்கள். சுபேதனின் தந்தையும் ஒரு உள்ளூர் தனவந்தர் என்றபடியால் பயிற்சியாளரும், சுபேதனிடம் நட்புடன் பழகிக் கொண்டதில் ஆச்சரியமில்லை. கூடவே மோகன், யோகன் போன்றோருடன் கீழ் வகுப்பு சச்சியும் இருந்தான். குமாரைப்போலவே சச்சியும் ஒல்லியான ஏழ்மையின் பிரதிநிதி. பயிற்சியாளரின் கட்டளைப்படி சுபேதன் முதலில் துடுப்பாட அனுமதிக்கப்பட்டான். யோகன் இந்தியாவின் கபில் தேவ் போன்று மிடுக்காக பந்துகளை வீசினான். குமாரும் ஓடி ஓடி பீல்டு செய்துகொண்டிருந்தான். வேறுயாருக்கு பந்து வீசத்தெரியும் என்று பயிற்சியாளர் கேட்டபோது, குமார், தெரியாது பற்றிங் மட்டும் செய்வேன் என்றான். சச்சி சொன்னான் என்னால் பந்து வீசமுடியும் என்று , சச்சி பந்து வீச அனுமதிக்கப்பட்டான். சச்சியின் இடது கை சுழல் பந்து வீச்சு துடுப்படி செய்தவர்களைத் திணறவைத்தது. எல்லோரும் நன்றாகக்களைத்து விட்டார்கள். சூரியன் மாமரத்தினுள் மறைந்து கொண்டிருந்தான். இருள் கவ்வத்தொடங்கிற்று. பயிற்சியாளர்களின் கட்டளைப்படி குமார் இறுதியாக பட்டிங் செய்ய அழைக்கப்பட்டான். இரண்டு ஓவர் மட்டுமே! குமாருக்கு இருட்டில் ஆடுவது போல் இருந்தது. பந்து வரும் திசை தெரியவில்லை. குமாரினால் சரியாக ஆடமுடியவில்லை, பன்னிரெண்டு பந்துகளில் மூன்று பந்து விக்கற்றுகளை சரித்து விட்டது. பயிற்சியாளர் ஏளனமாகச் சிரித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



நாட்கள் நகர்ந்தன. மாலைவேளை பயிற்சியின் போது சுபேதனும் வேறுசிலரும் தான் ஆரம்ப துடுப்படி வீரர்கள். குமார் இருட்டு நேர துடுப் படி வீரன். அணித்தேர்வு நடைபெற்று குமார் எதிர்பார்த்தபடியே பயிற்சியாளர் சிபார்சினால் சுபேதனுக்கு அணித்தலைவர் பதவியும் கிடைத் தது. சச்சியையும் சேர்த்து கொண்டார்கள் ஒரு ஸ்திரமான இடது கைச்சுழல் பந்து வீச்சாளர் தேவை என்ற காரணத்திற்காக. குமார் பதில் ஆட்டக்காரர் ஆகவேனும் தேர்வு செய்யப்பட லாம் என்று எதிர்பார்த்தான். அதுவும் நடக்க வில்லை.

ஒரு நாள் மாலைவேளை பயிற்சி நடைபெற்றுக் கொண்டு இருந்தது, ஒரு புதிய முகம். பிரபல கொழும்பு கல்லூரியில் இருந்து வந்தது. அங்கு அவர் தலைசிறந்த ஆட்டக்காரராக இருந்தவ ராம். உண்மை எப்படியோ எவருக்குமே தெரி யாது. அந்த நாட்களில் கல்லூரிகளில் இப்படி ஒரு நிலை இருந்தது கொழும்பின் பிரபல கல் லூரிகளில் படித்து விட்டு இங்கு வருபவர்கள் தங்களை வித்தியாசமானவர்களாக காட்டிக் கொள்ள முனைவதும் அவர்களை தட்டிக்கொ டுக்க ஆசிரியர்களும், வேறுசிலரும் தவறுவ தில்லை. இந்த வகையில் முரளியும் ஒரு கிறிக்கற் "கீறோ" ஆக்கப்பட்டான். முரளியின் வருகை யால் குமாருக்கான பதில் ஆட்டக்காரர் என்ற நிலையும் போனது. அன்று முதல் குமாரின் கிறிக்கற் கனவுகள் சிதைந்து போயிற்று. கூடவே விளையாட்டுத் துறையின் ஆர்வமும் நின்று போனது.

தொலைக்காட்சியில் சச்சின் தென்துல்கார் சதம் அடித்து விட்டு மகிழ்ச்சியில் துள்ளி குதிக்கின் றார், ஆனால் குமாரினால் அதை ரசிக்க முடி யவில்லை ஏக்கம் நிறைந்த பெருமூச்சை விட்ட படி தன் கல்லூரி நினைவில் இருந்து மீண்டு, வேலைக்கு செல்ல ஆயுத்தமானான்.

முற்றும்

## இலங்கை சாகித்திய மண்டலத்தில் கௌரவிக்கப்பட்டார் வித்துவான் நா.சிவபாதசுந்தரம்.

எமது கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகக் கடமைபுரிந்து இளைப்பாறியவரும், அதனது ஆரம்பகால வளர்ச்சியிலும், மாணவர்களுக்கு தமிழ்மொழி, இந்து சமய அறிவினை வளர்ப்பதிலும் அயராது உழைத்த வித்துவான் நா.சிவபாதசுந்தரம் அவர்கள் 10.5.92இல் கொழும்பில் நடைபெற்ற சாகித்திய மண்டல விழாவில் கௌரவிக்கப்பட்டார். எமது கல்லூரிக் கீதத்தினையும், கொடிவணக்கப் பாட்டினையும் இயற்றித் தந்த எமது மதிப்புக்குரிய வித்துவான் ஆசிரியருக்கு, பழைய மாணவர்களாகிய நாங்களும் எங்களின் வாழ்த்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

டாக்டர் ஆறு அழகப்பன் - பேராசிரியர்; தமிழியல்த்துறைத் தலைவர்; முதன்மையர், இந்திய மொழிப்புலம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - அவர்கள் சிவபாதசுந்தரரைப்பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"புலவர் நா.சிவபாதசுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர். தமிழ்ப் பற்றும் எழுத்து வேட்கையும் மிகக் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர். பேராசிரியர் கா.சுப்பிரமணியபிள்ளை, பன்மொழிப் புலவர் தே.பொ.மீனாட்சிசுந்தரனாரிடம் பயின்றவர். புறப்பொருள் வெண்பாமாலையையே தம் வாழ்நாள் ஆராய்ச்சியாகக் கொண்டவர்.

"புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி" யெனும் பெயரில் விரிவான உரையெழுதி 1972ஆம் ஆண்டில் நூலொன்றைத் தமிழுலகிற்கு அளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர், சி.கணேசையர், விபுலாநந்த அடிகள், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை என்னுஞ் சான்றோர்கள் வரிசையில் வைத்தெண்ணத்தக்க பெருமைக்குரியவராக இந் நூலாசிரியர் திகழ்கின்றார்."



படிப்பகம்

www.padippakam.com



# திருக்குறளில் உலகநெறி

புலவர், பொருணூல் விற்பனர்,
நா.சிவபாத சுந்தரனார் அவர்கள்,
தொல்புரம், சுழிபுரம்.

திருவள்ளுவர் அருளிய அறநெறிகளுக்கு நிலைக்களம் உயிரும் உலகுமாம். உலகம், நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்துங் கலந்த மயக்கம் என்பது தொல்காப்பியம். எனவே உலகும் ஒரு கலப்புப் பொருள் என்பது பெறப்படுகிறது. உலகமும் உலகியற் பொருள்களும் தோன்றி நின்று மறையுங் காரணத்தால் செயற்படுபொருளாகின்றன. செயற்படுபொருள் எனவே, செய்வோன் ஒருவன் உண்டென்றும், அவனே கடவுள் என்ற முழுமுதற் பொருள் என்றும் பழந்தமிழர் மேற்கொண்டனர். அதனால் அவனை "உலகு இயற்றியான்" என்றும், "உலகு படைத்தோன்" என்றுங் குறித்துச் சொல்வராயினர்.

மனித உடம்போடு கூடி உறையும் உயிருக்கு மனம் என்ற நுண்ணியதொரு கருவி உண்டு எனப் பண்டையோர் கண்டுள்ளனர். அஃது உடம்பு தோன்றுவதற்குரிய மூலப்பொருளால் ஆகியது என்றும், எனினும் அஃது உடம்பாகாது, உயிருமாகாது, இரண்டிற்கும் வேறாய் உடனாய் நிற்பது என்றுங் கூறுவர். காணப்படும் பொருளைத் தன்கண் ஒடுக்கி நிறுத்திக் காட்டுவதும் இம்மனத்துக்கு வாய்த்த செயல். கண்ணாடிக்கில்லாத ஒரு சிறப்பு மனத்துக்குண்டு. தன்னில் ஒடுங்கி நிற்கும் உலகியற் பொருள்களை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் இயைபு படுத்தும் வல்லமையே அச்சிறப்பாம். மனத்தால் காட்டப்படுவன அனைத்தும் உலகியற் பொருள்களேயாம். ஆதலால் உயிர் உடம்போடு கூடி உலகில் வாழ்க்கை நடத்துவதற்கென்றே அமைந்த நுண்கருவி இம்மனம் என்று பழந்தமிழர் கருதினர். அது பற்றியே "சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு" என்றும், "மனம் என்னும் பொச்சாக் கருவி" என்றுங் கூறினார் திருவள்ளுவர். எனவே உலகநெறி என்றது உலகியற் பொருள்களை எடுத்துக்காட்டும் மனத்தினது ஒழுகலாறு என்று தெளிக.

உயிர்கள் உடம்போடு கூடி உலகில் வாழ்க்கை நடத்துவதற்கென்றே அமைந்த நுண்கருவியாக மனம் அமைகின்றபோது உலகமும் மனமும் தாங்கும் பொருளும் தாங்கப்படும் பொருளுமாய் அமைகின்றன. உலகநெறி அறமாக மலரவேண்டும். இதற்கு உலகின் வழியில் மனத்தை வைக்காமல் மனத்தின்வழி உலகை நெறிப்படுத்த வேண்டும். இதற்கு மனம் உடல் வழிப்படாது உயிர் வழிப்படவேண்டும். உயிரின் ஆண்மையின் கீழ் மனம் இயங்கும் போதே உண்மையான உலகநெறி நமக்குப் புலப்படும். இதனை,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து".

என்று தூல உடம்பின் அடக்கத்தையும்;

"கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து";

என்று நுண்ணுடலாம் மனக்கருவியின் அடக்கத்தையும் திருவள்ளுவர் கூறியுள்ளார். இருவகை உடம்பின் அடக்கத்தை ஆக்குவதற்கு உலகே பற்றுக்கோடாய், தாங்கும் பொருளாய் உருப்படுதலால் அவ்வுடல்களின் இயக்க ஒழுங்கையே உலகநெறி என்றோம்.

உலகுக்கும் உயிருக்கும் இடையே மனமும் அம்மனத்தைத் தாங்கும் உடலும் இயைந்திருப்பதால் இவைகள் அடங்குவதற்கு முதற்கண் தூய்மைப் பொருள்களாக அமைதல் வேண்டும். இவைகளில் மனத்தின் தூய்மையே முதன்மையுறல் வேண்டும். இதனால் இவற்றைத் தாங்கும் பொருளான தூல உடம்பும் தூய்மை ஒளியைப் பெறும். உள்ளத்தைக் காக்க உடலும் ஊனமில்லாது உண்மைப்படுதலால், அவ்வுள்ளத்தை உலக நெறியில் உளப்படும் சிறுமைகளில் நின்றும் தடுத்துக் காத்தல் வேண்டும் என்பது கடனாகின்றது. இந்தக் கடமை இனிதுற வேண்டின் உள்ளத்தை நெறிப்படுத்த வேண்டும். உள்ளம் நெறிப்பட வேண்டின் உலகையும் நெறிப்படுத்த வேண்டும். இங்கு உலகம் என்றது எது? ஐந்து



படிப்பகம்

www.padippakam.com



பூதங்களா? அன்று; அவைகளில் சூழ்ந்திருக்கும் சீவவர்க்கங்களாம் இனமே உலகம் என்க. இச் சீவவினம் சிறுமைப்படாது பெருமைபெறும் இனமாக இருக்கவேண்டும். இந்த இன நெறித் தூய்மையிலேயே ஒருவனின் உளம், உடல், என்பனவெல்லாம் தூய்மையாகும். வந்துள்ள துன்பத்தை நீக்கி, மேலுந் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மை நிறைந்த உயிர்வர்க்கத்தின் மத்தியிற்றான் ஒருவன் ஒண் மையாம் உண்மையை உடையவனாய் இருத்தல் முடியும். இதனையே திருவள்ளுவர்,

"மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந் தூய்மை தூவா வரும்".

என்று கூறியருளினார். இக்குறளில் செய்வினைத் தூய்மை என்றது உடற்தூய்மையைக் குறித்தது. எனவே; உலக நெறியின் பொருளான இனம் குற்றமின்றி இயங்க வேண்டின், அவ் இனத்தின் ஒருவனாகிய அவனே முதற் கண் குற்றங்கடிந்து ஒழுகல் வேண்டும்.

"தன் குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற் பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு".

என்று இனமான உலகநெறி தூய்மை உறுதற்குச் திருவள்ளுவர் கூறிய ஆய்வுரை இஃதாம். தன் குற்றத்தை எவ்வாறு நீக்கலாம் என்பதற்கு அவர் கூறும் அறிவுரை அயலாருடைய குற்றத்தைக் காண்பது போலத் தம் குற்றத்தையும் காணவல் லவராதல் வேண்டும் என்பதாம். இந்த வல்ல மைப்பாடான ஒழுக்கலாற்றல் உடைமையை ஒருவன் எவ்வாறு பெறலாம் எனின் "வாய்மை"-யாற் பெறலாம் என்பதே. வாய்மை என்பது யாதெனில் அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதலாம். இது மேலோர் கீழோர் என்று நிலைப்படும் இனமா னது நலம் அடைதற்குரிய பொது விதியாம். இப்பொது விதியை இனிதாய் நிறைவேற்றுதற்கு ஒருவன் எவ்வித நடத்தை உள்ளவனாக விளங் கவேண்டும் என்றால்; தன்னெஞ்சு அறிவதாகிய ஒன்று குறித்துப் பொய்மை உறக் கூடாது என்ப தாம். ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய்மை இல்லாது நடப்பானானால் அத்தகையவன் உல கத்தாரின் உள்ளங்களில் விளக்கமாய் இருப்பான் என்று தனதினங் கடந்த உலக இன ஒழுக்கப் பேற்றாகத் திருவள்ளுவர் கூறுதல் காண்க. இந்தத் துணிவின் பேற்றால்,

"யாம் மெய்யாகக் கண்டவற்றுள் இல்லை எனத் தோன்றும்
வாய்மையின் நல்ல பிற".

என்று ஓர் உலக அற நெறிச்சட்டம் உரைத்தார். தன் நெஞ்சு அறிவது பொய்யற்கவே, மனத்தின் கண் மாசிலனாய் மலருவன். அம்மலர்ச்சி அளவே அறம். இவ்வாறு உலக இனமான நெறியை ஒருவன் தனது மன நெறியால் இனி மைப்படுத்தி உருவாக்குகின்றார் திருவள்ளுவர் என்பது இதுவரை நாம் உரைத்தவற்றால் தெளி யலாம். இத்தெளிவினைத் திருவள்ளுவர்,

"மனத்தோடு வாய்மை மொழியின் தவத்தோடு
தானஞ் செய் வாரின் தலை"

என்று அவரே புலப்படுத்தியுள்ளார். மனம் வழிப் பட்ட உடலையே ஈண்டு மனத்தோடு வாய்மை மொழி யின் எனப்பட்டது. இவ்வாறான ஒழுக்க நடையே உலக நெறிநடை என்பதற்குத் திருவள் ளுவர் பிறிதொரு சட்டமாக,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்றவொரு திருக்குறளை யாத்துள்ளார். ஒருவன் தன் மனத்தின்கண் மாசிலனாய் மாண் புறும் நிலையே அறம். மற்றவை எல்லாம் ஆர வாரத் தன்மையுடையவை என்று திருவள்ளுவர் கூறுவதால்; ஒருவனும் ஒருத்தியும் உலக நெறி யில் இல்லின் கண் இருப்பதோ அல்லது அவ் வில்லினைத் துறப்பதோ அவரின் கோட்பாடல்ல என்பது விளக்கமாகின்றது. எந்நிலையில் நின் றாலும் மனம் மாறாது நிலைபெறுவதே அவரின் கோட்பாடாகும். உள்ளத் தூய்மையாய் உருப்ப டுதலே உலக நெறிப் பயனாதலால் அப்பயன் வாய்மையால் அமையும். எனவே அவ் வாய்மை இயலை; "அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்; இழுக்காறு இயன்றது அறம்" என்று மற்றொரு சட்டம் மனத் தூய்மையின் அடிப்படையில் விளக்கித் திருவள்ளுவர் அறிவு றக் கூறியதை ஓர்க. இந்த வாய்மைப்பயன் நிலைபேற்றை உலக நெறியில் உழல்வோர்க்கு அழுத்தமாய் உணர்த்த,

"வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் அஃதொரு வன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்".

என்று விரும்பிக் கூறியுள்ளார். வீழ்நாள் படாமை நன்றாற்றுதல் என்பது எங்கனம்? என்று வினாவுவார்க்கு அவரே;

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்".

என்று விடைகொடுத்துள்ளார். மலர்மிசை ஏகி னான் மாணடிகளே வாழ்நாள் வழியடைக்கும் கல்லாதனின், அவ்வடிகளை அடைந்தோரே நிலமிசை நீடு வாழ்வர் என்பதாம். மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் என்பதற்கு "அன் பால் நினைவாரது உள்ளக்கமலத்தின் கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சென்ற வனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்தல்"- என்று பரிமேலழகர் அரியதோர் விளக்கம் எழு தியுள்ளார். இவ் விளக்கவுரையில் இருந்து நாம் தெளிந்து கொள்வது; ஒருவன் தனது இதயம் என்ற தாமரை மலரில் தன் உயிருக்கு உயிரான இறைவன் என்ற உயிரியை இருத்தி இடையறாது நினைத்தல் வேண்டும் என்பதாம். இமைப் பொழுதும் நம் நெஞ்சில் ஓரடி தன்னும் நீங்கா தவனாகிய உயிரியைப் பிராணயாமத்தால் சித்



படிப்பகம்

www.padippakam.com



கெனப் பிடித்து உடலில் உள்ள அறிவு மையத்தில் அமர்த்தல் வேண்டும் என்பதாம். இங்கு 'உயிரி' என்றது உயிரை உடைமையாக உள்ள பேருயிர்ப் பொருள் என்க. இப் பெரும் பொருளையே உள்ளக் கமலத்தில் உருப்பெறல் வேண்டின், அதனை அதன் உடமைப் பொருளான உயிரின் மூலமாகவே இயலுதல் வேண்டும் என்பதை விளக்கிக்கொள்ள வேண்டும். உயிரை உடலில் உள்ள அறிவு மையங்களில் வழிப்படுத்தவே உடலும் உலகமும் அவ்வுயிரை விட்டு நீங்கிவிடும். இதனையே திருவள்ளுவர் "ஒழுக்கத்து நீத்தல்" என்றார். இந்த நீத்தாரே உலக நெறியின் உயர் உச்சியில் இருப்பவர். வாழ்நாள் வழியடைக்கும் கல் என்ற காட்சியை உடையவர். நிலமிசை நீடு வாழ்பவர் இவரே என்று நாம் நினைவுறுத்தல் வேண்டும். உயிருக்கு மறுதலையாக உடல் உட்பட அறிவற்ற பொருள் அனைத்தும் உளவாக்கும் தொடர்பில் இருந்து ஒருவன் பிரிதலே மலர்மிசை யேகினான் மாணடி சேர்தல் எனத் தெளிக. ஒருவன் உலக நெறியில் எய்யும் பொருளில் மயங்கிய அருளை அப்பொருட்கண் மயங்காது ஈர்த்து ஈர்த்து அகத் துறுப்பான மனக்கருவியால் அவ்வருட்சியைப் பருமைப் படுத்தல் வேண்டும்.
இவ் ஈர்ப்பினால் அவன் உலக நெறியில் அகத்தும் புறத்தும் முழுமையாகிறான்.

அப்பருமைப் பெருமையால் அவ் அருட்சிக்கு உரித்
தான அன்பு விரிந்து முழுமைப்படும். அவ் முழுமையான உயிரன்பு தனது உயிரியைத் தனது மூலாதாரத்தில் இருந்து தன் அன்பின் நினைவின் வடிவாய் விரைந்தோடி இதயக் கமலத்தில் எழுந்து ஒளிரச் செய்யும். அவ்வாறு ஒளிரச் செய்த அவ்வுயிரன்பு உலகப்பொருள் நெறியில் மயங்கிய அருளையும் ஈர்த்துக் கொள்ளும். ஆகிய அவ் முழுமையை நிலைநிறுத்த அவன் மென்மேலும் உள்ளக் கமலத்தில் உதித்தான் அருளோடு ஒப்புறுதல் வேண்டும். இதற்கு அவ்வருளை ஈர்க்கும் இறை அன்பை இடையறாது வேண்டுதல் செய்ய வேண்டும். இதுவே, "வீழ் நாள் படாமை நன்றாற்றலின்" நலத்தகு செய்கையென்க. இந்த செயற்கரிய செய்கை செய்தவரையே திருவள்ளுவர் ஒழுக்கத்து நீத்தார் என்பர். இங்கு ஒழுக்கம் என்றது குடிமையாம் உலக நெறியில் உளவாகும் பொருளில் மயங்கிய அருளை ஈர்த்துறுத்தும் இன்பியல் வாழ்வாம். இந்தவின்பினர் யோகியர் எனப்படுவர். இவர்கள் முதற்கண் மூச்சுக் காற்றாகிய பிராணனைக் கட்டுப்படுத்துவர். இது பிராணயாமம் எனப்படும். மனம் இடகலைபிங்கலையாகிய இரண்டு மூச்சுக்களின் வழியாக இயங்கும். இந்த இரண்டு மூச்சுக்களையும் கட்டுப்படுத்த மனமும் கட்டுப் படும். அதாவது, இடநாசி வலநாசி வழியாகப் பிராணவாயு இயங்கும் இயக்கத்தைத் தடைப்படுத்தி நடுநாடி எனப்படும் சுழுமுனையைத் திறத்தலாம். இவ்வாறு பன்னிரண்டு, இருபத்து நான்கு, அறுபத்து நான்கு மாத்திரைகளாகப் பிராண வாயுவை வெளியே விடுதலும், உள்ளே இழுத்தலும், பின்னர் இவ் விடுதலும் இழுத்தலும் இல்லாது தடுத்தலும் செய்தலே திருவள்ளுவர் கூறிய "நன்னாற்றல்" என்ற அகநெறி என்க. இடகலை வழியாகப் பதினாறு மாத்திரையளவு உள்ளே இழுத்து, முப்பத்திரண்டு மாத்திரையளவு வெளியே விடுத்துப் பிங்கலை வழியாகக் கொப்பூழாகிய ஓமகுண்டத்தில் இரண்டு இரண்டு மாத்திரையாக அறுபத்து நான்கு மாத்திரை காலம் உள்ளே அவ்வாயுவைக் கும்பித்தலாகிய தரித்தலைச் செய்ய அறம் விளையும். அதாவது அறிவு மையங்களாகிய மலர்கள் விரியும் என்பதாம். இத்தகு மலர்கள் உடம்பின் கண் மூலம், கொப்பூழ், மேல்வயிறு, இருதயம், கழுத்து, புருவநடு என்ற ஆறு இடங்களில் உள்ளன. இவ் ஆறு மலர்களில் இருதய மலரே நடுவு நிலையானது. இந்த நடுநிலையில் பிராணனைக் கட்டுப்படுத்தலோடு அமையாது அதனைத் திருப்புதலையும் செய்யவேண்டும். கால், விரல், கரடு, கணுக்கால், முழந்தாள், தொடை, பாயு, இலிங்கம், நாடி, புருவநடு, நெற்றி, சிரம் -என்னும் பன்னிரண்டு இடங்களிலும் மனம் பொருந்த வாயுவைத் தரிக்கச் செய்யவேண்டும். இவ்விடங்களில் நாசிக்குக் கீழ் பன்னிரண்டு அங்குல தூரத்தில் உள்ளது மனம். இம்மனமிருக்கும் இடத்தில் வாயுவைத் திருப்பி, மனத்தைத் தரிசிக்க செய்யின் "வாலறிவன்" விரைந்து சேர்வான். அப்போது உயிர் நிலமிசை நீடு வாழும் தாரணையை எய்யும். இந்த உலகத்திலும் உடலிலும் இறைவன் தந்த பொருள் பிராண சக்தியாம். இந்த சக்திப் பொருள் உயிர் இயங்கும் உடலிலும் உலகிலும் உள்ள வெளிச்சத்திலும் காற்றிலும் இறைவனால் இரண்டறக் கலக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொருளைப் போற்றுவதே உண்மையான உலகப் பொருள் நெறியாம். உலகில் உள்ள பிராண சக்தியிலும் உடலில் உள்ள பிராண சக்தியே உயிருக்குக் கைவந்த சத்திப் பொருளாம். சுவாசித்தலாகிய நெறியிலே தனக்குள்ள பிராண சத்தியின் வலியறிந்து அதற்கேற்ப யோகம் பயிறல் வேண்டும். அங்ஙனம் யோகம் பயிறலே ஒளியாகவும், ஒலியாகவும் அமைந்த பிராண சக்தியைப் பேணலாகும். உலகநெறி என்பதும் இதனையென்க.

"ஆற்றின் அளவு அறிந்து ஈக அது பொருள்
போற்றி வழங்கும் நெறி".

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இத் திருக்குறளில் "ஆற்றின்" என்றது உயிர் சுவாசித்தலைக் குறிக்கும். பிராணவாயுவை பன்னிரண்டு முதலான அளவு முறையில் அறிந்து திருப்பித் தரித்தல் செய்தலையே "அளவு அறிந்து ஈக" என்ப



படிப்பகம்

www.padippakam.com



தாம். அதாவது பிராண சக்தியை மனோ சக்திக் குத் துணையாக அமைதலையே 'ஈக' என்பது. பொருள் என்றது பிராணவாயுவால் வந்த பிராண சக்தியாம். போற்றுதல் என்பது பிராண சக்தியைத் தடுத்துத் தரித்தலைக் குறித்தலாம்.

இவ்வாறான யோக நெறியையே "வழங்கும் நெறி" எனப்பட்டது. இந் நெறியாய் உலக நெறியில் நின்றவனுக்கு "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்" என்று திருவள்ளுவரே பெறுபேற்றைக் குறித்து காட்டியுள்ளார். இவ்வாறு உலக நெறியை ஆன்றோர் மேலும் ஆய்வாராக.

# எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும்

"தாமின்புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

நாம் இன்புறுவதற்கு காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் அக்கல்வியையே விரும்புவர் எனும் பொய்யா மொழிக்கு இலக்கியராய் விளங்குபவர், இத்தகைய நல்ல தொண்டுகளை மேன்மேலும் செய்து அன்பும் அருளும் உடையவராய் எல்லாச் செல்வ நலங்களும் பெற்று இனிது வாழ்வர்.

அகந்தை, மமதை விரிந்து மலிந்த இக் கலிகாலத்தில் அன்பும் பணிவும், இன் சொல்லும் நேர்மையும் கடைப்பிடிப்பவர் சிலரே.

எமது நாட்டின் இன்றைய துர்ப்பாக்கியசூழலில், கல்விமான்கள் பலர், தம்மை உருவாக்கிய சமுதாயத்தை மறந்து, வெளிநாடுகளுக்குப்பறந்து விடுகிறார்கள். இவ்வாறு தப்பிவந்தவர்கள் உயிர்ப்பாதுகாப்பு எனத்தப்பித் துக்கொண்டாலும், இங்கிருந்தும் ஆற்றக்கூடிய பணிகள் ஏராளம் உள.

இலங்கைச்சரித்திரத்தில், மக்கள் வாழ்வின் சகலதுறைகளிலும் கொடிய இருள் படர்ந்து, தன் சீரையும் சிறப்பையும் முற்றாய் இழந்து நிற்கும் காலம் இது.
எமது மண்ணின் உற்பத்தித்துறைகளில் பங்குகொண்டு, அதனை வளம் படுத்துவோருக்கு ஊக்கம் கொடுத்ல்வேண்டும். அதற்கான கல்விமுறை விரிவு செய்யப்படல் வேண்டும்.

இன்று உலகமெலாம் பரவிக்கிடக்கும் தமிழன், எந்தெந்த வழிகளில் தன்பணியைத் தொடரமுடியுமோ அந்தந்த வழிகளில் தொடரவேண்டும்.

இந்த வகையில் தான் பழையமாணவர் சங்கங்களும்.
"விதையை விதைப்போம், அது பயன் தரக்கூடிய இடத்தில் பலனை நல்கி உய்விக்கட்டும்"

- க. கனகேஸ்வரன் -



படிப்பகம்

www.padippakam.com



# பிரான்ஸிய கல்விமுறை

- தினேஷ்சங்கர்
- பாலேஸ்வரதன்

கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற முதுமொழிக்கிணங்க என்ன கஷ்டத்தை அனுபவித்தாலும் கல்வி கற்றலை மிகவும் முக்கியமானதாகக் கொள்ளுதல் வேண்டும். இலங்கையின் கல்வித் திட்டத்தில் பழக்கப்பட்ட எங்களுக்குப் பிரான்ஸிய கல்வித் திட்டத்தை முற்று முழுவதாக விளங்கிக் கொள்ளுவதற்கு சிறிது காலதாமதம் ஏற்படுகின்றது. இத்துறையில் நாங்கள் அறிந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் பயன்தரலாம் என்ற நம்பிக்கையில், பகிரவிளை கின்றோம்.

கல்வி நிறுவனங்களிலும் தொழில் ஸ்தாபனங்களிலும் ஒரு மாணவன் தன்னைப் பூரணப்படுத்திப் பட்டம் பெற்று நிரந்தர வேலை செய்வதற்கு நான்கு வழிகள் கையாளப்படுகின்றன. அவையாவன,

1. கல்வி நிறுவனங்களில் கற்றல்.
2. தபால் தொடர்பு மூலம் கற்றல்.
3. பகல் தொழில் ஸ்தாபனங்களில் வேலை செய்து மாலை நேரம் கல்வி நிறுவனத்தில் கற்றல்.
4. பகுதி நேரம் வேலை செய்தலும் பகுதி நேரம் கற்றலும் (Alternance).

கல்வியானது, ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்தரக் கல்வி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வேறுவேறான நிறுவனங்களில் கற்பிக்கப்படுகின்றன. ஆரம்ப, இடைநிலைக்கல்வி, கல்வி நிறுவனங்களிலேயே கற்றல் வேண்டும். அதன் பின்பு ஏனைய முறைகள் கையாளப்படலாம். கல்வி நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என இரு பிரிவுகளாக உள்ளன. அரசாங்க நிறுவனங்களில் இலவசக் கல்வி அளிக்கப்படுகின்றது. இந் நிறுவனங்களில் இடைநிலைக் கல்வி ஆரம்பத்திலிருந்து பெற்றோரின் வருமானத்தை ஆராய்ந்த பின் மாணவனின் கல்விச் செலவுக்காகப் பணஉதவி (Bourse) செய்யப்படுகின்றது. தனியார் நிறுவனங்களில் மாணவரிடமிருந்து கட்டணம் அறவிடப்படுகின்றது.

தாய்மொழிக் கல்வி (பாலர் வகுப்பு) மூன்று வயதில் ஆரம்பிக்கப்படுகின்றது. இக் கல்வி (Maternelle) மூன்று வருடங்கள் கற்றல் வேண்டும். ஆரம்பத்தில் அபிநயப் பாடல்கள், நடனங்கள் மூலம் ஐம்பொறிகளும் அவற்றின் தொழிற்பாடும் உணர்த்தப்படுகின்றது. தொடர்ந்து அடுத்த ஆண்டில் பெயர், முதற்பெயர், ஒரு கிழமையிலுள்ள நாட்களைக் கூறுதல் போன்ற பயிற்சிகள் பயிற்றப்படுகின் றன. மூன்றாவது ஆண்டு (தரம் 1) இறுதியில் தனிச்சொற்கள் உருவாக்கிக் கூறும் அறிவு பெறப்படு கின்றது. வருடத்தில் ஒருமுறை பெற்றோர் ஆசிரியர் கூடி மாணவரின் பெறுபேறுகளை ஆராய்வர். பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நிலையை அறிய விரும்பினால் பாடசாலை முடிவடையும் நேரத்தில் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலாம்.

நான்காவது வருடம் (தரம்-2) ஒரு பிள்ளையைக் கல்வி கற்றலுக்குரிய தயார் நிலைக்குக் கொண்டு வரும் கற்பித்தல் முறை கையாளப்படுகின்றது. (Cours Preparatoire). எழுதுவதற்கு கையில் "பென்சில்" பிடிக்கப் பழக்குதல், எழுத்துகள் சொல்லிக் கொடுத்தல், சிறிய அறிவுறுத்தலுக்குரிய வசனங்களை விளங்கச்செய்தல், வாய் மொழியாக ஒரு தானக் கூட்டற் பயிற்சிகள் ஆகியன பயிற்றப்படுகின்றன. ஐந்தாவது வருடம், (தரம்-3) எழுதுதல், வாசித்தலுக்குரிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. (Cours Elimentaire) அத்துடன் சொல்வதெழுதல் பயிற்சிகளும் (சொற்கள்) கணிதத்தில் கழித்தல் பயிற்சிகளும் கொடுக்கப்படுகின்றன. ஆறாவது வருடம் CE 2ல் (தரம் -4) இலக்கணம், கணித சாஸ்திரம் ஆகியவற்றில் ஆரம்ப பயிற்சிகள் கொடுக்கப்படும். ஏழாவது வருடம், CM 1 இல் (Cours Moyen -தரம் 5) இலக்கணப் பயிற்சிகளுடன் இரண்டு அல்லது மூன்று தானக் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். குடியியற் கல்வியும் புகட்டப்படுவதோடு அபிநயப் பாடல்களும் பயிற்றப்படும். எட்டாவது வருடம் CM 2ல் (தரம் -6) சரித்திரம் பூமிசாஸ்த்திரம் ஆகிய பாடங்களில் அறிமுகமும், கணித சாஸ்த்திரத்தில் பின்னங்களும் பயிற்றப்படும்.



படிப்பகம்

www.padippakam.com



மேற் குறிக்கப்பட்ட ஆரம்பக் கல்வி முடிந்ததும் இடைநிலைக் கல்வி பெறும் கல்லூரிக்குச் செல்லுதல் வேண்டும். இக் கல்லூரியில் ஏழாம் வகுப்பிலிருந்து (Sixieme) பத்தாம் வகுப்பு வரை (Troisieme) கல்வி கற்பிக்கப்படும். இடைநிலைக் கல்வியில் நல்ல தரமுள்ள மாணவர்களே தொடர்ந்து உயர்தரக் கல்வி பெற்று சர்வகலாசாலை வரை செல்ல அனுமதிக்கப்படுவர். ஏனையோர் வேலையில் ஈடுபடக் கூடியதான தொழிற் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவர். இதன் மூலம் மாணவர் தமது கல்வி முடிந்ததும் வேலை இல்லாமல் இருக்கும் நிலை குறைக்கப்படு கின்றது. ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. ஏழாம், எட்டாம் வகுப்புகளில் (6e, 5e) ஆங்கிலம் ஒரு பாடமாக அமைவதோடு, விஞ்ஞான தொழில் நுட்பப் பாடமும் (Technologie) அறிமுகப்படுத்தப்படுகின்றது. மாணவர்கள் மாதா மாதம் பரீட்சிக்கப்பட்டு இடைத்தவணை, தவணைச் சராசரிகள் எடுக்கப்பட்டு பாடநிலை கணிக்கப்படுகின்றது. வகுப்பாசிரியர், ஏனையபாட ஆசிரியர்கள், வகுப்பு பிரதிநிதிகள், கல்வி ஆலோசகர், பெற்றோர் கூட்டுத்தாபன பிரதிநிதிகள், கூடி மாணவரின் பெறுபேறுகளை ஆராய்வர். 8ம் வகுப்பு இறுதித் தவணையில் மாணவர் கல்வித்தரம் பற்றி பெற்றோருக்கு அறிவிக்கப்படும். பின்பு ஒன்பதாம் வகுப்பு (4e) இறுதித்தவணையில் மீண்டும் ஒரு முறை ஆராயப்பட்டு உயர்தரக் கல்வியைத் தொடரக்கூடிய நிலை இருக்கின்றதா அல்லது தொழிற் கல்விக்கு விடுவதா என்ற திடமான முடிவு எடுக்கப்படும்.

9ம், 10ம் வகுப்புகளில் (4e. 3e) இலங்கையைப் போல பொதுவான பாடத்திட்டங்களுடன் (ஆங்கிலம் உட்பட மூன்றாவது பாஷையாகிய டச்சு, ஸ்பானிய, இத்தாலிய மொழிகளில் ஒன்றும் கற்றல் வேண்டும். 10ம் வகுப்பு இறுதித் தவணையில் பரீட்சைப் பெறுபேறுகளைக் கல்விக்குழு ஆராந்த பின் ஒரு மாணவன் Lycee என்று சொல்லப்படும் உயர்தரக் கல்லூரியில் பொதுப்பாடப் பகுதியையா (Etudes Generales) அல்லது விஞ்ஞான சம்பந்தமான தொழில் நுட்பப் பகுதியையா (Technologiques) அல்லது தொழில் கல்விக்குரிய Lycee யில் (Lycee Professionnel) தொழில் பாடங்களைக் கற்பதா எனத் தீர்மானிக்கும். இத் தீர்மானங்கள் பெற்றோருக்கு அறிவிக்கப்படும். பெற்றோர் விரும்பினால் திரும்பவும் அதே வகுப்பில் படிக்க விடும்படி கோரலாம். எல்லா வகுப்புகளினதும் இறுதித் தவணை முடிவில் இவ்வுரிமை பெற்றோருக்குண்டு. 10ம் வகுப்பில் பரீட்சைப் பெறுபேறுகள் கணிக்கப்பட்டபின் வகுப்பேற்றப்பட்டவர்கள் உயர்கல்வி பெற 11ம் வகுப்புக்கு (Seconde) உயர்கல்வி நிலையத்திற்குச் செல்வர். இத் தீர்மானத்தின் பின்பு தொடர்ந்து கல்வித் திணைக்கள Brevet பரீட்சை (G. C. E. O/L) கணித சாஸ்த்திரம், சரித்திரம், பூமிசாஸ்த்திரம், பிரான்சிய மொழி ஆகிய பாடங்களில் நடாத்தப்படும். இதன் பெறுபேறுகள் வகுப்பேற்றத்தில் எத்தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

தொழில் கல்வி நிலையங்களுக்குச் செல்பவர்கள் (Lycee Professionnelles) இரு வருடங்கள் B E P (Brevt d'etudes professionnelles) அல்லது C A P (Certificat d'aptitude Professionnelle) செய்தபின் வேலை செய்யலாம் அல்லது தொடர்ந்து "Baccalaureat Professionnel" அல்லது விஞ்ஞான சம்பந்த மான தொழில் நுட்பக் கல்விப் பகுதிக்குச் செல்லலாம்.

11ம் வகுப்பு பொதுப்படப் பகுதி அல்லது விஞ்ஞான சம்பந்தமான தொழில் நுட்பப் பகுதி கற்கச் செல்லும் உயர்தரக் கல்வி நிலையத்தில் (Lycee d'enseingnement General Technologique) மூன்று வருடங்கள் கற்று (11, 12, 13ம் வகுப்புகள்-Seconde, Premiere, Terminal) Baccalaureat பரீட்சை எடுத்தபின் மேலும் சர்வகலாசாலையில் உயர்தரக் கல்வி பெற விரும்பியவர்கள் தொடர்ந்து பட்டதாரிகளாக, இயந்திரவியலாளர்களாக, வைத்திய கலாநிதிகளாக, சட்டத்தரணிகளாக கல்வி பெறும் வாய்ப்புகளுண்டு.

மாணவர்களின் பெறுபேறுகளும் வகுப்பில் அவர்களின் நிலையும் தபால்மூலம் பெற்றோருக்கு அனுப்பி வைக்கப்படும். பெற்றோர் விரும்பினால் வகுப்பு ஆசிரியருடனோ அல்லது பாட ஆசிரியர்களுடனோ கலந்துரையாடலாம். ஒரு மாணவன் தனது கல்வியைத் தொடரக்கூடிய நிலையிலுள்ளானா அல்லது அவன் வேலையில் சேரலாமா என்ற ஆலோசனையை அதற்குப் பொறுப்பான உளவியலாளரிடம் பெறலாம். விரும்பினால் அதிபருடனும் கலந்துரையாடலாம்.

கல்லூரியில் கல்வி சம்பந்தமான அறிவுறுத்தல்களைப் பெறக்கூடிய பகுதியில் (Centre de documentation et d'information) -(C D I) சென்று தகவல்களைப் பெறலாம். ஆலோசனைகள் கூறும் C I O என்று சொல்லப்படும் (Centre d'information et d'orientation) ஸ்தாபனத்திலும் அறிவுறுத்தல்களைப் பெறலாம். மாணவரின் வகுப்பேற்றம் பற்றி மேலதிக விளக்கம் கொடுத்து அதில் பெற்றோர்





படிப்பகம்

www.padippakam.com




தலையிட விரும்பினால் பெற்றோர் ஆசிரிய கூட்டுத் தாபனத்தின் (Federations des parents d'eleves) பிரதிநிதி மூலம் விளக்கங்களை அனுப்பிக் கல்லூரிக் கல்விக் குழுவுடன் கதைக்கும் வாய்ப்பு உண்டு. மேலும், தொழில் கல்விகள் கற்பதற்கு வயதோ அல்லது மொழியோ பெரும் தடையல்ல. எனவே இவ் அரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எம்மைப் பூரணப் படுத்த முயல்வோமாக.




* Première : STI , STL , STT , SMS , STAE , STPA
விஞ்ஞான தொழில் நுட்பப் பாடப் பகுதிகள்

** première : L , ES , S
விஞ்ஞான கலைப் பாடப் பகுதிகள்






படிப்பகம்

www.padippakam.com



# புலம் பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர்

- சிவலிங்கம் சிவபாலன் -

காலத்தின் செயற்பாடுதான், எமது மண்ணை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகவேண்டி ஏற்பட்டது. நாம் இங்கே எந்தநிலையில் வாழ்ந்தாலும், எமது மன உணர்ச்சிகள் யாவும், நாம் விட்டு வந்தவைகளையே முத்தமிட்டுக் கொண்டிருக்கின்றன. இதை எவ்வகையிலும் யாராலும் பிரித்துவிட முடியாது. நாம் வந்த பாதைகளைச் சற்றுப் பின்னோக்கிப்பார்ப்போமே யானால், நாம் கல்வி கற்ற கல்லூரிகள், பாடசாலைகள் இன்று எவ்வளவு சிதைந்த நிலையில் இருக்கின்றன. எமது கல்லூரிகளே எம்மைப்பார்த்து ஏளனம் செய்கின்றன. நம் முன்னோர் அரசுகளையே நம்பியிராமல், தம்மால் முடிந்த அளவு, மனித சக்திகளைக் கொண்டும், தாம் சிறுகச் சிறுகச் சேமித்த பொருட்களைக் கொண்டுமே இவ்வளவு பெரிய கல்லூரிகளை உருவாக்கியிருக்கின்றார்கள் என்றால் மிகையாகாது. அந்தப் பாடசாலைகளில் கல்விகற்று, உடற்பயிற்சி கற்று மேலும் நல்ல பழக்க வழக்கங்கள், சமய அறிவுளையெல்லாம் கற்றுத் தெரிந்து கொண்டபின்னர் தான் நாம் இப்புவியிலே ஒரு மானிடன் என்ற அந்தஸ்த்துடன் வாழ்க்கையை ஆரம்பிக்க முடிந்தது.

நம் முன்னோர் சுயநலவாதிகளாகவோ, தான் தோன்றித்தனமானவர்களாகவோ இருந்திருப்பின் நாங்கள் கல்லூரிகளையும், மேலும் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட கடவுளர் நிலைகள், படிப்பகங்கள் முதலியவற்றைக்காண வெளியுலகுக்கு வந்திருக்கத்தான் வேண்டும். அவர்கள் அன்று ஆற்றிய அயராத பணிகள் தான் இன்று வெளிநாடுகளில் வாழும் மனித நேயம் கொண்டோரால் உருவாக்கப்பட்ட சங்கங்களை நிருவகிக்க நேருகிறது. எந்த வொரு மகனும் தன் தாய், தந்தை, சகோதரர்களை எவ்வாறு நேசிக்கிறானோ, அதேபோலத்தான் தன்னை இச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்திய கல்லூரியையும், அதன் ஸ்தாபகர்களையும், ஆசிரியப் பெருந்தகைகளையும் நினைவுகூருதல் நேசித்தல் இன்றியமையாத தொன்றாகும். ஒவ்வொரு மாணவனும் தன்னாலான, அதாவது இராமனுக்கு அணில் செய்த உதவியாகவேனும் ஏதாவது வகையில் உதவுவானேயானால் எம் நாட்டில் பல நூற்றுக்கணக்கான கல்லூரிகளை மேலும் தோற்றுவிக்கமுடியும். அது இப்போது சாத்தியமில்லையானாலும், எதிர்காலத்தில் அங்கு வாழக்கூடிய, கல்விகற்கக் கூடிய மாணவனுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் பெரும் பங்கு எமக்குண்டு எனலாம்.

பல அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், மருத்துவர்கள், அரசியல் தலைவர்கள் போன்ற மேதாவிகளையெல்லாம் உருவாக்கியது எமது கல்லூரிகள் தான். நாம் பெருமைப்படுவதை விட எமது கல்லூரியின் ஒவ்வொரு செங்கற்களும் அதை நினைத்து நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றன. அந்த வழியில் ஏதோ ஒரு சிலவற்றைக் கற்றுக் கொண்டதால் தான், அக்கல்லூரியின் பழைய மாணவன் நான், என்று சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்கிறோம். இதேபோல இன்னும் பல மேதாவிகளை உருவாக்க வேண்டிய கல்லூரிகள் இன்று இருளடைந்து கிடக்கின்றன. எவ்வளவு பொதுநல விரும்பிகளின் உழைப்புக்கள் வீணாகிவிட்டன. எப்படியோ, எதிர்காலம் எமக்குச் சாதகமாகத்தான் இருக்கப்போகிறது. இப்போது தொட்டே நாமும் எமது பங்கினை ஆற்ற முன்வருதல் அவசியமும், அவசரமாகும்.

ஒரு பாடசாலையில் சென்று, பாடத்தை மட்டும் படித்தோம் என்பதைவிட பொது அறிவுகள் பலவற்றையும், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் முதலானவற்றையும் நாம் கற்றுக் கொண்டது மனித வாழ்க்கையில் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதை நினைக்கும் போது, நாம் எமது தாய் தந்தையருக்கு எவ்வளவு கடமைக



படிப்பகம்

www.padippakam.com



ளைச் செய்திருக்கிறோம் என்ற திருப்தி ஏற்படுகிறதல்லவா? கல்லூரிகளின் புகழையும் கட்டிக் காத்தோம் என்ற திருப்தி ஏற்படுகின்றதல்லவா?
இதே நிலை இன்னும் தொடருமாயின், இனி வரப்போகும் சந்ததி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எவ்வளவு பயனுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது புரிகிறது.

நாட்டில் நிலவும் சீர்கேடுகள் காரணமாக, அங்கு கல்விகற்கும் மாணவர்கள் மத்தியில் பொருளாதார நெருக்கடிகள், பயப்பீதி, போன்றவை மனதில் கேள்விக்குறிகளைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது. எனவே வெளிநாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய பழைய மாணவர் சங்கங்களுக்கு, மிகப் பெரிய பொறுப்புக்கள் இருப்பதை எவரும் தட்டிக் கழிக்கக் கூடாது. அந்த மாணவனின் எதிர்காலம், அவர்களின் முயற்சிகள் யாவும் எவ்வித இடையூறுகளுமின்றி அமைய, மேற்குறிப்பிட்ட சங்கங்கள் தான் முழுப் பொறுப்பேற்க வேண்டும். "சிறு துளி அது பெரு வெள்ளம்" ஒவ்வொரு நாடுகளில் இயங்கும் சங்கங்கள் தமக்குள் ஒருவித ஒருமைப்பாட்டுடன், தங்களுக்குத் தாங்களே இதற்கான செயல்பாடுகள் பற்றி விவாதித்து, அவர்களுக்கு உதவுவார்களேயானால், இனி வரப்போகும் சந்ததி, அவர்களுக்குப் பின் வரப்போகும் சந்ததிகளை நல்ல முறையில் வழிநடத்துவார்கள்.

குறிப்பாக அங்கு இப்போது, கல்லூரிகளைச் சரி பார்ப்பது அதாவது திருத்த வேலைகள் செய்வது முடியாத காரியம். எனவே இருப்பவற்றை வைத்துக்கொண்டு அதில் எதிர் நீச்சல் போடுவதுதான் புத்திசாலித்தனமும் கூட. ஆசிரியர் பற்றாக்குறை தவிர்க்க முடியாதாகிவிட்டது. எனவே இங்கு இயங்கக் கூடிய சங்கங்கள் அவற்றை நிவர்த்தி செய்வதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஏற்கெனவே எமது கல்லூரிகளில் கல்வி கற்று, நல்ல நிலையில் உள்ளவர்கள், நன்றாகப் பயிற்றுவிக்கப் பட்டவர்களை பகுதிநேர அல்லது முழுநேர ஆசிரியர்களாக, எமது கல்லூரிகளுக்கு நியமிக்கப்படுவதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதாகவும், அதேவேளை வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவுவதாகவும் இருக்கும். அப்படியான ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊதியமாக, எமது சங்கங்கள் மாதா மாதம் சிறு தொகை பணமாக அனுப்புவது, அவர்களுக்கு அது பெரிய தொகையாகப் போய்ச்சேரும். அதில் எவ்வளவு பேர் பயனடைவார்கள். எமக்குக் கூட ஒருவித திருப்தி ஏற்படுகிறதல்லவா? அப்படியான ஆசிரியர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். இன்று எவ்வளவோ பழைய மாணவர்கள், தொழிலெதுவுமின்றி வீட்டில் முடங்கிக்கிடக்கிறார்கள் என்பதையும் நாங்கள் அறியாமலில்லை. பொருளாதாரப் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் பெற்றோருக்கும் இது ஒரு பெரும் நிம்மதியையும், ஒரு எதிர்பார்ப்பையும் உண்டுபண்ணுமல்லவா? இந்த ஐரோப்பிய நாடுகளில் இயங்கக் கூடிய சங்கங்கள் ஒவ்வொரு ஆசிரியர்களை நியமிக்க உதவுவார்களேயானால், கல்லூரிகளின் மாணவர் கல்வித் தரம் எவ்வளவு தூரம் மேனோக்கி எடுத்துச் செல்லப்படும், என்பதை எண்ணும் போது எமக்குள் ஒரு புது உணர்ச்சி ஏற்படுகிறதல்லவா? பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் வாழ்பவர்கள், ஏதாவது ஒரு தொழிலை மையமாகக் கொண்டவர்கள். அவர்கள் தமது சேமிப்பின், பிரதிபலிப்பாக இதனை நோக்குவார்களெனின் எவ்வளவோ மாணவர்கள் பயனடைவார்கள்.

மாணவர் சங்கங்கள் இங்கு கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகள் போன்ற, மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத நல்ல அம்சங்களை உருவாக்கி அதன் மூலம் கிடைக்கக் கூடிய பணத்தை, மேற் கூறிய தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். எனவே சங்கங்கள் பெயருக்காக இயங்காமல், தம்மாலான பணிகளைச் சிறப்புற நடாத்த முயலவேண்டும். முயன்று கொண்டும் இருக்கிறோம். முயற்சி திருவினையாக்கும். பொதுவாக எல்லோருக்கும் நேரப் பற்றாக் குறை இருப்பது உண்மை. ஓய்வு நேரத்தின் ஒருமணியை இதற்காக ஒதுக்கினாலே போது மானதாகும். "பிறர் பிள்ளை தலை தடவத் தன் பிள்ளை தானே வளரும்" என்பார்கள் முதியோர்கள்; எவ்வளவு உண்மை அது. எமக்கு முன் உள்ளவர்கள் எமக்கு உதவினார்கள் நாம் நல்ல பயனடைந்தோம்; நாம் உதவுவதால், நாமும் பயனடைவோம், எம் மக்களும் பயனடைவார்கள். பழைய மாணவர் சங்கங்கள் பொதுவாகத் தத்தமது கல்லூரிகளுக்குத் தான் உதவவேண்டுமென்று அல்ல; இன்னும் பின்தங்கிய, வசதிகுறைந்த எவ்வளவோ பாடசாலைகள் எமது நாட்டில் இருக்கின்றன. அவர்களுக்கும் நாம் நம்பிக்கை ஒளியைக் கொடுக்கலாமல்லவா?

இன்னுமொரு பிரச்சனை, மாணவர்கள் மத்தியில் அங்கவீனர்களும் இன்று அறிமுகப்படுத்தப் படுகிறார்கள். பிறப்பிலே அவர்கள் அங்கவீனர்களாக இருந்ததில்லை. பாதியிலேதான் அவர்களுக்கு இந்தப் பெயர் சூட்டப்படுகிறது. அப்படியானவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில், எமது சங்கங்கள் உதவவேண்டியது தலையாய கடமையாகும். பொருளாதார நெருக்கடியுடன் கூடிய அங்கவீனர்களாக இருந்தால், அவர்களின் மனநிலை இன்று சாவின் விளிம்பையே எதிர்நோக்கும். அதிலிருந்து காப்பாற்றும் பெரும் பொறுப்பும், அவர்களைச் சமூகத்தில்



படிப்பகம்

www.padippakam.com



ஒரு பொறுப்பானவர்களாக்குவது கூட, இந்தச் சங்கங்களின் பொறுப்புக்களில் ஒன்றாகும். பொதுவாக அங்கவீன மாணவர்களை அடையாளம் கண்டு, பொது நலசேவை நிறுவனங்களுக்கூடாக அல்லது, கல்லூரியின் நிர்வாகங்களுக் கூடாக, அவர்களுக்குத் தேவையான கல்வி சம்பந்தப்பட்ட உபகரணங்கள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றை இலவசமாக வழங்குவதால், அல்லது ஏதாவது புலமைப் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பதால், அவர்களின் மனதிலுள்ள அச்சம், தப்பபிப்பிராயம் முதலியவற்றைப் போக்கக் கூடியதாகவும் இருக்கும்.

இன்றைய தேவை அவர்களுக்குக் கல்விதான். எனவே அவர்களை விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் தற்பொழுது ஊக்குவிப்பது தேவையில்லை என்ற பொருளில் இதை எழுதவில்லை. அவற்றை இரண்டாம் பட்சமாக நாம் கருத்திற் கொள்ளவேண்டும். கடந்த காலங்களில் நாட்டில் சீரான நிலை இருந்த போது நல்ல முறையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அதிக அங்கத்தவர்களையும், அதிக வருமானங்களையும் கொண்ட சங்கங்கள், இயங்கும் பட்சத்தில் அவர்கள், மேலதிகமாக எமது படித்த மாணவர்களைக் கொண்ட ஏதாவது விவசாய, கைத்தொழில் கூட்டுப் பண்ணைகளை எமது பகுதிகளில் ஏற்படுத்தி, கிடைக்கக் கூடிய மூலவளங்களையும் பயன்படுத்தி வறுமையை ஓரளவு போக்குவதற்கும், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழுவதற்கும் எத்தனிக்கலாம். மாணவ சக்தி மாபெரும் சக்தி என்பார்கள். அதிலும் பழையமாணவர் சக்தி, எவ்வளவு பெரும் தொண்டாற்றக் கூடிய சக்தி என்பதை, நாம் ஏன் நிலை நிறுத்தக் கூடாது.

(பாவலர் துரையப்பாபிள்ளை நினைவாக 1992ம் ஆண்டு நாம் நடாத்திய கட்டுரைப் போட்டிக்கு வந்திருந்த கட்டுரை)

★

## தேரும் திங்களும்

"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என்று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்.
பெருந்தோளும்
கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன்தான்.

வந்தான், அவன்ஓர் இளைஞன்;
மனிதன்தான்
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி

என்றுநாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும் எனும் ஓர் இனிய விருப்போடு,
வந்தான் குனிந்து வணங்கி வடம்பிடிக்க

"நில்!" என்றான் ஓராள்
"நிறுத்து" என்றான் மற்றோராள்
"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"கொல்" என்றான் ஓராள்
"கொளுத்து" என்றான் வேறோராள்.

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு,
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு,
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து,
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டது போல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான் பெற்ற
மக்க ளுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்தநாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்,
அதோ மண்ணிற் புரள்கிறது !

- மஹாகவி -



படிப்பகம்

www.padippakam.com



# தெல்லிப்பழை அருளம்பலம் துரையப்பாபிள்ளை



"கல்லூரித்தாபகர் கல்விக்கலைஞன்
துரையப்பாபுகழ் துதிப்போம்"

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே மாணவர்களாகப் பயின்ற காலத்தில் காலைக்கூட்டங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நாம் கூட்டாக ஓதும் தாரக மந்திரம் இது. துரையப்பாபிள்ளை (1872-1929) அவர்களை நாம் ஓர் ஆசிரியராகவும் அதிபராகவும் தெல்லிப்பழை அமெரிக்க மிசன் ஆங்கில வித்தியாலயத்திலிருந்து வெளியேறி, சைவ மாணவர்களுக்கான போட்டிப் பாடசாலையாக மகாஜன உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கிய நிறுவகராகவுமே அறிந்திருந்தோம். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகளிலும் ஐம்பதுகளிலும் இளைஞர்களாக இருந்த எமது காட்சி இது. ஆனால் இன்றோ சந்தேகமில்லாமல், பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை ஒரு பெரிய "யாழ்ப்பாணத்தவர்" ஆவார் என்று பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையுடன் சேர்ந்து நாமும் வியந்து நிற்கிறோம். (பாவலர் துரையப்பாபிள்ளையின் யாழ்ப்பாணம்-அன்றும் இன்றும்-மீள்பார்வை, பாவலர் நினைவுப் பேருரை 6. மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. 1986. ப. 23.)

எமது மூத்த தலைமுறையினர் பாவலரை ஓர் ஆசிரியராக, அதிபராக, நிறுவகராக மட்டும் அறிந்திருக்கவில்லை. அவரைக் கல்விமானாக, பாவலராக, ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்ல கட்டுரையாளராக, சமூக சீர்திருத்தவாதியாக, உதயதாரகை இதழின் ஆசிரியராக, ஆங்கில இந்துசாதன இதழின் துணையாசிரியராக, பேச்சாளராக, தொழிற்சங்கவாதியாக, பல்வேறு சங்கங்களில் உறுப்பினராகிப் பொதுப்பணியாற்றிய தொண்டராக, நாடக ஆசிரியராக, நாடக நெறியாளராக, தமிழிசை இயக்கத் தொண்டராக, தமிழின உணர்வுமிக்கவராக, வெளியுலக வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் உள்வாங்கிக் கொண்டு நடைமுறைப்படுத்த விரும்பிய மறுமலர்ச்சியாளராக, முற்போக்காளராக இனங்கண்டு சமூகத் தலைவராகப் போற்றினர். "அந்தக் காலத்திலே இளைஞர் முதல் முதியோர் வரை ஒவ்வொருவர் வாயிலும் (அவருடைய கவிதைகள்) ஒலித்துக்கொண்டிருந்தவை" (பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, பாவலர் நூற்றாண்டு மலர், இனிச் சொல்ல என்ன இருக்கிறது?", மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, 1972. ப. 84). அக்காலத்தில் அவருடைய கவிதைகள் ஈழத்திலும் தமிழகத்திலும் வாழ்ந்த அறிஞர்களாற் போற்றப்பட்டன.

## பாவலர் முதல்
## ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடிவரை



படிப்பகம்

www.padippakam.com



பாவலரின் முதற் கவிதை நூலான "இதோபதே சகீதரச மஞ்சரி" 1901ஆம் ஆண்டு வெளிவந்தது. மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளையின் (1826-1889) "சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்" நூலின் (1878) மூன்றாம் பகுதியாக அமைந்த 'உறிதோபதேசக் கீர்த்தனைகளை' அடியொற்றியே பாவலர் தமது நூலை யாத்துள்ளார். எனினும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் நவீன கவிதையின் விடிவெள்ளியாகவும் முன்னோடியாகவும் அமையும் இயல்புகளையும் கீதரச மஞ்சரியில் காண்கிறோம். 1906ஆம் ஆண்டளவில் பாவலர் எழுதியதாகக் கொள்ளக்கூடிய யாழ்ப்பாண சுவ்தேசக் கும்மி பாவலரின் நவீனத்துவ போக்குக்குச் சிறந்த சான்றாக உள்ளது. தூய இசைத் தமிழிலிருந்து விடுபட்டு எளிமையான இசைகொண்ட கண்ணிகளில் கும்மி அமைந்துள்ளது. பாவலரின் எங்கள் தேச நிலை என்ற கவிதை சிறந்தாக அமைந்துள்ளது. பாரதியார் கையாண்ட யாப்பையும் பொருளையும் பாரதிக்கு முன்னரே பாவலர் பயன்படுத்திப் பாரதியின் முன்னோடி (வழிகாட்டி அல்ல) ஆகின்றார். பாவலரின் சிவமணிமாலை பாரதியாரின் தெய்வீகப் பாடல்களை நினைவூட்டுகிறது.

பாவலர் ஆரம்ப, இடைநிலைக் கல்விகளைத் தெல்லிப்பழையிற் பயின்றபின் 1888இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்து உயர்கல்வி பெற்றார். பாரம்பரியக் கல்விமரபு, நவீன மேல்நாட்டுக் கல்விமரபு ஆகிய இரு மரபுக் கல்வியையும் பெற்றவரான யே. ஆர். ஆணல்டு என்ற அ. சதாசிவம்பிள்ளை (1820-1895) அங்கு பாவலரின் அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசிரியராக விளங்கினார். ஈழத்து நவீன தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி என்று கொள்ளப்படும் (தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், பெ. கோ. சுந்தரராசன் (சிட்டி), சோ. சிவபாதசுந்தரம், கிரியா, சென்னை, 1989, ப. 14). அ. சதாசிவம் பிள்ளையின் கற்பித்தலும் நெறிப்படுத்தலுமே பாவலரைக் கவிஞராக்கி, ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியாக ஆக்கியது என்பதில் ஐயமில்லை இதனால்தான் அவர் கீதரச மஞ்சரியை ஆசிரியர் யே. ஆர். ஆணல்டுக்குக் காணிக்கையாக்கியுள்ளார்

பாவலர் அறிஞராக விளங்கியபோதிலும் சமகால அறிஞர்களோடு கலந்துரையாடித் தமது அறிவை மேலும் வளர்த்துக்கொண்டார். வித்துவான் பிரம்மஸ்ரீ சிவானந்தையர், சைவப்பிரசாரகர் முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையா, மாவை வெண்ணைக் கண்ணனார் எனப்பட்ட பிரம்மஸ்ரீ சு. நவநீதகிருஷ்ண பாரதியார், சைவசித்தாந்த அறிஞர் கா. தம்பையா, சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார், திரு. மோஸஸ் கந்தையாபிள்ளை, கலாநிதி ஐசாக் தம்பையா, அதிபர் செல்லப்பா, திரு. ஆர். ஆர். பார் குமாரகுலசிங்கம், பரியோவான் கல்லூரி உப அதிபர் குறோசெற், பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை முதலிய பலர் பாவலருடைய உசாத்துணைவர்களாக இருந்துள்ளனர் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இடைக்காலத்தில் கிறிஸ்தவராக இருந்த பாவலர் மீண்டும் சைவராகவும் சிவமணிமாலை பாடவும் தூண்டுதலாக இருந்தோர் முதலிற் கூறப்பட்ட சைவத் தமிழறிஞர்களேயாவர் என்பதில் ஐயமில்லை.

ஈழத்திலும் தமிழகத்திலும் வியாபித்திருந்த பாவலரின் பெரும் புகழும் கல்லூரியின் புகழ் ஒளியில் சிறிதுகாலம் மறைந்து நின்றன. எனினும் கல்லூரியின் பொன்விழா ஆண்டான 1960இல் பாவலரின் புகழை மீண்டும் ஓங்கச்செய்வதற்கான இரு பெரும் பணிகள் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

ஒன்று பொன்விழா மலர் (The Mahajanan, Mahajana college Golden Jubilee Souvenir. 1960) வெளியீடு. திரு. ஆ. இராமசாமி அவர்களைப் பிரதம ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பட்ட இம்மலரில் பாவலரின் வரலாறும் கல்லூரி வரலாறும் விரிவாக எழுதப்பட்டன. பாவலரின் அரசியல், சமூக, இலக்கியக் கோட்பாடுகளின் பிரகடனமாக அமைந்த "Jaffna-Present and Past" என்ற புகழ்மிக்க கட்டுரை அதில் மீள வெளியிடப்பட்டது.

மற்றையது பாவலரின் முக்கிய ஆக்கங்களான சிவமணிமாலை, யாழ்ப்பாண சுவதேசக் கும்மி, எங்கள் தேச நிலை, இதோபதேசகீதரச மஞ்சரி, சகலகுண சம்பன்னன் நாடகம், தனிப்பாடல்கள் என்பவற்றையும் பாவலரைப் பற்றிச் சமகால அறிஞர்கள் பாடிய பாடல்களையும் கொண்ட தொகுப்பாகச் சிந்தனைச் சோலை பொன்விழாச் சிறப்பு மலராக வெளியிடப்பட்டமை. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் மதிப்புரையும், பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்கள் அருமையாக எழுதிய பாவலரின் "வாழ்க்கை வரலாறும்" சிந்தனைச் சோலைக்கு அணியாக அமைந்தன; மரபுவழிக் கல்வி முதல்வர்களின் அங்கீகரமாகவும் அமைந்தன.

1960ஆம் ஆண்டு பொன் விழாவின்போது இடம்பெற்ற சிந்தனைச்சோலை வெளியீட்டு விழாவில் அப்போது தினகரன் ஆசிரியராக இருந்த பேராசிரியர், கலாநிதி க. கைலசபதி கலந்து கொண்டமை பாவலர் புகழ் நிலைபெற்று வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. "ஈழத் தமிழ் தேசிய இலக்கியம்" என்ற உணர்வைக் கோட்பாடாக்கி, அதற்குரிய முன்னோடிகளை இனங்கண்டு முதன்மைப்படுத்த வேண்டுமென்ற தேடலில் ஈடுபட்டிருந்த (பேராசிரியர்)



படிப்பகம்

www.padippakam.com



கைலாசபதி வெளியீட்டு விழாவில் பாவலரை ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியாக இனங்கண்டு அறிமுகப்படுத்தினார். (இப் பேச்சுத் தினகரனில் கட்டுரையாக வெளிவந்ததாகத் தெரிகிறது. கிடைக்கவில்லை.)

மேலே குறிப்பிட்ட இந்த மூன்று நிகழ்ச்சிகளும் மகாஜனக் கல்லூரி நிறுவகரை மீண்டும் பாவலராக அறிமுகப்படுத்த உதவின. இந்த எழுச்சியின் பயனாகப் பாவலரையும் பாரதியாரையும் ஒப்பிட்டெழுதும் முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ("பாவலர் துரையப்பாபிள்ளை" மயிலங்கூடலூர் பி.நடராசன், தினகரன், கொழும்பு, 24.06.1970).

1972ஆம் ஆண்டு பாவலர் நூற்றாண்டு விழாவை விரிவாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. சிலை நிறுவுதல், மலர் வெளியிடுதல், பாவலர் மறைந்த தினத்திற்கும் பிறந்த தினத்திற்கும் இடையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துதல் எனத் திட்டமிடப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவர் ஆ.சிவநேசச்செல்வன் தலைமையில் நூற்றாண்டு விழா மலர்க்குழு அமைக்கப்பட்டது. (பேராசிரியர்) கைலாசபதி நூற்றாண்டு மலரைத் திறம்பட உருவாக்க வழிகாட்டியாக அமைந்தார். பாவலரைச் சமகாலப் பின்னணியில் விரிவாக ஆராயும் பணியை அவர் தமது ஆராச்சி மாணவரான திரு.த.வேலாயுத பிள்ளைக்கு (கொழும்பு வளாகம்) வழங்கினார். மலரில் பத்தொன்பது பக்கங்களில் அமைந்த அந்த ஆய்வேடு பாவலரைத் தமிழ்த் தேசிய சமூகத் தலைவராக இனங்காட்டுகிறது. பாவலரை நவீன ஈழத்துத் தமிழ்க் கவிதையின் முன்னோடியாகவும் பாரதியின் முன்னோடியாகவும் காட்டும் (கலாநிதி) செ.வேலாயுதபிள்ளையின் கட்டுரையும் இம்மலரில் வியந்து குறிப்பிடத்தக்கதாகும். மலரின் முதலாம் பகுதியில் இடம்பெற்ற பாவலர் பற்றிய பத்தொன்பது கட்டுரைகளுட் பெரும்பாலானவை இவற்றுள் ஒன்றையோ இரண்டையுமோ வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன. (கலாநிதி) செ.வேலாயுதபிள்ளை அவர்களின் கருத்து இங்கு நினைவுகூரத்தக்கது.

"..... அன்றிருந்த தமிழ் நாட்டுச் சூழ்நிலையே கவிஞர் பாரதியாரை உருவாக்கியது. அந்தச் சூழ்நிலை பெரும்பாலும் நமது நாட்டுக்கும் பொருந்தும். அத்தகைய ஒரு சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட துரையப்பாபிள்ளை அவர்களின் கவியுள்ளம் பாரதியாருடைய கவியுள்ளமே போன்றிருந்தது. ஆண்டில் மூத்தவராகிய துரையப்பாபிள்ளை அவர்கள் பாரதியாருக்கு முன்னோடியாய் விளங்கினார். அவரை இலங்கையராகிய நாம் இக்கால ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி என்றும் நவீனத்துவத்தின் விடிவெள்ளியென்றும் ஐயமின்றிக் கூறலாம்". (நூற்றாண்டு மலர், ப. 65).

இன்று ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வரலாற்றை எழுதுவோர் பாவலரோடு தொடங்குவது மரபாகிவிட்டது. இதற்கு இம்மலரில் இடம் பெற்ற ஆய்வுக்கட்டுரைகளே ஆதாரமாக அமைந்துள்ளன.

பாரதி நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி என்று கொள்ளும் தமிழகத்திலே பாரதி மரபு ஒன்று நிலைத்துள்ளது என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. இத்தகைய ஒரு மரபு ஈழத்தில் பாவலருக்கு உண்டா? இவ்வினாவுக்கும் ஆய்வாளர்கள் "ஆம்" என விடை தந்துள்ளனர். (கலாநிதி) கவிஞர் எம்.ஏ.நுஃமான் கூறும் கருத்து (இவர்கள் சிறுகதைத் தொகுதி அணிந்துரை, மகாஜனக் கல்லூரி, 1981, ப. 1) இங்கு எடுத்துக் காட்டத்தக்கது.

"மகாஜனக் கல்லூரிக்கு வயது எழுபதாகிவிட்டது (1981). கடந்த எழுபதாண்டுகால ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே இக்கல்லூரியின் பங்களிப்பு கணிசமானது என்பதை ஈழத்து இலக்கியத்துக்கும் இக்கல்லூரிக்கும் இடையேயுள்ள தொடர்பை அறிந்தோர் அறிவர். மோனைத் தொடையில் சொல்வதானால் பாவலர் துரையப்பாபிள்ளை முதல் இன்றைய பாலசூரியன் வரை (1993இல் கவிதைப் போட்டியில் கவிஞர் சின்னப்பா நினைவு முதற் பரிசு பெற்ற மு.சதீஷ் பாலமுருகன் வரை என நீட்டலாம்-கட்டுரையாளர்). இத்தொடர்பு தொடர்ந்து வந்துள்ளது. இவ்வகையில் இந்த நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வரலாற்றின் வெவ்வேறு வளர்ச்சிப்படிகளை மகாஜனக் கல்லூரியின் இலக்கிய பாரம்பரியத்திலிருந்தே நம்மால் இனங்காணமுடியும் எனலாம்... 1940களில் ஈழத்து இலக்கிய உலகிற்கு மகாஜனக்கல்லூரி "ஈன்று புறந்தவர்களான" அ.செ.முருகானந்தன், மஹாகவி அ.ந.கந்தசாமி, செ.கதிரேசர்பிள்ளை முதலியோர் மூலம் ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றிலே மகாஜனக் கல்லூரியின் பெயர் அழியாது இடம்பெற்றுவிட்டது... ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பல பிரதான பண்புகளைத் தோற்றுவித்து வளர்த்தெடுத்தவர் என்ற பெருமை முதன்மையாக மஹாகவிக்கே உரியது. ஈழத்தில் மட்டுமின்றி, தமிழகம் உட்பட நவீன தமிழ்க் கவிதை வரலாற்றிலே மஹாகவி தானே ஒரு சகாப்தமாகின்றார்".

மகாஜனாவின் இக்கவிதைப் பாரம்பரியம் எவ்வாறு உருவானது? மகாஜனா உருவாக்கிய கவிஞர்கள் என்ற இப்பயிர்கள் பாவலர் பண்படுத்திய நிலத்திலே முளைத்து பாரதி என்ற கதிரவன் நல்கிய ஒளியையும் நீரையும் ஊட்டச் சத்துக்களாகப் பெற்றுத் தனித்துவமாக வளர்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய ஈழத்துக்கேயுரிய தனித்துவமான பண்புகளே நவீன தமிழ்க் கவிதையில் ஈழத்துக் கவிஞர்கள் கூர்ப்பு ஏற்படுத்தக் காலாக அமைந்தது. கவிஞரும் விமர்சகருமான சண்முகம் சிவலிங்கத்தின் கூற்று (கோடை, "மஹாகவியும் தமிழ்க் கவிதையும்", கல்முனை, 1970, ப. 72). இப்போக்குக்கு விளக்கமாக அமைகிறது.

"மஹாகவி ஒரு புதிய சந்ததியை விருத்தியாக்கும் ஓர் காலகட்டம் ஆகிறார். நாம் இன்னும் பாரதியுகத்தில் இருக்கிறோம் என்று சொல்வது தவறு. பாரதி பரம்பரையின் இறுதித் தளிர்கள் பழுத்துக் கொண்டிருக்கின்றன. பாரதி ஒரு யுகசந்தி என்பது மெய்யே. ஆனால், அந்த யுகசந்தி பிரிந்துவிட்டது. அதன் ஒரு கிளை பிச்சமூர்த்தி என்றால் அதன் மறுகிளை மஹாகவியே. பாரதி வளர்த்த சில கவிதைப் பண்புகளின் தோல்வியே பிச்சமூர்த்தி என்றால் அத்தோல்வி நிகழாமல் அதனை இன்னொரு கட்டத்துக்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி எனலாம்".

பாவலர் ஈழத்தின் நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இந்த நிலையில் பாவலரின் ஆக்கங்கள் அனைவர்க்கும் கிடைக்கவேண்டும். இதற்கு ஏற்றவகையில் சிந்தனைச் சோலையின் புதிய பதிப்பு சிறந்த பதிப்பகம் ஒன்றினூடாக வெளிவரவேண்டும். பாவலர் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு மூலங்களிற் பரந்து கிடக்கின்றன. அவற்றை ஒரே தொகுப்பாக்கி வெளியிடவேண்டும். பாவலரின் இதுவரை வெளிவராத ஆக்கங்களை இனங்கண்டு தொகுத்து வெளியிடுவதும் அவசியமாகும்.

பாவலரையும் பாரதியையும் ஒப்பியல் முறையில் ஆராய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி பேராசிரியர் கைலாசபதி அடிக்கடி பேசியும் எழுதியும் வந்துள்ளார். வேறு பலரும் அக்கருத்தை வெளியிட்டுள்ளனர். (கலாநிதி) நா. சுப்பிரமணியன் இருவரையும் ஒப்பிட்டு பாவலர் நினைவுப்பேருரையை நிகழ்த்தியுள்ளார். (**பாவலரும் பாரதியும்**, நா. சுப்பிரமணியன், எம். ஏ, பாவலர் நினைவுப் பேருரை-4, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, 24. 06. 1982). பாவலரையும் பாரதியைப்போல் மஹாகவி என்ற தரத்துக்கு உயர்துவதல்ல இந்த ஆய்வின் நோக்கம்.

"பாரதி பாவலர் இருவரையும் ஒப்பிடுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி இரு தனி மனிதர்களின் கவித்துவம் தொடர்பான ஒப்பீடாக மட்டுமின்றி, நவீன தமிழிலக்கியத்தில் தமிழகம், ஈழம் இரண்டினது திசை வழிகளை இனங்காட்டும் ஆய்வாகவும் அமையவேண்டியது இன்றைய வரலாற்றுத் தேவையாகிறது". (மேற்படி ப. 5).

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு ஆய்வில் (M. Phil. Ph. D) ஈடுபடும் ஆற்றல் மிக்க ஒருவரைக் கண்டறிந்து "பாவலரும் பாரதியும்" என்ற ஆய்வில் ஈடுபடுத்தும் பொறுப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு அளித்து, புலமைப்பரிசிலாக ஆய்வுநிதி வழங்க ஏற்பாடு செய்யலாம். பின்னர் ஆய்வேட்டை வெளியிடவும் ஏற்பாடு செய்யலாம்.

பாவலரின் எழுபத்தைந்தாவது மறைந்த தினம் (24. 06. 2004), கல்லூரியின் நூற்றாண்டு (2010) என்பவற்றை நோக்கிய செயல் திட்டங்களாக இவற்றை வகுத்துக் கல்லூரிச் சமூகம் நடைமுறைப்படுத்த முற்படவேண்டும். வெளிநாடுகளிலுள்ள கல்லூரியின் பழைய மாணவர்கள் இத் திட்டங்களுக்கான நிதியை வழங்க முன்வரவேண்டும். கல்லூரி நிர்வாகமும் பழைய மாணவர் சங்கமும் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஏற்கவேண்டும்.

இத்திட்டத்திற்கான நிதியமொன்றை ஏற்படுத்தி வெளியீடுகளுக்கான முற்பணத்தை வழங்கவேண்டும். விற்பனை மூலம் வரும் பணத்தையும் நிதியத்திலுள்ள பணத்தையும் கல்லூரியின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தவேண்டும்.

பாவலராக அறிமுகமாகிய துரையப்பாபிள்ளை இன்று ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி என இனங்கண்டு போற்றப்படுகிறார். இது மகாஜனாவின் நிறுவகர் என்பதால் அவருக்குக் கிடைத்த பரிசு அன்று. அவரது இலக்கியப் பணிகள் மூலமும் இலக்கியக் கோட்பாடு மூலமும் சமூக உணர்வு மூலமும் கிடைத்த பெருமை. அவருக்கு உரிய பெருமை அவருக்கு தரப்பட, மகாஜன சமூகம் ஈழத்து அறிஞர்களை ஒன்றுதிரட்டி வழிசமைத்தது. இப்பெருமை நிலைத்து வலிமைபெறத் தொடர்ந்தும் ஆக்கபூர்வமாக உழைப்பது "மகாஜனன்" களின் கடமையாகும்.

-மயிலங்கூடலூர் பி. நடராசன்-



படிப்பகம்

www.padippakam.com



## 14.03.93 ல் எமது கலாச்சாரப் பிரிவினால் நடாத்தப்பட்ட "நாடகமாலை" நிகழ்வு.

### கண்டம் மாறியவர்கள்:

புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்ட நாடகம்.
கதை வசனம்: மா்வை நித்தியானந்தன்.
இதில், பி.லோகதாஸ், இரா.குணபாலன், ஸ்ரீகாந்தமுா்த்தி செல்வி.-
ஹேமா சிவலிங்கம் ஆகியோர் நடித்திருந்தனர்.
நெறியாள்கை: மனோ.



படத்தில் திரு.பி.லோகதாஸ், திரு.இரா.குணபாலன், செல்வி.ஹேமா சிவலிங்கம், திரு.ஸ்ரீகாந்தமூர்த்தி



### நடன நிகழ்ச்சி

செல்வி. அர்சனா கருணைவேல்.
செல்வி. துர்காசினி சிவலிங்கம்,
தயாரித்தளித்தவர்: திருமதி. சிவலிங்கம்.




படிப்பகம்

www.padippakam.com



## நாங்கள் திருந்தமாட்டம்.

ஐரோப்பிய நாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் எம்மவர்களின் ஒரு பகுதி யதார்த்த வாழ்வைப் பதிவு செய்கிறது.
கதைவசனம்: வண்ணைதெய்வம்.
இதில், சி. கணேசலிங்கம், சி. ராதாகிருஷ்ணன், திருமதி. எழில் தமிழ் வளவன், வி. கரிகரன், யோ. சிவலிங்கம், சி. நந்தகுமார் ஆகியோர் நடித்திருந்தனர்.
நெறியாள்கை: கணேசலிங்கம்.



படத்தில் திருமதி. எழில் தமிழ்வளவன், திரு. வி. கரிகரன்.
சி. கணேசலிங்கம்



திரு. யோ. சிவலிங்கம், திரு. சி. ராதாகிருஷ்ணன். திரு. சி. நந்தகுமார்.



படிப்பகம்

www.padippakam.com



## "அம்மா அம்மா...."

இந்நாடகம் போர்க்காலச் சூழலில் அவதியுறும் ஒரு குடும்பமொன்றின் இராப்பொழுது கழிவதினைச் சித்தரிக்கிறது.

பார்வையாளர்களின் மிகுந்த பாராட்டுதலைப் பெற்றுக்கொண்ட நாடகம் இது.
கதை வசனம்: மாவை நித்தியானந்தன்
இதில், திருமதி. நீலாயதாட்ஷி சிவசுப்பிரமணியம், திருமதி. லீனா ஜெயக்குமார், திரு. சாம்சன் ஆகியோர் நடித்தனர்.
நெறியாள்கை: மனோ



திருமதி. நீலாயதாட்ஷி சிவசுப்பிரமணியம், திருமதி. லீனா ஜெயக்குமார், திரு. சாம்சன்



"நாடகமாலை" யின் போது பழையமாணவர்கள் கல்லூரிக்கீதம் இசைக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com





எமது உதைபந்தாட்ட அணியினர்
அதிபர். திரு. பொ. கனகசபாபதி அவர்களுடன்



எமது உதைபந்தாட்ட அணியினரும்
லண்டன் அணியினரும்




படிப்பகம்

www.padippakam.com



## அமரர். தெ. து. ஜெயரத்தினம் நினைவு உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி
1993



பிரதமவிருந்தினர் கல்லூரிக்கொடியை ஏற்றிவைக்கிறார்.



சுற்றுப்போட்டியில் 2 ம் இடத்தைப்பெற்றுக்கொண்ட சண்றைஸ் விளையாட்டுக்கழகத்தினர்.

வெற்றி பெற்ற சென்அந்தனிஸ் விளையாட்டுக்கழகத்தினர்





படிப்பகம்

www.padippakam.com






1 வது ஆண்டு நிறைவு விழவின்போது
சக பழையமாணவர் சங்கப்பிரதிநிதிகள்



நாடகமாலே பார்வையாளர்களில் ஒருபகுதியினர்



படிப்பகம்

www.padippakam.com



இம்மலர் சிறப்புற
ஆதரவு நல்கிய
அனைத்து
வர்த்தக ஸ்தாபனங்களுக்கும்,
நண்பர்களுக்கும்
எமது
உளமார்ந்த நன்றிகள்.



படிப்பகம்

www.padippakam.com





பவுண்
நகைகள்
அன்பளிப்புப்பொருட்கள்

உங்களுக்குத்
தேவையான
சகல
தமிழ்
புத்தகங்களுடன்

அச்சகம் புத்தகசாலை

Mo : La Chapelle / Gare du Nord



தமிழாலயம்

70, Rue Louis Blanc

75010 PARIS.

Tel : 42 05 88 67

Fax : 42 05 83 04



ASIA Enterprise

ஏசியா என்ரபிறைஸ்

நவநாகரீக நங்கையர் விரும்பும் ஆடைகள்,
வீட்டுப் பாவனைப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்
மற்றும்
வாரந்தோறும் இலங்கை, இந்திய மரக்கறி வகைகள்
நண்டு, இறால், சுறா, விளை மீன் போன்ற
கடல் உணவு வகைகள்

இலங்கை இந்திய வியட்நாமிய
மளிகைப் பொருட்கள்
தமிழ் சிங்கள இந்தி வீடியோ, ஓடியோப் பிரதிகள்
இனிய கீதங்கள் அடங்கிய 'கொம்பக்ற் டிஸ்குகள்'
வார, மாத தமிழ் சஞ்சிகைகள் - பத்திரிகைகள்
யாவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
ஏசியாவின் விசேட தயாரிப்பான
மிளகாய்த் தூள், கோப்பித் தூள், அரிசி மா,
ஊறுகாய் வகைகளை வாங்கி அதன் சுவையை
அனுபவியுங்கள்.

230, RUE DE FG. ST. DENIS,

75010 PARIS.

Mo LA CHAPELLE ou GARE DU NORD

TEL 40 34 87 46

FAX 42 05 04 04

Asia
Enterprise

Tél : 40 34 87 46

Fax : 42 05 04 04




படிப்பகம்

www.padippakam.com






# பிரெஞ்சு வகுப்புகள்




# கம்பியூட்டர் வகுப்புகள்

DEVIENS CE QUE TU ES

SOFT

## சனி ஞாயிறு கிழமைகளில்

சனி ஞாயிறு கிழமைகளில்

காலை 9.30 மணி - பி.ப. 12.00 மணி
பி.ப. 1.00 மணி - பி.ப 3.30 மணி
மாலை 5.00 மணி - மாலை 7.30 மணி

திங்கள் - வெள்ளி
மாலை 4.00 மணி - மாலை 6.30 மணி

**ஆசிரியர்கள் :**
**லெனி**
**வாசுதேவன்**
**ராஜ்குமார்**





## தமிழ் மொழி விளக்கத்துடன் AUTO ECOLE CODE வகுப்புகள்

## தமிழர் கல்வி ஆலோசனைச் சேவை - பிரான்ஸ்

அனைத்து தொடர்புகட்கும்
சனி, ஞாயிறு கிழமைகளில் பி.ப. 1.00மணி முதல் 7.00மணி வை

CENTRE PAROISIEL DE NOTRE DAME DE BERCY
11, RUE DE LA NATIVITE, 75012 PARIS
(No.1 rue de Bercy + No.5 rue de Dijon சந்திக்கு அருகில்)
Mo: BERCY - DOGOMMIER -DAUMESNIL







படிப்பகம்

www.padippakam.com




## அருணா ஸ்டோர்ஸ்

உங்களுக்குத்தேவையான
எல்லாவிதமான மளிகைப் பொருட்கள்,
அரிசிவகைகள், பச்சைக்காய்கறிகள்,
தேங்காய் இவைகளை
மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும்
சுவை மிகுந்த
உணவுவகைகளை (FAST FOODS)
எடுத்துச் செல்லவும்
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் !
இத்துடன்
இறுல், மீன், நண்டு போன்ற
மீன்வகைகளும் கிடைக்கும்.
எம்மிடம் வார, மாத இதழ்கள், பத்திரிகைகள்
தவறாது கிடைக்கும் என்பதையும்
தெரிவிக்கின்றோம்.

**AROUNA STORES**
191, Rue du Fg. Saint Denis,
75010 Paris.
M°: La Chapelle/ Gare du Nord

**TEL : 40 37 18 87**

**NATHAN STORS**
201, Rue du Fg. Saint Denis,
75010 Paris.
*M°: La Chapelle/ Gare du Nord*

**TEL : 46 07 58 98**

N ATHAN

## நாதன் ஸ்டோர்ஸ்

பாரிஸ் மாநகரில்
உங்களுக்குத்தேவையான
இந்திய, இலங்கை. வியட்நாமிய மளிகைப்பொருட்கள்
முடிஉடைய தேங்காய்
விளைமீன், நீளக்கால் நண்டு, சுறுமீன், இறுல்,
கணவாய்
மற்றும் மஞ்சள் அரிசி, பசுமதி அரிசி வகைகள்,
காய்கறிகள், இறுல், சுறுமீன், நீளக்கால் நண்டுவகைகள்
மிக மலிவான விலையில் வாங்க
சிறந்த இடம்
இலங்கையின் அனைத்து சோடா வகைகளும் கிடைக்கும்.




படிப்பகம்

www.padippakam.com




# காயத்திரி

# GAYATHRY S.A.R.L

**லீலா தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள்**

Horlicks ஏக விநியோகிஸ்தர்கள்

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும்
தருவிக்கப்பட்ட தரமான உணவுப் பொருட்கள்,
'கொம்பக் டிஸ்குகள்', தமிழ், சிங்கள ஓடியோ - வீடியோ
கசட்டுக்கள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.
மற்றும்
இலங்கை - இந்திய காய்கறி வகைகள்,
திங்கள், வெள்ளி தினங்களில் மீன், நண்டு, சுறா, இறால்
போன்ற கடல் உணவுப் பொருட்களும் வாரம் தோறும்
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

**210, RUE DU FB.ST.DENIS**
**75010 - PARIS**

**Tel: 42 09 22 43 Fax: 46 07 90 34**

***Mo: La Chapelle ou Gare Du Nord***




படிப்பகம்

# SUMANKALI MALIKAI

**65, Rue Marcadet**
**75018 - Paris**
***M° : Marcadet Poissonniers***

SUMANKALI

Tel:46 06 70 63 Fax:43 84 94 49

தரமானபொருட்களை தரம்குன்றாத நிலையில் குறைந்தவிலையில் விற்பனைசெய்து குறுகியகால இடைவெளியில் மக்கள் மனதில் மங்காத இடத்தைப்பெற்ற

**சுமங்கலி மளிகை**

ஸ்தாபனம்

Produits Exotiques Specialites De L'Inde, Sri Lanka
Pakistan, Vietnam, Ile Maurice, et Afrique

பாரிஸில் 10 வருட கால
அனுபவம் மிக்க
Video Rajan
சுமங்கலியில்..
ஓடியோ, விடியோ, கொம்பக்ற் டிஸ்க்ஸ்.
தமிழ் வார, மாத பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் அனைத்திற்கும்..

**10 %**

ஒரு வருட நிறைவை முன்னிட்டு
இலங்கை இந்திய மளிகைப் பொருட்கள்
அனைத்தும்
10. 10. 1993 முதல் 20. 10. 1993 வரை
10 வீத கழிவில்
பெற்றுக்கொள்ளலாம்.

Mo Marcadet Poissonniers முன்பக்க வாசல் வழியாக
பரிசுத்தமான அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள வாடிக்கையாளர்
களுக்குக் கட்டணமற்ற பொருள் விநியோக சேவை உண்டு

அனுபவம் மிக்க
வல்லுனர்களைக் கொண்டு
உங்களின் தெரிவுக்கேற்ப
ஸ்ரீறியோ(Sterio) முறையில்
ஓடியோ கசட்
24 மணித்தியாலத்தில்
ஒலிப்பதிவு
செய்து கொள்ள
எம்மை
அணுகுங்கள் !

**சசி.. சசி... சசி.... வீடியோ விஷன்**

புதிய முகவரியில் - புதிய சேவைகளுடன்
அன்றைய இன்றைய ஒறிஜினல் விடியோப் படங்கள்.
அன்றும் இன்றும் உங்களை ஆவலுடன் கேட்கத் தூண்டும்
உங்கள் அபிமானப் பாடகர்களின் பாடல்கள் அடங்கிய
ஓடியோ, விடியோ, கொம்பக்ற் டிஸ்குகள் (C.D.)

VIDEO VISION
PARIS

**SHAASI VIDEO VISION**

தமிழ்
வார - மாத பத்திரிகைகள்
சஞ்சிகைகள்

தொம்சன்
ஓடியோ, வீடியோ
பிரதிகள்

21, BD.DE LA CHAPELLE
75010 - PARIS
Tel:
42 09 18 88
Mo: La Chapelle

www.padippakam.com



# நொயெல் பஜார்



அன்பளிப்புப் பொருட்களா !
வீட்டு அலங்காரப் பொருட்களா !!

மற்றும்,
கைக்கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள்,
இலெக்ரோனிக் சாதனங்கள்,
பண்டிகைக்கால சோடனைப்பொருட்கள்,
பெண்கள் அழகுசாதனப்பொருட்கள்
அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள
நாடுங்கள் !

**NOEL BAZZARE**
84, Rue Clignancourt
75018 Pris.
(Mo : Marcadet Poissonniers)
TEL : 42 52 21 91 / 42 51 19 66 / 42 52 85 66

இத்துடன் FAX சேவையும்
உடனுக்குடன்
செய்து கொடுக்கப்படும்.

# SAKTHI

JEWELLERY S.A.R.L
189, Rue du Fg. St - Denis
75010 Paris.
M° : La Chapelle ou Gare du Nord

**Tél : 40 37 26 37**
Fax : 30 73 47 73



- சகல விதமான வீடியோ பிரதிகள்
- தொம்சன் வீடியோ விநியோகஸ்தர்கள்
- ராஜா ஓடியோ, CD விநியோகஸ்தர்கள்
- பழைய - புதிய திரைப்படங்கள் வீடியோ பிரதியில்
- பரிசுப் பொருட்கள்
- சுவர் மணிக்கூடுகள், கைக் கடிகாரங்கள்
- பட்டு வேட்டிகள், பட்டுத் துணிகள்
- யானைமார்க் குளிர்பானங்கள், சிறந்த மிளகாய்த் தூள், அரிசி மா, ஒடியல் மா, கழு
- இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்கள்
- கல்யாண சோடனை, முடிமயிர், கொண்டைகள் தலைச் சோடனை, கூறைப் பிடவை

Tel: 42 09 76 14
Fax: 42 09 78 24

**SAKTHI EMPORIUM**
193, Rue du Fg. Sainte - Denis
75010 PARIS


சக்தி
15, 21 Rue Labat
75018 PARIS

Tel: 42 52 53 01 & 42 54 53 01
Fax: 30 73 47 73

**SAKTHI VIDEO**
15, 21 Rue Labat
75018 PARIS



படிப்பகம்




VANASPATHY TEXTILE
IMPORT & EXPORT



189, Rue de Faubourg Saint-Denis
75010 Paris.
M°: GARE DE NORD OU LA CHAPELLE

கூறைப்புடவைகள், சகல வித பட்டுப்புடவைகள்,
பனாறஸ், காஞ்சிபுரம், மைசூர் சில்க்,
நைலெக்ஸ் வகைகள், பஞ்சாபி வகைகள்,
பட்டு வேட்டி சால்வை, குருதா,
சிறுவர் சிறுமியர் உடுப்பு வகைகள்

அழகுசாதனப் பொருட்கள், கைக்கடிகாரங்கள்,
எவர் சில்வர்ப் பொருட்கள், அலங்கார
அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள..

வனஸ்பதி ரெக்ஸ் ரைல்ஸ்

உங்கள் விருப்பப்படி, பஞ்சாபி, பிளவுஸ்,
சிறுவர் சிறுமியர் உடுப்புக்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ற வகையில் குறித்ததவணையில்
தைத்தும் கொடுக்கின்றோம்.

இந்திய வாத்தியக்கருவிகள் மலிந்தவிலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

*Tél : 40 36 29 38*
*Fax : 40 36 67 92*

# PLEAWS DE PARIS

## பிளவுஸ்

யாழ் நகரில் பிரசித்தி பெற்ற உங்கள் அபிமான பிளவுஸ்
இப்போது பாரிஸ் நகரிலும் விஷேட முறையில்
சுடச்சுட உணவு வகைகள் தயாரித்து அளிக்கிறார்கள்.

பிறந்தநாள் விழாக்கள் மற்றும் பண்டிகைகளுக்கு
பலகார வகைகள், விசேட பிரியாணி, கொத்து ரொட்டி
ஓடர்களுக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

இனிய சேவை ! இனிய உணவு ! இனிய உபசரிப்பு !
நாடுங்கள் பிளவுஸ்

**9, Rue Simart, 75018 Paris.**
*M° : Marcadet Poissonniers*

Muscat, தொதல் மற்றும் தேவையான சிற்றுண்டி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
Special IceCream, சர்பத் வகைகள்

*Tél : 42 58 57 43*
*Fax : 42 57 60 06*

www.padippakam.com




# Jeevana
## Coiffure

(அகிலன் வீடியோவுக்கு அருகாமையில்)

ஆடவர், பெண்கள், சிறார்கள் அனைவருக்கும்
சிறப்பான சிகை அலங்காரம்
முடிக்குக் கலருட்டல், முடி சுருட்டுதல்
ஆகிய தேவைகட்கு

**ஜீவனா சலூான்**

203, Rue du Fg.St. Denis
75010 Paris.
**Tel : 42 05 31 42**
*M°: La Chapelle / Gare du Nord*





சுவையான தரமான வட இந்திய தென் இந்திய உணவு வகைகளை
நிறைந்த கனிவான உபசரிப்புடன் அருந்தி மகிழ்ந்திட
நீங்கள் நாட வேண்டிய இடம்

**இந்தியன் பரடைஸ்**

*சீஸ் நான், கீமா நான், பரடைஸ் நான், தாண்டுரி வகைகள்*
*மற்றும் வகை வகையான புறியாணிகளை உண்டு உளம் மகிழ*

**RESTAURANT PARADIS DES INDE**

SPECIALITE INDIENNE
CUISINE TRADITIONNELLE
TANDOORI Biriyani et Curry
Agneau, poulet, gambas et poisson

உங்கள் விசேஷ வைபவங்களுக்குத் தேவையான உணவு வகைகளை
ஓடருக்குச் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

சைவச் சாப்பாடு (5 மரக்கறி உட்பட)
இறைச்சிச் சாப்பாடு
புறியாணி
RICH CAKE
மற்றும் சிற்றுண்டி வகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்

* குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் கொண்டு வந்து தரப்படும்

12, RUE EUGENE SUE
75018 PARIS
Mo: Marcadet Poissonnieres
TEL: 42 23 23 10




படிப்பகம்

AULNAY SOUS BOIS ல்
ஓர் புதிய மளிகை ஸ்தாபனம்

# சிவராம்ஸ் சென்ரர்

* இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள்
* மரக்கறிவகைகள்
* மாத வார சஞ்சிகைகள்
* எவர்சில்வர் பாத்திரங்கள்
* கடல் உணவு வகைகள்
* ஓடியோ வீடியோ CD கசட்டுக்கள்

அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள..

*Sivarames Center*
7, Rue du Commandant Brasseur,
93600 Aulnay Sous Bois
*S.N.C.F. / R.E.R. : Aulnay Sous Bois*

**Tél : 48 68 56 62**

**ASIAN COIFFURE**
TEL :
**42 23 26 54**

மெத்ரோ: மாக்கத்தே பொசனியே
(BNP வங்கிக்கு அருகாமையில்)

# ஏசியன் சலூன்

இலங்கை, பிரெஞ்சு
நாகரீகத்திற்கேற்ப

கவர்ச்சிகரமான
சிகையலங்காரம் !

இத்தோடு,
உங்கள் சிகைகளுக்கு
வர்ணம் தீட்டவேண்டுமா ?

தரமான முறையில்
முடி சுருட்ட விரும்புகின்றீர்களா ?

சிறப்புப்பயிற்சியும்,
அனுபவமும் வாய்ந்த
தொழில் வல்லுனர்கள்
உங்களுக்குச்சேவையாற்ற
காத்திருக்கின்றார்கள்.

தொடர்புகட்கு..
K. சந்திரன்

**50, Rue Marcadet,**
**75018 Paris.**
*M° : Marcadet Poissonniers*



உங்கள் திருப்திக்கு,
ஈழத்து மணவறை,
ஈழத்து தலைப்பாகை,
ஈழத்து மணிமாலை,
ஈழத்து மணிமண்டப அலங்காரம்.

பாரிஸில் பத்து வருடகாலமாக
அனுபவம் வாய்ந்த புகழ் பெற்ற
வீடியோ படப்பிடிப்பாளர்கள்.

உங்களின் மனத் திருப்திக்கேற்றவாறு
நிகழ்ச்சிகளை வீடியோ படமாக்கிட
இன்றே நாடுங்கள்

**திருப்பதி வீடியோஸ்**

(மகேசன்)

**THIRUPPATHY**
4, Rue de la Fontaine,
77200 Torcy. (RER - "A")
**Tél : 60 17 74 86**




திருமண நகைகள், முத்துச்சங்கிலி,
கல் அட்டியல்கள், பதக்கங்கள்,
காப்பு வகைகள், நவரத்தின மோதிரங்கள்,
மிஷின் கட் காப்பு வகைகள்,
அதி நவீன எழுத்துப் பென்ரன்கள்

மற்றும் அனைத்து நகைகளையும்
குறித்தகாலத்தவணையில்
நம்பிக்கையுடன் செய்து கொள்ள



www.padippakam.com




பாரிஸ் நகரில் புதியதொரு
புடவை மாளிகை

SAREE LAND

முற்றிலும் வித்தியாசமானது

நீங்கள் இதுவரை பாத்திருக்காத....
நீங்கள் இதுவரை அணிந்திராத....
நீங்கள் இதுவரை அனுபவிக்காத....
அத்தனை புதிய உற்பத்திகள் அனைத்தும்
அதற்காக... சாறி லாண்ட்



புதிதான எமது சேவையை
மலிவோடு ஆரம்பித்துள்ளோம்

- கூறை வகைகள்
- காஞ்சிபுரம்
- பனாரஸ்
- காஷ்மீர்
- மைசூர் சில்க்
- நவீன டிசைன் ரெடிமேட் உடுப்புக்கள்

இன்னும் அனைத்து ரகங்களும்
அதிசயமான ஆரம்ப விலை குறைப்பில்

சாறி லாண்ட்

199 - RUE DU FOUBOURG SAINT - DENIS
75010 PARIS - FRANCE
Metro: La Chapelle ou Gare du Nord
Tel: 40 34 72 28 Fax: 40 34 72 29



ரமணன் வீடியோ பலஸ்

42 05 77 75

RVP
PARIS

* நவீன தரமான
சிறுவர் சிறுமியருக்கான
பெண்கள் ஆண்களுக்கான
ஆடைகளைத் தெரிவு
செய்து கொள்வதற்கும்
மற்றும்
* அன்பளிப்புப் பொருட்கள்
* வாசனைத் திரவியங்கள்
இவற்றுடன்
திருமண வைபவத்திற்கான
* தலைப்பாகை, தலைச்சோடனை
* பூ மாலைகள்
மற்றும் உங்கள் சகலவிதமான
* வாகனத்தேவைகள்
யாவற்றையும் இலகுவாகப்
பெற்றுக்கொள்ள.

199, Rue du Fg.St. Denis
75010 Paris.
**Tel : 42 05 77 75**
*M°: La Chapelle / Gare du Nord*

ரமணன் வீடியோ பலெஸ்




படிப்பகம்

www.padippakam.com



சிறுவர் சிறுமியருக்கான
றெடிமேட் ஆடைகள்
ஜக்கட்டுக்கள்
மங்கையர் மனம் கவரும்
றெடிமேட் ஆடைகள்
சேட்ஸ், ரீசேட்ஸ், ரவுசர்ஸ்.


எவர்சில்வர்
அன்பளிப்புப் பொருட்களும்

பழைய புதிய வீடியோ
கசட்டுக்கள் வாடகைக்கும்
புதிய பழைய
பாடல்கள் கொண்ட
CD, Audio
பெற்றுக்கொள்ளவும்

சாறிபிளவுஸ், பஞ்சாபி
வேண்டிய மாடல்களில்
தைத்தும் கொள்ளவும்..

# அம்பாள் வீடியோ & றெக்ஸ் ரைல்ஸ்

Tel : 42 09 33 81



தாலிக்கொடி, கல் அட்டியல்
பதக்கம், முத்துச்சங்கிலி,
நவரத்தின மோதிரங்கள்,
காப்பு வகைகள்,
எனாமல் மோதிரங்கள்,
எனாமல் பதித்த
எழுத்துப்பென்ரன்கள்,

மற்றும் நீங்கள்
விரும்பிய டிசைன்கள்
நவீன முறையில்
செய்து கொடுக்கப்படும்.

# அம்பாள் ஜுவலறி



Tel : 42 09 36 25

26, RUE DE PERDONNET, 75010 PARIS
Metro : La Chapelle ou Gare du Nord



படிப்பகம்

www.padippakam.com







Indian Silk Palace

Retailers
&
Wholesale

**OUR SPECIALITY:**
Wedding Sarees, All kinds of Silk and Polyester Sarees, Ready made Salwar Kameez, Kurta Pyjama and Stainless Steel Utensils.

**197 Rue du Faubourg St. Denis**
**75010 Paris, France**
**Tel: 42-09-30-88**

*Lundi Fermé*

**"YOUR SATISFACTION IS OUR SUCCESS"**

# தங்க மாளிகை

தங்கத்தை தக்கபடி செப்பனிட்டுத் தங்க நகைகளாக வழங்கும்
தங்க மாளிகை
தங்களின் விசேட ஓடர்களையும் தகுந்த நேரத்தில்
தயாரித்துத் தருகின்றனர்.
தற்கால நாகரீக டிசைன்களில் தரமான தங்கநகைகககளை தேர்வு செய்யத்
தவறாது நாடுங்கள்

THANGAMALIKAI

SOLDERIE

BIJOUTERIE

205, RUE DU FB. SAINT DENIS
75010 - PARIS
46 07 99 33
48 40 24 20

கல் அட்டியல்
கல் பதக்கம்
முத்துச்சங்கிலி
தாலிக்கொடி
தாலி வகைள்

இலங்கை
இந்தியா
சிங்கப்பூர்
கலைப்பொருட்கள்
பரிசுப்பொருட்கள்
எவர்சில்வர்
பாத்திரங்கள்

Mo: Gare du Nord
ou La Chapelle




படிப்பகம்

நம்பிக்கை ! நாணயம் !! உத்தரவாதம் !!!

# பாரிஸ் ஜூவெல்லரி

தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் செய்து கொள்வதற்கு பாரிஸில் கடந்த ஒன்பது வருடங்களாக பல வாடிக்கையாளர்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்று சிறந்து விளங்கும் தங்கநகை ஸ்தாபனம்

3, RUE SIMART
75018 PARIS.
Tel : 42 62 44 85
FAX : 42 62 44 85

Mo : Marcadet Poissonniers
Bus : 31, 85, 56



www.padippakam.com




# பிரமாண்டமான ஆரம்பம்

வர்த்தகப் பெருமக்களே! வாடிக்கையாளர்களே!!
உங்கள் நலன் கருதி!

பாரிஸ் மாநகரில் பன்னிரண்டு ஆண்டு காலமாக
மக்களின் நன்மதிப்பைப் பெற்ற

'மாலா மளிகை' ஸ்தாபனத்தாரின் மிகப் பிரமாண்டமான ஆரம்பம்

MALA

வெளிநாட்டவரே வியக்கும் வண்ணம்
பிரான்ஸ் நிறுவனங்களுக்கு இணையாக ஆரம்பமாகின்றது!

## * லாலா மொத்த விற்பனைக் களஞ்சியம் *

- தரமான இலங்கை இந்திய உற்பத்திப் பொருட்கள், தயாரிப்புப் பொருட்களை இருந்த இடத்திலிருந்தே பெற்றுக்கொள்ளவும்!
- லண்டன் மற்றும் அனைத்து நாடுகளிலிருந்தும் தருவிக்கப்படும் பொருட்களை, அந்த நாடுகளின் விலைகளைவிடவும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்!!
- வர்த்தகப் பெருமக்களே! உங்கள் நேரத்தையும் பண விரயத்தையும் குறைத்துக்கொள்ளவும்!!!
- எமது 'லாலா' தயாரிப்புக்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளவும்!!!

அனைத்துலக நாடுகளிலுமுள்ள
வர்த்தகப் பெருமக்களின் நலன் கருதி

மிக! மிக! விரைவில்
அறிமுகம் செய்து குதூகலமாக ஆரம்பமாகின்றது!



Lala products
9, rue Charles de Gaulle
Le Plessis Bouchard
FRANCE

இலங்கை - இந்திய உற்பத்திப் பொருட்கள், தயாரிப்புப் பொருட்களின்
மொத்த விற்பனைக் களஞ்சியம்

LION LAGER STOUT, LION LAGER BEER, SANDO STOUT,
KOLA CHAMPANE

ஆகியவற்றின் மொத்த இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள்

**MALA,** 22, Rue Labat, 75018 Paris
M° : Marcadet Poissonniers
**MALA,** 78, Bd. Barbes, 75018 Paris
M° : Marcadet Poissonniers
**MALA,** 71, Av. Edouard Vaillant, 93500, Pantin M°: Aubervilliers 4 Chemin
Bus: 130 - 170 - 150 - 152 Tel : 48 40 57 24
**MALA,** 2, Place Roger Salengro 95100 Garges les gonesse
Gare RER: Garges Sarcelles Tél : 39 93 93 48

**Tel: 42 62 01 23**
**Fax: 42 57 94 03**




படிப்பகம்

www.padippakam.com


அரச முத்திரை
பொறிக்கப்பட்ட
அசல் 22 கரட் தங்கநகைகளுக்கு
ஒரே ஒரு ஸ்தாபனம்

மணப் பெண்களின்
மனம் நிறைந்தவர்கள்

கோல்வ்
நகை மாளிகை

GOLF
JEWELLERY

கோல்வ்
GOLF
JEWELLERY
6 - 8, Rue de Panama
Tél : 42 51 18 74 / 42 59 22 38
Fax : 42 59 40 59




படிப்பகம்

www.padippakam.com

## கல்லூரிக் கீதம்

(ஜன கண மன.... என்ற மெட்டு)

ஜயஜய மகாஜன ஜயசுப மாதா
ஜய ஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜனா சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரையுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா

-புலவர் நா.சிவபாத சுந்தரனார்

படிப்பகம்